பறக்கும் பாவையர்

Dr. லில்லியன் ஸ்டான்லி

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Mrs. R. Nithya Calvi[illegible]

பறக்கும் பாவையர்

Dr. Mrs [illegible], M.B.B.S., D.C.H.
[illegible]

வெளியிடுவோர்
ஆசீர்வாத இளைஞர் இயக்கம்
அஞ்சல் பெட்டி 626, வேலூர் 632 006
தொலைபேசி : 0416-2242943, 2248943
hq@bymonline.org, www.bymonline.org

WINGS FOR WOMEN (TAMIL)

Copyright 1995 DR. LILIAN STANLEY

First Edition : May 1995
Second Edition : June 2007
Third Edition : March 2014

Write for price list.
These books are available in several Indian vernaculars also.

Printed at
Bapuji Printers
5 Karthan Ali Street
Woods Road
Chennai 600 002

உள்ளே...

1. பறக்கும் பாவையர் ... 5

2. திர்சாளைப்போல் அழகி ... 14

3. சண்டைக்கோழி ... 21

4. மாமியார் மகன்! ... 28

5. மாமியார் மெச்சும் மருமகள் ... 36

6. மணமுறிவு ... 42

7. தாயும் சேயும் ... 48

8. தலைவனின் மனைவி ... 59

9. முல்லைக்குத் தேர் கொடுப்போர் யார்? ... 67

10. பெண்கள், புனித்தமாவு, பரலோகம்! ... 75

1

பறக்கும் பாவையர்

"பெண்ணாகப் பிறந்தாலே" என்று சோகமாய்க் கானம் பாடிக் கொண்டிருக்கும் பாவையருக்குப் பெண்மையின் துயரங்களை விட்டு பறந்தே போய்விட ஆசைதான். சிறகுகள் இல்லையே என ஏங்குகிறீர்களா? தொடர்ந்து வாசியுங்கள்.

பாடுகள் ஏனோ பெண்ணுக்கு?

கருப்பையில் பெண் சிசுவைக் கலைத்தல், வரதட்சணை, விற்கப்படுதல், உடன்கட்டை ஏறுதல், கற்பழிப்பு, விவாகரத்து, விதவையிருப்பு, பலவீனம், பிரசவ அபாயங்கள், ஆண்களால் குட்டப்படுதல், பெண்களாலும் குட்டப்படுதல்! பெண்ணுக்கு ஏன் இத்தனை பாடு? வேதத்தில் முதல் பக்கங்களிலேயே விடை காணலாம்.

நாம் முதலில் புரிந்துகொள்ளவேண்டியது சாத்தானுக்கும் பெண்ணுக்குமுள்ள நேரிடைப் பகை. கடவுள் பாம்பைச் சபித்தபோது, "உனக்கும் பெண்ணுக்கும்... பகை உண்டாக்குவேன்" என்றார் (ஆதி 3:15). அதற்குப் பின்தான் வித்துக்கு வித்து பகை. இதனால்தான் பெண்ணென்றாலே பிசாசு சீறுகிறான்.

மரணக் கோடரி மனிதருக்கு!

பெண்ணுக்கு தண்டனை: (1) பெருக்கமான வேதனை, (2) பெருக்கமான கருத்தரிப்பு, (3) பிள்ளைப்பேற்றில் வேதனை, (4) கணவனைப் பற்றிய ஆசை, (5) கணவனின் ஆளுகை.

ஏவாள் என்றால் உயிருள்ளோருக்கெல்லாம் தாயாம். மனிதர்மேல் மரணக் கோடரியைப் போட்டவள், ஏவாள் என்று பெயர்பெற்றது எப்படி ? ஆதியாகமம் 3:19க்கும் 3:20க்கும் இடையே ஏதோ ஒன்று நடந்திருக்கவேண்டுமென நினைக்கிறேன். ஏவாள் மனம் வருந்தினாள்! 20ஆம் வசனத்தில் ஆதாம் அவளை மன்னித்து அவளுக்கு ஏவாள் என்று பெயரிட்டான். 21ஆம் வசனத்தில் தேவன் அவளை மன்னித்து உடுத்துவித்தார்.

தேவன் ஒரு மிருகத்தைக் கொன்று அவளைத் தோல் உடையினால் உடுத்துவித்தபோது கண்ணீர் கொட்டியிருப்பாள். அன்றுதான் மரண வேதனையைப் பார்த்தாளோ? தன்னால் மனிதர்மேல் விழுந்த கொடூரத்தைக் கண்டாளோ? தன் மரணப் பாடுகளையும் தூரத்தில் கண்டாள். மனுக்குலத்தை இரட்சிப்பினால் உடுத்துவிக்கப்போகும் தன் வித்தாகிய மேசியாவின் துடிப்பை அம்மிருகத்தின் துடிப்பில் கண்டிருப்பாள். சாத்தானின் தலையை நசுக்கக்கூடியதோர் வித்தைப் பெற்றெடுக்கும் பெரும் பணியைச் சிரமேற்கொண்டு சவாலைச் சந்திக்க எழுந்து நின்றாள்.

சாத்தானுக்கு Goodbye!

நல்ல மாட்டிற்கு ஒரே சூடு. அமைதியாகத் தண்டனையை ஏற்றுக் கொண்டாள். அன்றே சாத்தானுக்கு விடைகொடுத்து அனுப்பிவைத்தாள் போலும். அதற்குப்பின் அவளது வாழ்வில் அவனது வாசனையே இல்லை.

விரட்டப்பட்டதற்காக அவள் முறுமுறுக்கவில்லை. ஆண்டாண்டு காலமாக அவரையே சார்ந்துகொண்டாள். எப்படி ? அவள் கர்ப்பவதியாகி காயீனைப் பெற்று "கர்த்தரால் ஒரு மனிதனைப் பெற்றேன்" என்றாள் (4:1). நாம் முதல் பிள்ளையைப் பெற்றவுடன் அப்படிச் சொல்வோமா? கணவனைப் பார்த்துப் பூரிப்போம். அவளுக்கோ இப்போது தேவனே முதல்வர். பிரசவ வேதனையிலும் கர்த்தரைச் சபிக்கவில்லை. பின்பு ஆபேல், பின்பு சேத். "ஆதாம் சேத்தைப் பெற்றபின் எண்ணூறு வருடம் உயிரோடிருந்து குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்" (5:4). அம்மாடியோவ்! ஆதாமுக்கு குல்லாட்டம்தான், அவளுக்கோ குறுக்குவலி! ஒன்பது நூற்றாண்டுகளுக்கும் அதிகமாகப் பிள்ளைமேல் பிள்ளை! இருப்பினும் தேவனுக்கு விரோதமாகப் பேசாமல் நாவைக் கடித்துக்கொண்டாள். "எனக்கு வேண்டியதுதான்" என எண்ணியிருப்பாள். போதாதத்தற்கு, பிள்ளை பெற்றது ஏவாள்; பெயர் பெற்றதோ ஆதாம். ஏனெனில் "ஆதாம் குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்" என்கிறது வேதம்!

அடுத்த முறை அவள் ஏதோ ஆலோசனை சொல்லும்போது ஆதாம் சொல்லியிருப்பான்: "அம்மா தாயே, கொஞ்சம் சும்மாயிருக்கிறாயா?

எனக்குத் தெரியும் என்ன செய்ய வேண்டுமென்று.'' பழைய தோல்வி புதிய முகத்தோடு எள்ளி நகையாடியிருக்கும் அவளை.

மறுமுறை பாம்பைக் கண்டதும் கல்லெறிந்து "நயவஞ்சகனே" என்றிருப்பாள். அதுவோ "சத்துருவே" எனச் சீறியிருக்கும். பெண்ணும் சாத்தானும் ஜென்ம விரோதிகளாயினர்.

ஐயோ, காயீன் ஆபேலைக் கொன்றுபோட்டான். காயீனைக் கடவுள் துரத்திவிட்டார். இரு மகன்களையும் இழந்தாள். அத்தவிப்பிலும் நா காத்தாள். அவள் தேவனைக் கோபிக்கவில்லை என்று எப்படி அறிவோம்? (ஆதி 4 கால வரிசையில் இருக்குமானால்) அவள் சேத்தைப் பெற்றபோது தன் கொள்ளுப் பேரனது கொள்ளுப் பேரனையும் பார்த்துவிட்டாள். மூன்றாவது குமாரன் பிறந்தபோது "ஆபேலுக்குப் பதிலாக, தேவன் எனக்கு வேறொரு புத்திரனைக் (ஆங்கிலம்: வித்தை) கொடுத்தார் என்று சொல்லி, அவனுக்குச் சேத் என்று பேரிட்டாள்'' (4:25). தேவன் மேல் சினமில்லை. தன் வித்து தன் பகைவனின் தலையை நசுக்குவான் என்ற வாக்கை எத்தனையாய்ப் பிடித்துக்கொண்டிருந்தாள். நம்பிக்கை வைத்திருந்த இரண்டு வித்துக்களும் போன பின்பு இப்போது தேவன் வேறொரு வித்தைக் கொடுத்தார்.

சாத்தான் கிசுகிசுத்திருப்பான்: "போயும் போயும் ஒரு பழத்தைத் தின்றதற்கா உனக்கு இத்தனை தண்டனை? ச்சொ, ச்சொ, ச்சொ, பாவம். எத்தனை பிள்ளைகள், எத்தனை வலி. இத்தனை சமத்துப்பிள்ளை ஆபேலைக் கடவுள் காப்பாற்றியிருக்கக் கூடாதா? அவரது வல்லமை எங்கே? காயீனையாவது விட்டுவைத்தாரா? ஏவாளே, கடவுள் உன்னை நேசிக்கிறாரென்றா நினைக்கிறாய்? ஏதோ தேவன் சொல்லிவிட்டாரென்று அதற்கு இப்படியா ஆதாமுக்கு அடங்கிப்போவது? அவன் பேசப் பேச சும்மாயிருக்கிறாயே என்ன? ஓங்கி ஒரு போடு போடு. பயல் பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போவான்'' என்று. ஏவாளோ காதைப் பொத்திக் கொண்டாள். ஜெயித்துவிட்டாள்.

தேவன் அவளை உயர்த்தினார். ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள் மூலமாக ஜீவாதிபதி உலகிலுதித்தார்!

சகித்திருந்தால் சுகித்திருப்பாய்!

பெரியதோர் உலகை ஆளச் செல்லுமுன் தேவன் ஏவாளைச் சிறியதோர் உலகில் வைத்துப் பரீட்சித்தார். அவள் தோல்வியடைந்தாள். இன்றும்

தேவன் பெண்ணுக்கு மற்றோர் தருணம் அளிக்கிறார். அவளுக்கு ஆசியும் விடுதலையும் அருளும்படி அவளைக் குடும்பமென்னும் சிற்றுலகில் வைத்து சில கட்டளைகளையும் கொடுத்திருக்கிறார். 1 தீமோத்தேயு 2:9-15இல் பார்ப்போம். சாபத்தின் நிழல் 9-14 வசனங்களில் விழுந்தாலும் 15ஆம் வசனத்தில் ஓர் மின்னலடிக்கிறது. சுருங்கச் சொன்னால்: ஒரு பெண் அமைதியாக, அடக்கமாக தெளிந்த புத்தியோடு சாபத்தைச் சகித்திருந்தால் தேவன் அவளை அதினின்று விடுவித்து சுகித்திருக்கச் செய்வார் ("பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்").

இச்சிறு பகுதியில் அமைதலும் தெளிந்தபுத்தியும் இருமுறை வலியுறுத்தப்படுவதைக் கவனிக்க. ஆகவே இப்பகுதியை இவ்விரண்டு தலைப்புகளில் காணலாம். இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பாடாகத் தோன்றுகின்றன. தெளிந்த புத்தியுள்ளவள் அமைதியாயிருக்க மாட்டாள். ஆகவே இவ்விரண்டையும் காத்து நடக்க விரும்புபவள் கயிற்றின் மேல் நடப்பவள்போல்தான். எப்பொழுது முட்டாளைப்போல் நடிக்கவேண்டும்; எப்பொழுது தன் ஆறாமறிவை, தேவையானால் ஏழாமறிவையும்கூடச் செயல்படுத்தவேண்டும் என்று தெரிந்திருக்கவேண்டும். அமைதியாயிருக்க அறிவுள்ளவள் ஏன்? சாவி கொடுத்தால் ஆடும் பொம்மை போதுமே! கடவுள் அவளுக்கொரு மூளை கொடுத்திருக்கிறார் என்பதிலிருந்தே அவள் பேசவேண்டிய இடத்தில் பேசவேண்டும் என்பது தெளிவாகிறது அல்லவா?

1. அமைதி எனும் இடிமுழக்கம்

ஸ்வரங்களுக்கு இடையில் வரும் அமைதித் துளிகள்தான் இன்னிசைக்குக் காரணம். இந்த இன்னிசை உங்கள் இல்லத்தில் உண்டோ? உதடுகளுக்குச் சரியான வேளையில் "ஜிப்" போடக் கற்றுக்கொண்டால், பேச்சு—எதிர்பேச்சு—எதிர்பேச்சுக்கு எதிர் பேச்சு எனும் விஷ வட்டம் முறிந்து போகும். உங்கள் அமைதியின் சத்தம் கணவர் காதில் விழாமலிருக்க முடியாது. உங்கள் அமைதியினால் இடிமுழக்கமாகப் பேசலாமே.

"பெண்ணானவள் எல்லாவற்றிலும் அடக்கமுள்ளவளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள். உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ் செலுத்தவும் பெண்ணுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும்" (1 தீமோ 2:11,12). பேசாமலோ, கேள்வி கேட்காமலோ யாரும் கற்றுக்கொள்ள முடியாது என்பதறிவோம். இது ஊமையாயிருப்பதல்ல, அமைதலான ஆவி அல்லது சாந்தமாயிருந்தல் (1 பேது 3:4). அவள் படபடத்துக் கத்தக்கூடாது. கணவனை ஆட்டிப் படைப்பது பெண்ணுக்கு அழகல்ல. அமைதியாகப் பேசுங்கள், மெதுவாக கேளுங்கள்.

தினசரிப் பிரசவம்

அமைதி, அடக்கமென்பது சொல்வது சுலபம், செய்வது கடினம். பிரமாத ஐடியாக்களை கணவன் கிண்டல் செய்தால் அடக்கி வைப்பது; கணவனுக்கு வேறு கனவுகளிருந்தால் சொந்தக் கனவுகளுக்குச் சமாதிகட்டுவது; தொண்டைவரை வரும் பலவற்றைச் சொல்லாமல் விழுங்கி விடுவது; கணவனுக்குத் திருப்தியில்லை என்றால் முடங்கிக் கொள்ளாமல் முன்னேற முயற்சிப்பது; கண்ணீர் வெளியே சிந்தாமல் சிமிட்டி விட்டுக்கொள்வது; சுருக் சுருக்கென்று தைக்கும் கணவனின் வார்த்தைகளை வெளிக்குத் தெரியாமல் எடுத்துத் தைலம் போட்டுக்கொள்வது; பெற்றோருக்கும் மற்றோருக்கும் மேலாக கணவனை வைப்பது; சண்டையில் ரோஷத்தை விட்டொழிப்பது; அவர் உங்களை இறக்க இறக்க முடிந்த அளவு அவரைத் தூக்கி விடுவது; நன்றி சொல்லத் தெரியாத கணவனுக்கும் எதிலும் குற்றத்தைத் தேடிக் கண்டுபிடிக்கும் கணவனுக்கும் இரவும் பகலும் முகமலர்ச்சியோடு சேவை செய்வது; அவர் உங்களைச் சகித்துக்கொள் ளாதபோது நீங்கள் அவரைச் சகித்துக்கொள்வது; எங்காவது ஓடி விடலாமா என்று தோன்றும்போது தூங்கிவிடுவது; அதாவது கிறுக்கு பிடிப்பதுபோல் வரும்போது கிறுக்காக மறுப்பது. கீழ்ப்படிய முயற்சிப்பவளுக்குத்தான் புரியும் அது அனுதின பிரசவ வேதனை என்று! ஆனால் இப்பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள். எப்படி ?

பூனைக்கொரு காலம்

நாம் ஒதுக்கப்படும், ஏளனம் பண்ணப்படும், அடக்கிவைக்கப்படும் ஒரு காலமுண்டு. அதைக் கர்த்தருடைய கரத்திலிருந்து வருவதாக தாழ்மை யோடு ஏற்றுக்கொள்வோமானால் காற்று திசை திரும்பும். முதல் பத்தாண்டில் கணவன் மனைவியைப் பேசாமலிருக்கச் சொல்லுகிறான். அப்படியே அவள் பேசாமலிருந்தால் அடுத்த பத்தாண்டில் ஏன் பேசாமலிருக்கிறாளென வினவுகிறான். மூன்றாம் பத்தாண்டில் அவளைப் பேசச் சொல்லுகிறான். அதாவது, "நான் சொல்வதைச் செய்" என்கிறான். பின்பு, "என்னை ஏன் கேட்கிறாய் ? உனக்குதான் தெரியுமே, செய்" என்கிறான். பின்பு, "நான் என்ன செய்ய ? சொல்" என்கிறான். ஒரு பெண் அமைதியும் அடக்கமும் கற்றுக்கொள்ள மறுப்பாளானால் கணவன் தொடர்ந்து அவள் தலையில் குட்டிக் குட்டி அவளை ஆளுகிறான். அவள் சாபத்திற்கடியிலேயே வாழ்கிறாள்.

இன்றும் பேசும் பாம்பு

இன்றும் பழைய பாம்பு நெளிந்துவந்து, "அமைதியா ? கீழ்ப்படிதலா ? சரிதான், தலையில் மிளகாய் அரைத்துவிடுவான். காலம் மாறிவிட்டது.

ஆணுக்குப் பெண் சரிநிகர். அடித்துக்கேள், விடாதே, நீயென்ன இளித்தவாயா? கடவுள் பாரபட்சமுள்ளவர்" என்று காதில் ஓதும். பெண்ணே, பத்திரம்! உன்னை வஞ்சித்துவிட்டால் சாபத்திற்கடியிலேயே உன்னை வைத்துவிடலாம் என்று நன்கறிவான் சாத்தான். நான் ஏவாளாயிருந்திருந்தால் பழத்தைப் புசித்திருக்க மாட்டேன் என்கிறோம். ஆனால் எத்தனை மிடுக்காக பிசாசிற்கு செவிசாய்த்து தேவக்கட்டளையை மீறுகிறோம்.

ஏவாள் தேவக் கட்டளையைப் புரிந்துகொண்டிருந்தாளா? மீறினால் வரும் ஆபத்தை அறிந்திருந்தாளா? நிச்சயமாக! பாம்பிற்கு சுத்தமாக விளக்கினாளே. எல்லாம் தெரிந்தும் கோட்டைவிட்டாள். நாமும் செய்ய வேண்டியதை அறிந்தும், விளைவைச் சிந்திக்காமல் கீழ்படியாமலிருக்கவே தெரிந்துகொள்ளுகிறோம். வேதம் எழுதப்பட்ட 2000 ஆண்டுகட்கு முன்னரே ஒரு பெண் தன் கணவனை மதிக்க அறிந்திருந்தாள் (1 பேது 3:6). வேதம் எழுதப்பட்டு 2000 ஆண்டுகள் ஆகியும் நாம் அதைக் கற்றுக்கொள்ளவில்லை.

இறங்கினால் ஏறுவாய்!

கீழ்ப்படிய ஏன் நமக்கு மனமில்லை? தேவன் ஆணையும் பெண்ணையும் உண்டாக்கி "அவர்களுக்கு" "ஆதாம்" அல்லது "மனுஷர்" என்று பெயரிட்டார் (மூலமொழி) (ஆதி 5:2). ஆகவே ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் ஒரு மனிதன் இருக்கிறான். ஆகவேதான் அவளுக்கும் ரோஷம் வருகிறது. பேசவும் ஆளவும் துடிக்கிறாள். ஒவ்வொரு நிமிடமும் தன்னை அடக்கிக் கட்டுப்படுத்தாவிடில் அவளுக்குள்ளிருக்கும் முதலாம் ஆதாம் ஆரவாரமிடுவான். கணவனைக் கேள்வி கேட்பாள். ஆளவும் நினைப்பாள்.

கணவனே கண்கண்ட தெய்வமென்பர் தமிழர். சில இந்துப் பெண்மணிகள் கணவனைக் கும்பிடுவர். ஒரியா மொழியில் கணவன் என்ற பதத்திற்குரிய வார்த்தை சுவாமி ஆகும். கும்பிட்டவரை அவமதிக்க முடியுமா? இப்பழமொழி சரியென்று நாம் ஒத்துக்கொள்ளாவிடினும், "மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்" (எபே 5:33), "அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்படிந்திருந்தாள்" என்னும் இடங்களில் வேதம் அதற்கு நெருக்கமாக வருகிறது. ஒரு பெண் வீட்டிற்குத் தலையாயிருக்க விரும்பாமல் இறங்குவாளானால் அவள் தலைக்குக் கிரீடமாக ஏறிவிடுவாள்! (நீதி 12:4; எபே 5:23).

கணவனுடன் அன்பின் உறவைக் கட்டுவதில் கவனம் செலுத்துவது சுலபம். அதனால் அமைதியும் அடக்கமும் சுலபமாகும். இல்லையேல் பெரும் சுமையாகிவிடும்.

2. தெளிந்த புத்தி

வேதம் அமைதியாயிருக்கும் இடங்களில் அதாவது தெளிவான பதில்கள் இல்லாத பட்சத்தில்தான் தெளிந்த புத்தி தேவையாகிறது. ஆகவேதான் இது அதிமுக்கியம்.

ஒன்பதாம், பத்தாம் வசனங்களில் பெண்கள் தகுதியான உடை, நாணம், தெளிந்த புத்தி, நற்கிரியைகளினால் தங்களை அலங்கரிக்க வேண்டப் பட்டுள்ளனர். டாம்பீகமான நகைநட்டு, உடை, கூந்தல் அலங்கரிப்பைத் தவிர்க்க ஆலோசனை பெற்றுள்ளனர். எல்லாரும் எல்லா நாட்டிலுமிருக்கும் இந்நாட்களில் ஒரு பெண் எங்கு எப்படிப்பட்ட உடையை எப்போது உடுக்கவேண்டுமென யோசிக்கவேண்டும். ஓரிடத்தில் தகுதியான உடை வேறோரிடத்தில் தகுதிப்படாமலிருக்கலாம்.

பெண்ணுக்குத் தேவை அச்சம், நாணம், மடமை என்பது தமிழ்க் கலாச்சாரம். பெண்கள் முன்னேறும் இக்காலத்தில் முன்னேறுகிறேனென்று நினைத்து ஒரு பெண் நாணமென்னும் நற்குணத்தை மறந்துபோகக் கூடாது. ஒரு பெண் ஆடவனைப் போல் மாறிவிடக்கூடாது. நாணம் பெண்ணை நங்கையாக்குகிறது. பெண்ணின் இயற்கையான நாணம் அவளைப் பல பாவங்களினின்று காக்கும். அவள் ஏறிக் குதிக்கவோ எதிர்த்துப் பேசவோ மாட்டாள். உங்கள் பெண்மைத்தனம் ஒன்றைச் செய்யாதபடி உங்களைத் தயங்கச் செய்யுமானால் அதைச் செய்யாமலிருப்பது நல்லது. வேதத்தில் நாணமின்மை அழகாகக் கூறப்படவில்லை.

நற்கிரியைகள்: பேச்சைக் குறைத்து வேலையைக் கூட்டுங்கள். உங்கள் மதிப்பை சொல்லாலல்ல செயலால் காட்டுங்கள். பேசி, விரட்டிப் பிறரைக் கட்டாயப்படுத்துவதை விட்டு ஒரு பெண் 'தன் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று அமைதியாகத் தொண்டு செய்துகொண்டேயிருக்க வேண்டும். அவளது செயல்களைப் பார்ப்பவர்கள் பேசவேண்டும். பின்பு அவர்களே அவளைப் பேசக்கேட்பர் (நீதி 31:28,31).

தெளிந்த புத்தி மறுபடி இறுதி வசனத்தில் கூறப்பட்டுள்ளது. "அப்படியிருந்தும், தெளிந்த புத்தியோடு, விசுவாசத்திலும், அன்பிலும், பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால் பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்."

தெளிந்த புத்தியோடு விசுவாசம்

எந்நிலையிலும் கர்த்தர் நமக்குச் சகாயஞ்செய்வார் என்று விசுவாசிக்க வேண்டும்; ஆனால் கையைக் கட்டிக்கொண்டு வாளாவிருக்கக்கூடாது. தேவனைப் பற்றிக்கொண்டு புத்திக்குச் சரியாகத் தோன்றுவதைச் செய்ய வேண்டும்.

தெளிந்த புத்தியோடு அன்பு

நமது அன்பு பொங்கி வழிந்தோடவேண்டும்; ஆனால் அன்பைச் சாதகமாகப் பயன்படுத்தப் பார்ப்போரை அணைகட்டத் தெரியவேண்டும்.

தெளிந்த புத்தியோடு பரிசுத்தம்

நம்மை பரிசுத்தமாகக் காக்கவேண்டும்; ஆனால் பொதுவான பரி சுத்தத்தின் வரம்பை மீறி பரிசுத்தமின்மையின் மேல் சீறி விழவும் தெரிந் திருக்கவேண்டும்.

சிந்திக்காமல் செயல்படுபவள் தன் அமைதியினாலும் கீழ்ப்படிதலினாலும் பாவத்தின் ஆபத்தான வரம்பிற்கு வரக்கூடும். ஒருத்தி அமைதியே உருவாக நூற்றுக்கு நூறு கீழ்ப்படிந்திருந்தால் அதிக நற்கிரியைகள் செய்வது அரிது. ஆவியானவரின் ஏவுதல்களுக்கு உணர்வுள்ளவளாயிருந்து ஞானமாய் கணவனுக்கும் ஆவியானவருக்கும் கீழ்ப்படிபவளாயிருப்பதவசியம். இப்படிப் பட்ட புத்திசாலித்தனமான விசுவாசம், அன்பு, பரிசுத்தத்தில் நிலைகொண்டி ருந்தால் அந்த வேதனையான பயிற்சியினாலே மீட்கப்படுவாள் (1 தீமோ 2:15). அப்பொழுது அவளிலுள்ள இரண்டாம் ஆதாம் மேலெழும்பி அவளை விடுவிக்கிறார். அவள் இனி சாபத்திற்கடியில் அடைபட்டவளல்ல, கிறிஸ்து வில் சுயாதீனமுள்ளவள்.

இரண்டு சிறகுகள்

விடுகதையின் முடிவைக் கடைசிப் புத்தகம் வெளிப்படுத்துகிறது (வெளி 12). ஆங்கில வேதம் வானத்தில் ஓர் ஆச்சரியம் காணப்பட்டதாகக் கூறுகிறது. ஆம், ஓர் அற்புதப் பெண்மணி ஆணாதிக்கத்தைக் குறிக்கும் சூரியனை அணிந்தவளாக, தனக்கு ஒப்புமையான சந்திரனில் நின்று கொண்டிருந்தாள். பிள்ளைகளைக் குறிக்கும் நட்சத்திரங்கள் அவளது கிரீடத்தில் (யோசேப்பின் சொப்பனம்). குடும்பச் சூழல்! இங்கும் பிள்ளைப்பேற்றைக் குறித்து வாசிக்கிறோம் (வச 1,2). இராணியாகிவிட்டாள் பாருங்கள்.

இப்போது முழுமையும் சேர்த்துப்பார்ப்போம். தேவன் சாத்தானின் தலையை நசுக்கும்படி தமது மகனை அனுப்ப பெண்ணை வாயிலாகத் தெரிந்துகொண்டார். அவ்வேதனையை அவள் கடந்து வந்தபோது மனுக்குலம் மீட்பைப் பெற்றது. சாத்தான் தள்ளப்பட்டான். அப்போது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்போது இரட்சிப்பு ... உண்டாயிருக்கிறது. குற்றஞ்சாட்டுகிறவன் தாழ தள்ளப்பட்டுப்போனான் என்றது (வச 13). ஆனால் தேவனோ அவள் சாத்தானின் கைக்குத் தப்பிப் பறந்து போய்க் கழுகைப்போல் வாழ அவளுக்குப் பெருங்கழுகின் இரண்டு சிறகுகளை அளிக்கிறார் (யோபு 39:27-29; சங் 103:5; ஏசா 40:31; நீதி 30:19; லூக் 17:37; வெளி 4:7-9; 13:13-17).

அணைந்த தீபமாய் ஏதேனை விட்டு வெளியேறியவள், 1 தீமோத்தேயுவில் தன் அறிவாற்றலால் விடுதலை பெறுகிறாள். இறுதியில் அற்புதப் பெண்மணியாகச் சிறகடித்துப் பறக்கிறாள்.

பிடிவாதம், சுயதாபம், ஆதிக்கம், பணம் போன்ற செட்டைகள் உங்களைக் குழியில் தள்ளிவிடும். உங்கள் சிற்றுலகும் சீரழியும். ஆனால் ஏவாளைப் போல் மனம் வருந்தி தேவனது பலத்த கரத்திற்குள் அடங்கியிருந்து **அமைதி, தெளிந்த புத்தி** எனும் சிறகுகளை அடிக்கப் பழகினீர்களானால், ஏற்ற காலத்தில் அவர் உங்களை உயர்த்துவார். அப்போது "ஓடக் கால்கள் கேட்டேன், பறக்கச் செட்டைகளைக் கொடுத்தான்" என கானம் பாடும் வானம்பாடிகளாவீர்கள்!

௨

திர்சாளைப்போல் அழகி!

கீழ்ப்படி, பணிந்துபோ, விட்டுக்கொடு, அமைதியாயிரு என்றே பெண்கள் போதிக்கப்படுகின்றனர். எப்போது கீழ்ப்படியாதிருக்கவேண்டும், பேச வேண்டும், உறுதியாக நிற்கவேண்டும், விட்டுவிடக்கூடாது, பிடிவாத மாயிருக்கவேண்டும் என்ற போதனை அவர்களுக்கு இல்லை. சாலொமோனின் உன்னதப்பாட்டில் கணவன் தன் மனைவியை திர்சாளைப்போல் அழகுள்ளவளெனப் போற்றுகிறான் (6:4). ஒரு பெண் பல கோணங்களில் அழகுள்ளவள். திர்சாளைப்போல் அழகென்பது "தன்னுரிமை காத்தல்" (assertiveness) என்ற கோணத்தைக் குறிக்கிறது.

வனாந்தரத்தில் மரித்துப்போன செலோப்பியாத்தின் கடைசி மகள் திர்சாள். அவருக்கு மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள் என்ற ஐந்து குமாரத்திகள் இருந்தனர். குமாரர் இல்லை (எண் 26:33).

தாயும் ஒருவேளை மரித்திருக்கலாம். வாழ்க்கைப் புயல்களை இப்பெண்பிள்ளைகளே சமாளிக்கவேண்டியிருந்தது. அதோடு சொத்தையும் இழக்கவேண்டிய நிலை. இஸ்ரவேல் சட்டத்தின்படி அவர்களது தகப்பனது சொத்து அவரது சகோதரருக்குச் சென்றுவிடும். இப்பெண்களுக்கோ தாங்கள் ஏன் குமாரரைவிட குறைவானவர்கள் என்ற கேள்வி. நீதி கேட்கத் துணிந்தனர். மற்றவர்கள் அவர்களது துணிவைக் கேலி செய்து, இவர்களது ஆட்டமெல்லாம் ஒன்றும் பலிக்காது என எண்ணியிருப்பர்.

இதற்கு முன்னும் எத்தனையோ பேர் மகனின்றி மரித்திருப்பர். ஆனால் ஒரு மகளாவது சொத்தை உரிமை கொண்டாட நினைக்கவில்லை. அவர்கள் சிந்திக்கத் துணியாத பெருங்கூட்டம். சிந்திக்கும் ஒரு சிறு கூட்டம்

இல்லாமலில்லை. அதிகம் பாதிக்கப்பட்டவள் திர்சாளே எனலாம். ஏனெனில் மணமாகாத நான்கு மூத்த சகோதரிகள் இருந்தனர். வருவதை ஏற்றுக்கொள்வதை விட்டு, சீர்திருத்தவாதியின் துணிச்சலுடன் எதிர்நீச்சல் போட்டு, பாரம்பரியக்கட்டுகளை உடைத்தெறிந்து, தடைகளையும் தாண்டிச் சென்றாள். ஒரு பெண், அதுவும் கடைக்குட்டி, அதுவும் அநாதை. இருப்பினும் நீதி அளித்த அநீதியை ஏற்க மறுத்தாள். ஐவர் குழுவிற்கு அவளே ஆக்க சக்தியானாள். ஏனெனில், சொத்து கிட்டுமுன்பே, அவளை கனப்படுத்த அழகிய பட்டணமொன்றிற்கு அவளது பெயரைச் சூட்டினர் (யோசு 12:24). பின்பு அதுவே சமாரியா கட்டப்படுமுன் இஸ்ரவேலுக்கு தலைநகராயிற்று (1 இரா 15:33; 16:8;15,23,24).

ஆக, ஐந்து பெண்களும் ஆசரிப்புக் கூடார் வாசலிலே மோசேக்கும், ஆசாரியனாகிய எலெயாசாருக்கும், பிரபுக்களுக்கும், சபையனைத்திற்கும் முன்பாக நின்று தங்கள் நியாயத்தை எடுத்துரைத்தனர். படுதா போடும் இஸ்ரவேல் பெண்களுக்கு இது தீரச் செயலென்றே சொல்லலாம். அதுவும் பல்லாயிலுரமாண்டுகட்கு முன்! தாங்கள் சரியென்று எண்ணிய காரியத்திற்காக நிமிர்ந்து நின்றனர்.

மோசே அக்காரியத்தை தேவனிடம் எடுத்துச்சென்றான். கர்த்தர், "செலோப்பியாத்தின் குமாரத்திகள் சொல்லுகிறது சரிதான்" என்றார். திர்சாளின் சீர்திருத்தம் மத்தாப்புபோல் இஸ்ரவேலருக்குள் மின்னிச் சிதறியது. ஒருவன் குமாரரின்றி மரித்தால் அவனது சொத்து குமாரத்தி களுக்குச் சொந்தமாகுமென்ற சட்டம் இஸ்ரவேலில் அமுலானது. அதோடல்லாமல் மக்களைச் சிந்திக்கச் செய்து புதிய சட்டங்களை உருவாக்கவும் வழிவகுத்தது (எண் 271-11).

மக்கள் இப்பெண்களை தலைக்கனம் பிடித்தவர்கள் எனக் கூறியிருக்கலாம். சண்டைக்காரிகள் என்றிருக்கலாம். ஆனால் இது தேவனால் கனப்படுத்தப்பட்ட தன்னுரிமைக் காத்தலேயன்றி வேறல்ல. தன்னுரிமைக் காத்தல் என்பது நியாயம் கேட்டல், பாதுகாத்தல், உறுதியோடு கூறல் அல்லது சுய உரிமையை விட்டுக்கொடாதிருத்தல் எனப் பொருள் படும். உரிமையைக் காக்க திராணியற்ற பெண்கள் முதுகெலும்பற்றோர். தங்களுக்கே கேடுண்டாக சிலர் வேதவசனங்களைப் புரட்டினதுபோல இக்கட்டுரையையும் சிலர் திருக்கி, பெண் மக்கள் தம் பெற்றோர்/ கணவருக்குக் கீழ்ப்படியாதிருக்க இது போதித்துப் பெண்மையின் எல்லையை மீறச்செய்கிறது எனலாம். ஆனால் ஞானம் தன் பிள்ளைகளால் அறியப்படும்!

ஒரு பெண் தன்னுரிமை காக்க எத்தனிக்கும்போது அதிக எச்சரிக்கையோடும், தெளிந்த புத்தியோடும் செயல்படாவிட்டால் அவள்

சண்டைக்காரியோ, அகங்காரியோ ஆகலாம். அக்காரியத்தில் தேவ சித்தத்தைக் குறித்த தெளிவு இருக்கவேண்டும். அடுத்து, கோபப்பட்டு கெட்ட வார்த்தைகளை அள்ளிவீசி காரியத்தைச் சாதிக்க நினைப்பது சரியான இடத்திற்கு தவறான வழியில் செல்ல முயலுவதாகும்.

இப்பெண்களின் சொத்துக்காக சித்தப்பாமார் வாயூறிக்கொண்டிருந் திருப்பர். இப்பெண்மணிகள் சண்டைபோட்டிருக்கலாம். திட்டி உறவையும் முறித்துக்கொண்டிருந்திருக்கலாம். அவர்களோ அப்படியெல்லாம் செய்யாது, நேரே மோசேயிடம் சென்று எல்லார் முன்பும் தேவனது ஆமோதிப்பைப் பெற்றுவிட்டனர்.

புதிய ஏற்பாட்டில் தன்னுரிமைக் காத்தல் என்பது உலகப் பொருட் களுக்காக மட்டுமல்ல. புதிய ஏற்பாட்டில் ஒவ்வொருவரும் தேவனுக்கு முன் பொறுப்பாளிகள்; ஒவ்வொருவரும் தன்னுரிமைக் காக்க கற்க வேண்டும். ஒரு பெண் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் தன்னுரிமை காக்கவேண்டும். சில எடுத்துக்காட்டுகளைக் கீழே காணலாம்—

1. மகள்

தனக்கு விருப்பமற்றதோர் படிப்பிலோ பயிற்சியிலோ பெற்றோர் தள்ளுவதற்கு மகள்கள் இடம் கொடுக்கக்கூடாது. பள்ளிப் படிப்பை முடித்த ஒரு பெண் மேற்கொண்டு தான் என்ன படிக்கவேண்டுமென்பதைத் தெரிந்துகொள்ளத் தகுதியுள்ளவள். பெற்றோர் ஆலோசனைக் கூறலாம். கட்டாயப்படுத்தக்கூடாது.

அப்படியே இளநிலைப் பட்டதாரியான ஒரு பெண் தன்னைத் தான் புரிந்துகொள்வதோடல்லாமல், தன் வாழ்க்கைத் துணை எப்படிப்பட்டவராக இருக்கவேண்டுமென்றும் அறியத்தக்கவள். தொழிற்கல்வி பட்டதாரிகள் பலரும் கூட தாங்கள் விரும்பாத ஒருவரை மணமுடிக்க பெற்றோர் ஒழுங்கு செய்கின்றனர் என அழுகின்றனர். அப்படியானால் அதைப் பெற்றோரிடம் எடுத்துச் சொல்ல உரம் வேண்டும். விருப்பமற்ற திருமணத்தில் இணைக் கப்பட கழுத்தை நீட்டாதீர்கள்.

பார்க்கும் மாப்பிள்ளையை உங்களுக்குத் தெரியாத பட்சத்தில் சற்று அவகாசம் கேளுங்கள். அவ்வமயம் உங்கள் சாட்சியை அவருடன் பகிர்ந்து கொள்ளுங்கள். அவரது ஆன்மீக அனுபவம், விருப்பு, வெறுப்பு, பொழுது போக்கு, எதிர்கால நோக்கங்கள் இவற்றைக் குறித்து உறவாடுங்கள். நேர்முகத் தேர்வுபோல் கேட்காமல் சாதாரணமாக சந்தோஷமாகப் பேசுங்கள். அவர் உங்களுக்கேற்றவரல்ல என உணருவீர்களானால் பணிவுடன் பெற்றோரிடம் கூறுவதில் தவறில்லை. அதிக ஜெபத்தோடு செயல்படுங்கள்.

பெற்றோரிடம் கூச்சலிட்டு சண்டைபோட்டு போராடாதீர்கள். திர்சாளைப் போல அமரிக்கையான உறுதியுடன் செயல்படுங்கள். பெற்றோரிடம் தெய்வீக அன்பு காட்டுவதோடல்லாமல் உறவுமுறிவின்றி பார்த்துக்கொள்ளுங்கள். அவர்களது ஏச்சுக்களைப் பெரிதுபடுத்தாமல் அமைதியாயிருங்கள்.

மணமாகிவிட்ட பெண் மனைவியாகிவிட்டபடியால் பெற்றோருக்குக் கீழ்படியும் கேள்வியில்லை. ஆனால் பெற்றோரைக் கனம்பண்ண வேண்டும். அவர்களது ஆலோசனையைக் கேட்டாலும், பின் நீங்களே சுயமாகத் தீர்மானம் எடுக்கவேண்டும்.

2. மருமகள்

மணமானபின் நீங்களும் உங்கள் கணவனும் சுயாதீனமான தனிக்குடும்பம். பெற்றோர், மாமியார் மாமானாரும் தம் விருப்பம்போல் உங்களை ஆட்டிப்படைக்க விடாதீர்கள். எங்கே குடியிருப்பது, என்ன வேலை எடுப்பது, பணத்தை எவ்விதம் செலவழிப்பது, எத்தனை பிள்ளைகள் பெறுவது போன்றவற்றை நீங்கள் இருவருமே தீர்மானிக்க வேண்டும். கூட்டுக் குடும்பத்தில் அம்மாவே மகனுக்குக் காபி கொடுக்க வேண்டும், சாப்பாடு பரிமாறவேண்டுமென்றால் நீங்கள் முந்திக்கொள்ளவேண்டும். அதற்காக அவர்கள் ஏசினால் பேசினால் அமைதியாக அன்போடு விளக்குங்கள். அவர்களது ஆலோசனைகளையும் கட்டளைகளையும் புன்முறுவலோடு ஏற்றுக்கொண்டு நீங்கள் சரியென தீர்மானிப்பதைச் செய்யுங்கள். சில காலம் தவிப்பார்கள். மெல்லவே, தவிர்க்க முடியாத மாற்றத்தை ஏற்றுக்கொள்வார்கள்.

தன் கணவனுடன் எவ்வப்பொழுது தூங்கலாம் எனத் தீர்மானிப்பது மாமியாரே எனக் கதறும் பெண்டிரின் எண்ணிக்கை கண்டு ஆச்சரியமுறுகிறேன். பயித்தியக்காரத்தனமிது. ஒரு வீட்டில் மருமகள் தங்கள் அறை வாசலுக்குத் திரை போட்டதால் சண்டை. இன்னொருத்தி மாமியார் அவர்கள் அறை வாசலிலே தலைவைத்துத் தூங்குவார்களாம். கூட்டுக் குடும்பத்தில் பல நன்மைகள் உண்டு. ஆனால் கணவன் மனைவிக்கு ஒரு தனி அறையாவது கொடுக்கப்படவேண்டும். அவ்வறையோ அவர்கள் காரியங்களோ மாமியாருக்குப் "பொது வழியல்ல." அது தனியார் நிறுவனம்! கணவன் ஒத்துழைக்காமல் இவையெல்லாம் முடியாது. ஆனால் கணவன்மார் அநேகருக்கு முதுகெலும்பு பெலவீனம். ஆகவே உரிமை காக்கப்போய் உயிரே போய்விடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

சில வீடுகளில் கால்மிதி போலிருக்கும் மாமியார்களையும் நாம் மறந்து விடக் கூடாது. கலியாணத்திற்கு முந்தின நாள் வரை எல்லா மருமகள்களும்

மாமியார் காலில் விழுந்து சாமி கும்பிடுவதுபோல் கும்பிடுவார்கள். திருமணமாயிற்றோ இல்லையோ பிய்ந்த செருப்பை எறிவதுபோல தூக்கியெறிந்துவிடுவார்கள். வெளியே வேலை செய்யும் மருமகள் எல்லா வேலைகளையும் மாமியார்மேல் போட்டுவிட்டு அவர்களைக் கூலியில்லா வேலைக்காரி போல் நடத்தலாம். "பிள்ளைகளைப் பராமரிப்பதோ வீட்டை நடத்துவதோ உன் பொறுப்பு. நான் என்னாலான உதவி செய்கிறேன்" எனச் சொல்லிவிடுங்கள். நண்பர், பேரப்பிள்ளைகளுடன் மகிழ்ந்திருக்க வேண்டிய வயதில், வயதிற்கு மிஞ்சிய பளுவை ஏற்றுக்கொள்ள அவசியமில்லை.

3. மனைவி

கீழ்ப்படிதலுடன் எப்படித் தன்னுரிமை நாட்டுவது? மனைவிகளை எப்பொழுதுமே கீழ்ப்படியச் சொல்லிச் சொல்லி அவர்கள் எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிய வேண்டுமென நினைக்கின்றனர். அப்படித்தான் ஒரு பெண் கீழ்ப்படியப்போய் ஆண்டவர் அவளைக் கொன்றுபோட்டார் (அப் 5). கணவரெல்லாம் தேவதூதரல்ல என நினைவுபடுத்திக்கொள்வது மனைவியருக்குப் பாதுகாவல். சப்பீராள் தன்னுரிமை நாட்டியிருப்பாளானால் அனனியா அவளைத் திர்சாளைப்போல் அழகி எனப் புகழ்ந்திருப்பான். இப்படிப் பல சூழ்நிலைகளை ஒரு பெண் தன் வாழ்வில் சந்திக்க வேண்டிவரும். தவறான காரியத்திற்கு கணவன் தன்னை வளைக்க மனைவி இடங்கொடுக்கக் கூடாது.

எடுத்துக்காட்டாக, மனைவியர் பலர் வேறொருத்தியின் பின்னே போகும் கணவனை நினைத்து கண்ணீர் விட்டு ஜெபித்துக்கொண்டிருக்கின்றனரே யொழிய செய்யவேண்டியதைச் செய்வதில்லை. இச்சூழலில்தான் கணவனொருவன் தன் மனைவியை திர்சாளைப்போல் அழகியெனப் பாடுகிறான் (உன் 6:4).

சந்தேகத்திற்குரிய பெண் வீட்டிற்கு வருவதைத் தடைசெய்ய மனைவிக்கு அதிகாரமுண்டு. அவள் வீட்டிற்குச் செல்வதற்கு கணவனுக்குத் தடைவிதிக்கவும் மனைவிக்கு முழுவுரிமை உண்டு. நாம் புறாவைப்போல் கபடற்றவர்களாகவும் பாம்பைப்போல் ஞானமுள்ளவர்களாயுமிருக்க இயேசு போதித்தார். பெண்களோ வெறும் புறாக்களாகி புத்தியைப் பறிகொடுத்து விட்டனர். பெண்கள் தம் வீட்டை சர்ப்பத்தின் புத்தியோடு காக்கவேண்டும். ஆபத்தின் அறிகுறி தோன்றினால் மின்னலெனச் செயல்பட வேண்டும். அத்தனை உரமிருந்தால் இத்தனைக் கண்கள் அழுவதேன்?

சூலமித்தியின் சுந்தரக் கதையில் வேண்டாததொரு சம்பவம் நடந்து விட்டது. இரவில் படுக்கையில் கணவனைக் காணவில்லை. காலையில்

பார்க்கலாமே என்றில்லை அவள். எழுந்து புறப்பட்டாள்; நகரத்து விசாலமான வீதிகளிலே திரிந்து தேடினாள் (உன் 3:2; மத் 7:13 ஆங்கில வேதம் காண்க). கண்டுபிடித்தாள் (தன்னோடேயே சுற்றிக்கொண்டிருந்த எருச லேமின் குமாரத்திகளில் ஒருத்தியோடோ ?) கண்டவுடன் (திமிறினவனை) விடாமல் (?காலரைப்) பற்றிக்கொண்டாள்; வீட்டில் (இழுத்துக்)கொண்டு வந்து (கதறினாலும் உதறினாலும் விடுவதில்லை என்று) சேர்த்தாள் (உன் 3:1-4).

உங்கள் கணவர் சட்டபூர்வமாக உங்களுடையவர், அவ்வளவு சுலபமாக விட்டுவிடக்கூடாது. நெடுநாள் கழித்து சூலமித்தியின் கணவன் புகழு கிறான்: "என் மனைவி திர்சாளைப் போல அழகுள்ளவள். சந்திரனைப் போல குளுமையாகவும் சூரியனைப்போல தெளிவுடனும் கொடிகள் பறக்கும் படையைப் போன்ற கெடி(பிடி)யுமானவள்" (உன் 6:4,10). ஆம். நல்ல காலத்தில் நல்லவள்தான்; ஆனால் பொல்லாத காலத்தில் பொல்லாத வளாகிவிடுவாள். வெற்றிக்கொடி அவள் கையில் பறக்கிறது. தான் தோற் றதற்காகப் பரவசப்படும் கணவன்! ஒரு பெண்ணுக்கு சந்திரனைப்போல குளுமையாயிருக்கவும் தெரியவேண்டும், சூரியனைப்போல எரிக்கவும் தெரியவேண்டும்; தென்றலென வீசவும் தெரியவேண்டும், புயலாய் அடிக் கவும் தெரியவேண்டும்.

உங்கள் சூழ்நிலைக்குத் தேவையான தெய்வீக ஞானத்திற்காகவும் வழிநடத்துதலுக்காகவும் ஜெபியுங்கள். கணவனையோ அப்பெண்ணையோ அவமானப்படுத்தாதீர்கள். கணவனை மன்னித்து கூடுதல் அன்போடும் கரிசனையோடும், உணர்வோடும் உறவைத் திரும்பக் கட்டியெழுப்புங்கள்.

பிற ஆண்கள் தொந்தமாய் சிநேகிப்பதை மீறி தொல்லையாய் மாறும் போதும் ஒரு பெண் தடை விதிக்க தைரியமுள்ளவளாயிருக்கவேண்டும்.

4. தாய்

தாயை மீறுவது பிள்ளையின் சுபாவம். அதற்காகத் தாய் அலறி சபித்து தன் நற்பண்புகளை இழக்கத்தேவையில்லை. தரையில் விழுந்து கை கால்களை உதைத்து அடம்பிடிக்கும் பிள்ளையைச் சட்டை செய்யாமல் விட்டு விடுங்கள் தானாக எழுந்து வரட்டும். சட்டத்தின்படி நிற்க வேண்டும். இதனால் பல சண்டைகளைத் தவிர்க்கலாம். அம்மா சொன்னது சொன்னது தான் எனச் சீக்கிரம் புரிந்துகொள்ளுவாள் மகள். தாய் விட்டுக்கொடுத்து விட்டால் தன் பிடிவாதத்தினால் காரியத்தைச் சாதிக்கலாம் எனப் புரிந்து கொள்ளுவாள்.

பிள்ளைகளின் அடிமையாகிவிடக்கூடாது தாய். கட்டுரை வேண்டு மானால் அவர்கள் எழுதிக் கொண்டுவரட்டும். நீங்கள் மேம்படுத்திக் கொடுங்கள். ஸ்பெஷல் சாப்பாடு வேண்டுமா? அவர்கள் ஏதாவது உதவி செய்தால் சமைத்துக்கொடுங்கள். கைச்செலவிற்கு காசு வேண்டுமா? வீட்டு வேலைகளைச் செய்துதரட்டும். வாலிபரை வேலை செய்ய வைக்க முடியாத வீடுகளில் வாழ்நாள் பயிற்சிக்கு இது ஓர் எளிய முறை.

சுமார் பன்னிரண்டு வயதில் மகள் தன்னுரிமையை நிலைநாட்டத் துவங்கும்போதுதான் சிக்கலே துவங்குகிறது. இப்போதுதான் தாய் மென்மையாகத் துவங்கவேண்டும். மகளைப் பிடித்திருக்கிற இரும்புப் பிடியை மெல்லவே தளர்த்திக்கொடுத்து மெதுமெதுவாக மகள் தன்னு ரிமையைப் பெற்றுக்கொள்ள, கற்றுக்கொள்ள இடமளிக்கவேண்டும். அப்பொழுதுதான் செட்டைகளை விரித்தெழும்பும் காலத்தில் அவள் வாழ்க்கையைத் தன்னம்பிக்கையோடு சந்திக்க முடியும். தாய் தன் உரிமை யைத் தன்னிலும் அனுபவக்குறைவான மகளுக்கு விட்டுக்கொடுப்பது வேதனையான அனுபவம்தான். ஆனால் தன் மகள் (அல்லது மகன்) அனுபவசாலியாக, தைரியசாலியாக, சிந்திக்கும் சிந்தாமணியாகத் திகழ்வதல்லவோ தாயின் மகிழ்வு. அவர்களை நம்பி, மரியாதையோடு நடத்தி, வாழ்க்கையைக் குறித்த அவர்களின் நோக்கையும் மதித்து சிறுகச் சிறுகவே அவர்களுக்குச் சுயாதீனமளித்து இறுதியில் சுதந்திரப் பறவை களாகப் பறக்கவிடுவதினாலேயே அந்நோக்கை நாம் அடையலாமேயொழிய, அவர்களைக் கட்டிக்கொடுக்கும்வரை (அதாவது வேறொரு நிழலுக்கடியில் தள்ளிவிடும் வரை) நம் நிழலிலேயே வைத்துக்கொள்வதினாலல்ல.

முடிவு

திர்சாளைப்போல் சிந்தனைச் செம்மலாக சீர்திருத்தவாதியாக இருப்பது ஒரு பெண்ணுக்குச் சுலபமல்ல. திர்சாளின் வேண்டுகோளும் பலநாட்கள் சீலையில் சுற்றிப் புதைக்கப்பட்டிருந்தது. ஐவருக்கும் திருமணமானது. "போய்த் தொலையட்டும்" என விட்டிருக்கலாம். ஆனால் மறுபடியுமாக எலெயாசார், யோசுவா மற்றும் பிரபுக்களுக்கு முன்பாகச் சென்று முறை யிட்டனர். அவிக்கமுடியா அக்கினியாக எரிந்த அவர்களின் ஆவி இறுதியில் அவர்கள் கேட்டதைக் கைப்பற்றியது (எண் 36:10-12; யோசு 17:3,4).

தங்கள் மன நிர்ணயச் சிந்தனைத் துளிகளைச் சிதறிவிட்தற்காகப் பெண்கள் தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளனர். ஆனால் அவர்களே சரித்திரத்தைத் திசை திருப்பியவர்கள். திர்சாளின் அழகினால் கர்த்தர் உங்களை அலங்கரிப்பாராக!

3

சண்டைக் கோழி

நூறு வேட்டிகள் ஒன்றாயிருந்தாலும் இரண்டு சேலைகள் ஒன்றாயிராது என்பது உண்மை தோய்ந்த பழமொழி. ரெபெக்காளுக்கும் அவளது மருமக்களுக்கும், அன்னாளுக்கும் பெனின்னாளுக்கும், எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் ஓயாத சண்டை. ஏன் சண்டை போடுகிறோம்? சண்டையின்றிச் சமாதானமாக வாழ்வதெப்படி?

முதலாவதாக, சண்டை மோசமான பாவம் என்பதை நாம் உணர வேண்டும். நம்மில் பலரும் குற்றவுணர்வின்றியே சண்டைபோடுகிறாம். "மாம்சத்தின் செயல்கள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: ...பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள்... இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" (கலா 5:19,20,21).

சண்டை தேவனுடைய இராஜ்யத்திற்கு வெளியே நம்மை நிறுத்தக்கூடிய பாவம் என்று உணர்ந்திருக்கிறோமா? "குரோதத்தினாலும், பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும்... நிறைந்தவர்களுமாய் இருக்கிறார்கள்... இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்கள்" (ரோ 1:29-32).

"எத்தியோப்பியா தேசத்துப் பெண்ணை மோசே விவாகம் பண்ணியிருந்தபடியினால், மிரியாமும் ஆரோனும் அவன் விவாகம் பண்ணின எத்தியோப்பியா தேசத்துப் பெண்ணினிமித்தம் அவனுக்கு விரோதமாகப்

பேசி: கர்த்தர் மோசேயைக்கொண்டு மாத்திரம் பேசினாரோ, எங்களைக் கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள்" (எண் 12:1,2). சகோதர சகோதரிகள் சண்டையிடுவதற்கு மணியான எடுத்துக்காட்டு இது. மிரியாமின் இதயத்தைப் பொல்லாத பொறாமை கவ்விக்கொண்டிருந்தது. மோசே தலைவனாயிருந்தான். ஆனால் அவனது ஜீவனைக் காத்தது அவளல்லவோ? அவளும் முன் சென்று மக்களை நடத்தவில்லையோ? (மீகா 6:4). ஆனாலும், மோசேயின் பேர்ப்புகழை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. பெருமை, சுயநலமென்னும் குட்டிப்பிசாசுகள் ஆன்மீக மென்னும் போர்வைக்குள் ஒளிந்திருப்பதைக் காணமுடிகிறதல்லவா?

மிரியாமின் கொதிப்பிற்கு வேறொரு காரணமுமுண்டு. தன் நாத்தனாரைக் குறித்த பொறாமை. தன் சகோதரனை அவளுக்கு விட்டுவிட இன்னும் மனம் வரவில்லை. மோசேயும், தானும், ஆரோனும் மக்களை எகிப்திலிருந்து வெளியே அழைத்து வருகையில் மோசேயின் மனைவி இல்லை. இம்மூவரே கதாநாயகராயிருந்தனர். இப்பொழுது திடீரென்று தன் வாழ்க்கையின் குறுக்கே நுழையும் இவள் யார்? இனி இவளல்லவா மோசேயின் கூடாரத்திலிருப்பாள்? இனி தன்னோடும் ஆரோனோடும் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ளாமல் மோசே யூதகுலத்தவளல்லாத இந்தப் பெண்ணோடல்லவா உட்கார்ந்து உட்கார்ந்து பேசுவான்? அவளோடல்லவா வெளியே செல்வான்? மிரியாம் அவளுக்கு அடுத்தபடிதான். இந்த ஏமாற்றத்தோடு இனவெறியும் சேர்ந்து அவளது இழப்பைப் பெரிதுபடுத்தியதால் சினம் பொங்கிச் சீறினாள். மிகவும் நெருக்கமாக வாழும் குடும்பங்களில் திருமணம் என்பது ஓர் இழப்புதான். ஆனால் புதிய நபர்மீது அன்பைச் சொரிவதினால் ஒருவரை இழப்பதைத் தவிர்த்து ஒருவரைக் கூட்டிக்கொள்ளலாமே!

உங்கள் சொந்தச் சகோதரனோடோ சகோதரியோடோ சண்டையா? பெற்றோர் உங்களை அவர்களோடு ஒப்பிட்டு எரிச்சல் மூட்டலாம், பாரபட்சம் காட்டலாம். உங்கள் சகோதரனோ சகோதரியோ கூடுதல் தாலந்து பெற்றவர்களாயிருக்கலாம். அல்லது உங்கள் சகோதரனது கவனம் உங்களை விட்டு தன் மனைவி பக்கமாகத் திரும்பியிருக்கலாம். என்னவானாலும் சரி, பொறாமை என்னும் பாம்பு உங்கள் இதயத்தைப் பின்னி நெரிக்க இடமளிக்காதீர்கள். பிறர் உங்களை மதிப்பதில்லை, உங்களுக்குக் கொடுக்க வேண்டிய இடத்தைக் கொடுப்பதில்லை என்று அடியாழத்திலிருந்து சுருக் சுருக்கென்று கடித்துக்கொண்டிருக்கும் பெருமை எனும் மூட்டைப்பூச்சியை நசுக்கி விடுங்கள். "அகந்தையினால் மாத்திரம் வாது பிறக்கும்" (நீதி 13:10). மிரியாம் மோசேயின் மனைவியைக் காட்டிலும் வரம்பெற்றவள், காரியசித்தியுள்ளவள். தனது தீர்க்கதரிசன வரத்தை வளர்ப்பதிலும்

தலைமைத்துவத் தகுதிகளை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தியிருந்தால் அவளது மரணம் சம்பூரணமாயிருந்திருக்கும். ஆனால் சீக்கிரமாய் சாவூர் சென்றுவிட்டாள் (எண் 20:1). பெருமை, பொறாமை, பகை. சுய நலத்தினால் தூண்டடப்பட்டு சண்டையெனும் பாவத்திற்குப் பலியான தலைவியின் முடிவு அதே.

மிரியாம் மோசேக்கு விரோதமாகப் பேசினாள். "கர்த்தர் அதைக் கேட்டார்." சண்டையில் நீங்கள் வசை மொழியும் ஒவ்வொரு வார்த்தையையும் ஆண்டவர் கேட்கிறார். எச்சரிக்கை! அடுத்த வசனமே, "மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்! என்று சொல்லுகிறது. மோசேயின் பர்வதம் போன்ற பொறுமையின்றேல் அங்கே அடிதடி சண்டைதான் நடந்திருக்கும்.

"சண்டையின் ஆரம்பம் மதகைத் திறந்துவிடுகிறது போலிருக்கும்; ஆதலால் விவாதம் எழும்புமுன் அதை விட்டுவிடு" (நீதி 17:14). மிரியாம் மதகைத் திறந்துவிட்டாள்; மோசே அதை விட்டுவிட்டான். ஆனால் கடவுள் அதை விடாமல் அவனுக்காகச் சண்டையிட்டார். மிரியாம் குஷ்டரோகியானாள். ஆம், நாம் சும்மா நின்றால் கர்த்தர் நமக்காக யுத்தம் பண்ணுவார் (2 நாளா 20:17). மோசே "கர்த்தர் என் நீதியை நிலைநாட்டினார்" எனப் பூரிக்கவில்லை. தேவனை நோக்கி அவளுக்காகக் கெஞ்சினான். "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத் 5:9). உங்கள் ஆவி முறுக்கிக்கொண்டு எழும் போதெல்லாம், "உங்கள் தேவனாகிய கர்த்தர் மிரியாமுக்குச் செய்ததை நினைத்துக்கொள்ளுங்கள்" (உபா 24:9).

மோசேக்கு சமாதான இல்வாழ்வும் கிடையாது. மீதியான் தேசத்து சிப்போராளை மணந்தான். தன் முதல் மகனுக்கு, "நான் அந்நிய தேசத்தில் பரதேசியாய் இருக்கிறேன்'' என்று சொல்லி கெர்சோம் என்று பேரிட்டான்" (யாத் 2:22). இதிலிருந்து தன் சொந்த வீட்டிலேயே அந்நியனைப் போலிருந்தான் என அறியலாம். யோசேப்பும், ஆஸ்நாத்து எனும் புறவினத்தாளைத் தான் மணந்தான். ஆனால் தன் முதல் மகனுக்கு மனாசே என்று பெயரிட்டு, "என் வருத்தம் யாவையும் என் தகப்பனுடைய குடும்பம் அனைத்தையும் நான் மறக்கும்படி தேவன் பண்ணினார்" என்றான் (ஆதி 41:51). என்னே வேறுபாடு!

மனைவி, ஒருவனது வாழ்வில் பெரும் வித்தியாசத்தை உண்டு பண்ணலாம். மோசே தன் மனைவியோடே ஏன் ஒன்றுபட முடியவில்லை? அவனது வாழ்க்கையின் சில சன்னல்கள் வழியே எட்டிப் பார்க்கலாம்.

தேவன் மோசேயை எகிப்திற்குப் போகச் சொன்னவுடனே குடும்பமாக உல்லாசமாகப் போக எண்ணினான். "அப்பொழுது மோசே தன் மனைவியையும் தன் பிள்ளைகளையும் கழுதையின்மேல் ஏற்றிக்கொண்டு, எகிப்து தேசத்துக்குத் திரும்பினான்" (யாத் 4:20). வழியிலே தங்கும் இடத்தில் கர்த்தர் மோசேயைக் கொல்லப் பார்த்தார். "அப்பொழுது சிப்போராள் கருக்கான ஒரு கல்லை எடுத்து, தன் புத்திரனுடைய நுனித்தோலை அறுத்து, அதை அவன் கால்களுக்கு முன்பாக எறிந்து, நீர் எனக்கு இரத்த சம்பந்தமான புருஷன் என்றாள்." அதையே மறுபடியும் சொன்னாள் (யாத் 4:24-26). அவளது வார்த்தைகளில் கோபக்கனலைக் காணமுடிகிறதா? "கோபக்காரன் சண்டையை எழுப்புகிறான்; நீடிய சாந்தமுள்ளவனோ சண்டையை அமர்த்துகிறான்" (நீதி 15:18; 14:29). மோசே நீடிய சாந்தமில்லாதவனாயிருந்திருந்தால் அன்று கொலையே விழுந்திருக்கும்.

கர்த்தர் "மோசேயைக் கொல்ல எத்தனித்தபோது" சிப்போராளுக்கு அதன் காரணம் உடனடியாகப் புலப்பட்டது. அவள் புறவினத்தாளாயிருந்தும் விருத்தசேதனம் செய்ய அறிந்திருந்தாள். எப்படி? மோசே மகனை விருத்தசேதனம் பண்ணுவதைக் குறித்துப் பேசும்போதெல்லாம் சண்டையிட்டிருப்பாள். மோசேயும் வீட்டின் சமாதானத்தை எண்ணி, விட்டுக்கொடுத்திருப்பான். ஆகவே எமர்ஜென்சி ஆபரேஷன் செய்ய வேண்டியதாயிற்று. விளைவென்ன? அவளும் பிள்ளைகளும் தகப்பன் வீட்டிற்குத் திரும்ப வேண்டியதாயிற்று (யாத் 18:2).

"மனைவியின் சண்டைகள் ஓயாத ஒழுக்கு. வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் சுதந்தரம்; புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு" (நீதி 19:13,14). எதற்கெடுத்தாலும் மனைவி சண்டைபோட்டால் கணவன், இவள் கர்த்தர் அருளினவளா என யோசிக்கத் துவங்குகிறான். பிடிவாதக்காரியான தன் மனைவியைக் குறித்து மோசே அதிகம் எழுத விரும்பாதது ஆச்சரியமில்லையே.

"அடைமழை நாளில் ஓயாத ஒழுக்கும் சண்டைக்காரியான பெண்ணும் சரி. அவளை அடக்கப்பார்க்கிறவன் காற்றை அடக்கித் தன் வலது கையினால் எண்ணெயைப் பிடிக்கப்பார்க்கிறான்" (நீதி 27:15,16). நாற்பது நீண்ட ஆண்டுகட்குப் பின் மோசே தன் உறவினரையும் நண்பரையும் சந்திக்கச் செல்கிறான், ஒரு தலைவனாக. அவனது மனைவி எல்லார் முன்பாகவும் ரகளை செய்துகொண்டிருக்க முடியாது. ஆனால் அக்கவலைக்கே இடமில்லாமல் போனது. மோசே தன் மனைவியின் துணையின்றி செல்லவேண்டியதாயிற்று. பல கணவர் போர்க்குணமுள்ள தம் மனைவியரை மாற்றவோ அடக்கவோ முடியாமல் "வீட்டுமூலை" குருவிபோல்

ஒடுங்கி வாழ முடிவெடுத்து விடுகின்றனர் (நீதி 21:9). திருமணத்திலும் ஏகாந்தம்! சிப்போராள் காலாகாலத்தில் தன் கணவனுக்குக் கீழ்ப்படிந் திருப்பாளானால்...!

மோசே மகிமையாகத் திரும்பி வருகையில் அவனது மாமனாரும், சிப்போராளும், பிள்ளைகளும் வனாந்தரத்தில் அவனைச் சந்தித்தனர். மோசே அவர்களை வரவேற்று தன் மாமனை முத்தஞ்செய்து அவனுக்கு எல்லாவற்றையும் விவரித்தான். நெடுநாளுக்குப் பின் மனைவியைச் சந்திக்கும்போது அவளுக்கு முத்தமிட்டு எல்லாவற்றையும் அவளுடன் பகிர்ந்துகொள்ளும் இயற்கையான உணர்ச்சி செத்துவிட்டதோ? மோசே தன் மாமனில்தான் ஏற்ற சிநேகிதனைக் கண்டான் (யாத் 18). சண்டைக்காரி தன் கணவனின் ஆசாபாசத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிடுகிறாள். எத்தனை அருங்காட்சிகளை இழந்தாள்! எகிப்தில் அற்புதங்கள், தன் பங்கு இலவச தங்க நகைகள், செங்கடல் பிளப்பு, மாரா, மன்னா, காடை அற்புதங்கள், கன்மலையிலிருந்து தண்ணீர், அமலேக்கியர் முறியடிப்பு! செய்திகளைக் கேட்டதோடு (அல்லது ஒட்டுக்கேட்டதோடு) சரி. ஆனால் இப்போது மனப்புயல் மோதுகையில் மந்தமாருதமாகக் காட்சியளிக்கிறாள். "பாலைக் கடைதல் வெண்ணெயைப் பிறப்பிக்கும்; மூக்கைப் பிசைதல் இரத்தத்தைப் பிறப்பிக்கும்; அப்படியே கோபத்தைக் கிண்டிவிடுதல் சண்டையைப் பிறப்பிக்கும்" என்ற பாடத்தைக் கற்றுக்கொண்டுவிட்டாள் போலும் (நீதி 30:33). அதனால்தான் ஒருவேளை மிரியாமின் சீற்றத்திற்கு அமைதியே உருவானாள் போலும்! "பகை விரோதங்களை எழுப்பும்; அன்போ சகல பாவங்களையும் மூடும்! (நீதி 10:12).

அன்னாளைப் போல ஒவ்வொரு பெண்ணுக்கும் குட்டுகிற சாத்தானின் தூதர்கள் உண்டு. அது உங்கள் சகோதரியோ, மைத்துனியோ, நாத்த னாரோ, தாயோ, மாமியாரோ, மருமகளோ, வேறு யாரோ. அன்னாள் தன் அமைதியினாலும் பக்தியினாலுமே வென்றாள். "மெதுவான பதில் உக் கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்" (நீதி 15:1). வாய்க்குக் கடிவாளம் போடுங்கள். அப்பொழுது அன்னாளைப் போல, "பலத்தினால் ஒருவனும் மேற்கொள்வதில்லை" எனக் கண்டுகொள்வீர்கள் (1 சாமு 2:9). சண்டைபோட குறைந்தது இருவர் வேண்டும். "என்னோடு சண்டை போட்டார்" என்றால் உங்களையே காட்டிக்கொடுக்கிறீர்கள்! நீங்கள் ஒத்துழைக்காவிடில் யாரும் உங்களோடு சண்டைபோட முடியாது. நமது இதயத்தையும் நாவையும் கர்த்தருக்கு ஒப்புவிப்பது அன்னாளைப் போல நமது மணவாழ்வையே, முழுவாழ்வையே மாற்றிவிடும். சண்டையோ வாழ்வின் ஒவ்வொரு திருப்பத்திலும் தடுக்கி விழப்பண்ணும்.

“என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் இராஜ்யம் இவ்வுலகத் திற்குரியதானால்... என் ஊழியக்காரர் போராடியிருப்பார்கள்” என்றார் இயேசு (யோ 18:36). நீங்கள் எவ்வுலகத்திற்குரியவர்கள்? குப்பைத்தொட்டி யிலிருந்து பொருட்களைச் சேகரிப்பது போன்றது சண்டை. மேலெல்லாம் அழுக்காக்கிப் பெறத்தகுந்ததல்ல கிடைக்கும் ஆதாயம்.

“உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது; உங்கள் அவயவங்களில் போர்செய்கிற இச்சைகளினாலல்லவா? நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை; நீங்கள் கொலைசெய்தும், பொறாமையுள்ளவர்களாயிருந்தும் அடையக்கூடாமற்போகிறீர்கள்; நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும், விண்ணப்பம் பண்ணாமலிருக்கிற தினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை” (யாக் 4:1,2). இச்சையும் பேராசையும் பேரிழப்பை வருவிப்பவை. வரதட்சணைக்காகப் போராடி மணவாழ்வை நாற்றமாக்கிக்கொண்டோர் எத்தனை தெரியுமா? அன் னாளைப் போல தேவசித்தம் அறிந்து விண்ணப்பியுங்கள். சண்டையிட்டு சக்தியை வீணடிக்காதீர்கள்.

இளம் அமத்சியா நான்கு டன் வெள்ளி கூலி கொடுத்து சில இஸ்ர வேலரைத் தன் யூதேயப் படையிலே சேர்த்திருந்தான். ஒரு தேவ மனிதன் அவர்களை நீக்கிவிடும்படி பணித்தான். அதற்கு அமத்சியா தான் கொடுத்த கூலிப்பணம் என்னாவது என்று கேட்டான். அதற்கு தேவனுடைய மனிதன், “அதைப்பார்க்கிலும் அதிகமாய்க் கர்த்தர் உமக்குக் கொடுக்கக்கூடும்” என்றான் (2 நாளா 25:9). பணம், பதவி, பெயருக்காகப் போராட்டமா? தேவமனிதனது வாக்கை மனதில் கொள்ளுங்கள். நாம் இழப்பதினால் பெறுகிறோம். சண்டையிடுவதினால் இழக்கிறோம். அடுத்தவர் வெள்ளி யோடு போனாலும் போகட்டும். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவோம். தேவனை நமது பக்கத்தில் நிறுத்திக்கொள்வதே நமக்கு ஆதாயம்.

“வாய்க்குள்ளே போகிறது மனிதனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனிதனைத் தீட்டுப்படுத்தும்” (மத் 15:11). பிறரது கோபம் நமது பரிசுத்தத்தைக் கறைப்படுத்திவிடாதபடி கவனமாயிருப்போம். கோபங் கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள் (எபே 4:26). அதாவது, உங்கள் கோபம் பொங்கி பிறருடனுள்ள உங்களது உறவின்மேல் ஊற்றிவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். “அது என் பலவீனம்” என்று சொல்லாமல் சண்டையிடும் போதெல்லாம் தேவனிடம் அறிக்கையிடுங்கள். உரமுள்ள மனம் உடலைக் கட்டுப்படுத்த வல்லது.

ஆவியின் கனியே சண்டைக்குத் தக்க பரிகாரம். நீங்கள் **அன்பா யிருந்தால்** சண்டைபோடமாட்டீர்கள்; **சந்தோஷமாயிருந்தால்** கோபப்பட மாட்டீர்கள்; **சமாதானப்** பிரியராயிருந்தால் பிரிவினை உண்டாக்கமாட்டீர் கள்; **நீடிய பொறுமை** உள்ளவர்களாயிருந்தால் போராடமாட்டீர்கள்; தயவு நிறைந்திருந்தால் மெதுவான பதில் அளிப்பீர்கள்; **நற்குணம்** இருந்தால் எரிந்துவிழ மாட்டீர்கள்; கர்த்தர்மேல் விசுவாசம் திடமாயிருந்தால் புய பலத்தை நம்பமாட்டீர்கள்; சாந்தம் குடிகொண்டிருந்தால் வார்த்தைக்கு வார்த்தை பதில் பேசமாட்டீர்கள்; இச்சையடக்கம் உள்ளவர்களாயிருந்தால் உங்களையே அடக்கி ஆளுவீர்கள்.

சண்டையிடுவது சேவல்தான். அதை மனிதருக்கு அடைமொழியாக்கும் போது சண்டைக்கோழி எனத் திரிந்துவருகிறது. நீங்கள் ஒரு சண்டைக் கோழியா ?

௫

மாமியார் மகன்!

இந்தியப் பெண்மணிகள் பலர் தங்கள் கணவரை "என் மாமியார் மகன்" என்றுதான் அறிமுகப்படுத்த வேண்டியிருக்கிறது. நம் நாட்டில் சுமார் 80% கணவர் தம் தாயின் மகன்களாகவே வாழ்கின்றனர். சமீபப் புள்ளிவிபரக் கணக்கொன்று இந்தியத் தற்கொலைகளில் சுமார் 10% மாமியார்-மாமனார்-மருமகள் சிக்கலால் வந்தது என அறிவித்துள்ளது. பட்டியலில் இரண்டாவது தமிழ்நாடு! பிள்ளைகள் பெற்றோரைக் கனம் பண்ணவேண்டும் எனக் கூறினாலும், திருமணத்திற்குப் பின்னர் மகன்கள் தம் பெற்றோரை விட்டுப் பிரிந்தே ஆகவேண்டுமென வேதம் ஆணித்தரமாக அடித்துக் கூறுகிறது. ஓரிருமுறையல்ல, நான்குமுறை இக்கட்டளை வேதத்தில் வரையப்பட்டுள்ளது. மனிதன் ஏன் தன் பெற்றோரைப் பிரிய வேண்டுமென ஒவ்வொரு இடத்திலும் ஒரு குறிப்பிட்ட காரணத்தைக் காணலாம். குளவிக் கூட்டைக் குத்துகிறேனோ ?

(அ) ஆதியாகமம் 2:24

"தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவனை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார். அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்."

மனிதனிலிருந்து எடுக்கப்பட்ட பெண், அவனுக்கேற்றவாறு வனையப் பட்டு, அவனுக்குள் திரும்பப் பொருத்தப்பட்டாள். அவள் மனிதனில் ஒரு பகுதி, தனி நபரல்ல. மணமாகுமுன் ஆணும் பெண்ணும் தம் தம் குடும் பத்தைச் சேர்ந்தவர். அதைவிட்டு வெளிவந்து அவர்கள் ஒரு தனிக் குடும்பத்தை உருவாக்கும்படி இணைகின்றனர்.

ஆனால் இந்தியக் கலாச்சாரத்தில் ஒரு பெண் அவளது துணைவனின் குடும்பத்திற்குள் சேர்த்துக்கொள்ளப்படுகிறாள். அங்கே அவள் ஒரு மகளாக இயங்க எதிர்பார்க்கப்படுகிறாள், மகனின் மனைவியாக அல்ல. குடும்பத்திற்குள் ஒரு குடும்பம்! இது இயற்கைக்கு விரோதமானது. மிருகங்களும் பறவைகளும் வளர்ந்தவுடன் வெளியேறி தமக்கென்றொரு கூட்டைக் கட்டுகின்றன. பல இளந் தம்பதியர் அறியாமையினால் பையனது குடும்பத்தோடு குடியேறி காலம் கடந்து கண்ணீர் வடிக்கின்றனர். தீயக் கலாச்சாரப் பழக்கங்களை மாற்ற நமக்கு ஏன் துணிவில்லை?

பெண்கள் இலகுவாக தம் பெற்றோரை விட்டுப் பிரிந்துவிடுகின்றனர். ரெபெக்காள் எத்தனைத் துடிப்புடன், "நான் போகிறேன்" என்றாள் பாருங்கள் (ஆதி 24:58); லேயாளும் ராகேலும் தகப்பன் வீட்டை விடத் தயாரா யிருந்தனர் (ஆதி 31:16); ஓர்பாளும் ரூத்தும் தாய் வீட்டிற்குத் திரும்ப வேண்டுமென்றவுடன் திகைத்துக் கதறினர் (ரூத் 1:10). ஆண்களுக்கோ அது ஒரு போராட்டம்!

பெற்றோரை ஒட்டிக்கொள்ளும் பெண்கள் தமக்கே தாம் குழி தோண்டுகின்றனர். ராஜா தன் அழகில் பிரியப்பட வேண்டுமென்றால் அவள் தன் இனத்தாரையும் தன் தகப்பன் வீட்டையும் மறந்துவிட வேண்டும் (சங் 45:10,11).

முதல் மனிதனுக்கு தேவன் இந்நிபந்தனையைப் போடத் தேவை என்ன? ஆதாம் கடவுளுடைய மகன் (லூக்கா 3:38—ஆங்கில வேதம்). கடவுளே அவனுக்குத் தாயும் தகப்பனுமாயிருந்தார். பின்பு அவன் தம்மையே துணைக்குத் தேடாதபடி அவனது துணைவியின் கவனத்திற்கு அவனை விட்டுவிட்டார். மதிப்பாக சாயங்காலம் மட்டும் அவர்களைப் பார்க்க வந்து, தங்கள் கூட்டைத் தாங்களே கட்ட விட்டுவிட்டார்.

(ஆ) மத்தேயு 19:4-6

"ஆதியிலே மனிதரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண் ணுமாக உண்டாக்கினார் என்பதையும் இதினிமித்தம் புருஷனானவன்

தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந் திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்ன தையும் நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால் அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்: ஆகையால் தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்.''

ஒருவன் ஏன் தன் பெற்றோரை விடவேண்டும்? ஏனெனில் அவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார். அவர்கள் ஒருவரை யொருவர் ஈர்க்கும் சக்தி வாய்ந்த இருபாலர். ஆண்-பெண் சேர்க்கையை எந்தவொரு இணைப்பிற்கும் ஒப்பிட முடியாது. எபிரெய மொழி தாம்பத்திய உறவை ''அறிதல்'' எனக் குறிப்பிடுகிறது. ஆடவனைப் பெண்ணல்ல, ஆடவனே பெண்ணை அறிகிறான். இது வெறும் உடல் அல்லது மன வுறவைக் காட்டிலும் ஆழமானது. மணந்தபின் ஒருவன் யாருமே புரிந்து கொள்ளமுடியாத ரீதியில் தன் மனைவியை அறியவும் புரியவும் துவங்கு கிறான். இது வாழ்வெல்லாம் தொடரும் ஓர் அற்புதம்.

இச்சந்தர்ப்பத்தில் இயேசு விடுதல், இணைதல், மணமுறிவு, விபசாரம் இவற்றைக் கோர்த்துப் பேசுகிறார். இளம் மனைவியர் பலர் கூட்டுக் குடும்பத்தின் பிற ஆண்களோடு நெருக்கப்படுவதால் விபசாரத்தில் விழ ஏதுவாகிறது. ஆண் பெண் சேர்க்கை ஓர் இரகசியம். ஆகவேதான் ஆண்டவர் மணமுறிவிற்கும் விபசாரத்திற்கும் எதிராகக் காரசாரமாகப் பேசினார். யாரும் எக்காரணத்தை முன்னிட்டும் முறிக்கக்கூடாத இணைப்பு அது. விபசாரத்தில் ஒருவர் ஏற்கனவே அதை முறித்தாயிற்று. அது தேவனுடைய சாயலையே முறிப்பதாகும். இப்பெரும் பாதகத்திற்கு வாசலைத் திறந்துவைப்பானேன்?

''தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்—ஆணும் பெண்ணுமாக'' (ஆதி 1:27). நமது ஆண்மையும் பெண்மையும் தேவ சாயலுக்குச் சம்பந்தப்பட்டவை. ஆகவே ஆணும் பெண்ணும் இணையும் போது தேவசாயலைப் பூரணப்படுத்துகின்றனர்.

பெற்றோரோடு ஒருவன் கொண்டுள்ள அன்பு முற்றிலும் வேறுபட்டது. அது பாசவுணர்வு. மற்றதோ பாலன்பு. ஒருவன் சரீரப் பிரகாரமாகவும் மனதிலும் பெற்றோரிடமிருந்து தன்னைத் தீர்மானமாகப் பிரித்துக் கொண்டாலொழிய, தன் மனைவியோடு தேவன் நியமித்த ஒன்றித்தலை எய்துவது இயலாது, புதுமணத் தம்பதியர் தேவசாயலைப் பிரதிபலிக்கவும் முடியாது.

ஒருமுறை என் கணவரும் நானும் எம் நண்பரான ஒரு பிரபல ஊழியருடனும் அவருடைய மனைவியுடனும் இக்காரியத்தை விவாதித்துக் கொண்டிருந்தோம். அவர், "சகோதரி, நீங்கள் என்ன சொன்னாலும் சரி, தாய்க்குப் பின்தான் தாரம்" என்றார். நானும் விளையாட்டாக, "அது சரிதான் சகோதரனே, எங்களுக்கும் தந்தைக்கு பின்தானே கணவன்" என்றேன். அதை நான் மனமாறச் சொல்லவில்லை. எப்போதும் என் கணவனையே முன் வைத்திருக்கிறேன். ஆனால் ஓர் ஆணும் பெண்ணும் தம் துணைவரை எக்கண்ணோட்டத்துடன் நோக்குகின்றனர் என நாங்கள் உணர முடிந்தது. தாயையும் தகப்பனையும் விட்டுப் பிரியவேண்டுமென்று தேவன் 'மனிதனிடம்' சொன்னதில் வியப்பொன்றுமில்லையே. பரிபூரண வாழ்வைத் தம் பெற்றோர் வீட்டில் அனுபவிக்க ஆசிக்கும் தம்பதியர் கானல் நீரைத் தொடருகின்றனர்.

(இ) மாற்கு 10:7

இதுவும் அதே சந்தர்ப்பமானாலும் வேறொரு கோணத்தில் காணலாம்.

பரிசேயர் சிலர் மனைவியைத் தள்ளிவிடலாமா எனக் கேட்டனர். இயேசுவின் பதிலின் சுருக்கமாவது: "அவர்கள் பெற்றோரை விட்டுப் பிரிந்து ஒரே மாம்சமாகிறார்கள். தேவன் அவர்களை இணைக்கிறார், ஆகவே யாரும் அவர்களைப் பிரிக்கக்கூடாது." பெற்றோரைவிட்டு விட்டு, ஒன்றாகி, தேவனால் இணைக்கப்படுமுன், பிரிக்கப்படுவது எப்படி ?! இன்னொரு குடும்பத்திற்குள்ளிருக்கும் கணவன் மனைவிக்கிடையே இன்னும் இடைவெளி உண்டு. பத்து வருடங்கள் கழித்தும் மருமகள் நேற்று வந்தவள்தான். என்றுமே அவள் 'வேறொருத்தி'தான். மனிதன் தன் மனைவியைக் கருத்துடன் அறிய நேரம் ஒதுக்க முடியாது. அவன் தன்னையும் தன் நேரத்தையும் குடும்பத்தின் பிற அங்கத்தினருடன் பகிர்ந்து கொள்ளவேண்டும். ஆகவே மனைவி தான் வேண்டாதவளென்று உணருகிறாள். கணவனுக்கு மனைவி இசைந்து போவதே கடினம். போதாததற்கு அவள் தன் கணவன் வீட்டார் ஒவ்வொருவருடன் இசைந்து போக எதிர்பார்ப்பது ஆகக்கூடிய காரியமா ?

பெற்றோரும் உடன்பிறந்தோரும் சுற்றிச் சுற்றி வருவதால் கணவன் மகனாகவே வாழ்க்கையைத் தொடருகிறான். கணவனுக்குரிய முதிர்ச்சியோ தகப்பனுக்குரிய முதிர்ச்சியோ அவன் அடைய முடியாது. குழந்தை வளர்ப்பில் இளந்தலைமுறை முதியவரோடு மோதும். இருபக்கமும் பிடித்திழுக்கப்படும் பிள்ளைகள் ஒழுக்கத்துடன் வளருவது எங்ஙனம் ? "ஏன் ஒருவனைப் படைத்தார் ? (அல்லது, ஏன் அவர்களை ஒன்றாக்கினார்

—ஆங்கில வேதம்), தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படித்தானே ?" (மல் 2:15). மத்தளத்திற்கு இரண்டு பக்கத்திலும் அடி என்பதுபோல் எல்லா சர்ச்சைகளிலும் கணவனே இருபுறமும் தாக்கப்படுகிறான். "மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்" என்பதற்கு முன்பாக, "அவர்கள் இணைவதை மனிதன் தடுக்காதிருக்கக்கடவன்" என்பதற்கு முதல் வருவோம்.

சிக்கலுக்குத் தீர்வு மாமியாரின் கையில்தான் இருக்கிறது. மன்னன் லேமுவேலின் தாயைப் போல எந்த மாமியார் தன் மகனை நோக்கி, பின் வருமாறு புத்தி சொல்லுவாள் ? "உன் இருதயம் அவளையே (என்னையல்ல) நம்பும்; அவளே (நானல்ல) உனக்கு நன்மை செய்வாள்; அவளே (நானல்ல) உனக்கு உணவு பரிமாறுவாள்; வயலை வாங்குவாள் (நான் கருமித்தனமாக அவள் செலவுகளை எல்லாம் கணக்குப் பார்க்கமாட்டேன்); தன் வீட்டுக்காரியத்தை அவளே நோக்குவாள் (என் வீட்டு விருந்தாளி போலிருக்கமாட்டாள்); அவளது புருஷன் (என் மகனல்ல) பேர்பெற்றிருப்பான்; பலமும், அலங்காரமும், மகிழ்ச்சியுமாயிருப்பாள் (அவளது உணவில் மிச்சம் பிடித்து அவளைக் கண்ணீர்விட வைக்கமாட்டேன்); சொல்லப்போனால் எனக்கு உன் வீட்டில் இடமேயில்லை. நீ வெளியே போய் அவளுடன் வாழ வேண்டும்" (நீதி 31). எந்தத் தாய் மணமகனான தன் மகனுக்கு இப்படிப் போதிப்பாள் ? 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்; நீதான் எல்லாவற்றிலும் பொறுத்துப் போக வேண்டும்' என்று மணமகளுக்குச் சொன்னால் மட்டும் போதுமா ?

பல தாய்மாருக்கு மகன் பிறந்துவிட்டால் மகத்துவம். மகனுக்காகவே எல்லாம் என்று வாழ்வர். உனக்காக எத்தனை தியாகம் செய்தேன் என்று ஊசி போட்டுப் போட்டு வளர்ப்பர். "நாங்கள் விசுவாசித்தோம். கர்த்தர் எங்களுக்கொரு ஆண் பிள்ளையைக் கொடுத்தார்" என்றார் ஒருவர். நான் விடுவேனா ? "நாங்கள் அதிகமாக விசுவாசித்தோம். ஆகவே கர்த்தர் எங்களுக்கொரு பெண் பிள்ளையைக் கொடுத்தார்" என்றேன். பெண்மைக்கு உயரிடம் தேடுபவளல்ல நான். ஆனால் பால் பிரிவு மனப்பான்மையில் வளர்ந்த ஒருவன் தன் தாயைத் தனக்காகவே இரத்தம் சிந்திய தியாகச் செம்மலாகக் காண்கிறான். ஆகவே தன் மனைவி அவளுக்கு மிதியடியாக எதிர்பார்க்கிறான். தாயும் தன் கண்ணீரைக் காட்டியே அவனை ஆட்டிப் படைக்கிறாள். அவன் வீட்டையோ, ஊரையோ, மாநிலத்தையோ, நாட்டையோ விட்டுப் போகக்கூடாது. மகனும் அவளது முந்தானையை பிடித்துக் கொண்டே மணமுடிக்கிறான். தன் இளம் மனைவிக்கு ஓர் இனாம் அளித்துவிட்டாலோ, ஒரு பாராட்டுச் சொல் சொல்லி விட்டாலோ போதும், "கலியாணத்துக்கப்புறம் ரொம்ப மாறிட்ட" அல்லது "பொண்டாட்டி பேச்ச கேட்டுட்டு ஆடறான்"அல்லது "என் மகனத் திருடிக்கிட்டா." மனைவி

வாயைத் திறந்துவிட்டால் போதும், “வீட்டை ரண்டாக்க வந்தவ.” வீட்டை இரண்டாக்கியவர் ஆண்டவரல்லவா ? கலியாணக் கொட்டு, “அம்புட்டுக் கிட்டா, அம்புட்டுக்கிட்டா, அம்புட்டுக்கிட்டா” என்றுதான் இன்னும் சுதந்திர இந்தியாவில் ஒலிக்கிறது. மனைவியருக்கு சுதந்திரம் என்றோ ?

மகன் தானாக வெளியேறாவிட்டால் குற்றவுணர்வின்றி அவன் திருடப்படவேண்டும். கணவன்மார் தன் மனைவியரைக் கூட்டிக் கொண்டு வெளிக்குத் தெரியாமல் ஓடிவிடக் காலமாயிற்று!

(ஈ) எபேசியர் 5:25-33

“புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து... தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார். அப்படியே புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங் களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். (மேற்கண்ட) இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரிது; நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லுகிறேன். எப்படியும் உங்களில் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவி யிடத்திலும் அன்புகூரக்கடவன்.”

மணமான மகன் தன் பெற்றோரில் எவ்விதம் அன்பு கூரவேண்டுமென்று வேதத்தில் எங்கும் இத்தனை தெளிவாக எழுதப்படவில்லை.

கணவன்-மனைவி அன்போ தலைகால் புரியாத, கண்மூடித்தனமான, மிதமிஞ்சிய அன்பு. பசியெடுத்தால் “சோறு போடுறியா ?” என்று கத்தாமல் “உனக்குச் சாட்பிட எதுவும் வேண்டுமா ?” எனக் கனியும் அன்பு. ஷர்ட் எடுக்கத் தேவைப்பட்டால், “உனக்குப் போதுமான புடவைகள் இருக் கிறதா ?” என விசாரிக்கும் அன்பு. தனக்கு அவளது பெற்றோரோடு வாழ முடியாவிடில் அவளைத் தனது பெற்றோருடன் வாழ வற்புறுத்தாத அன்பு. அதுவே மனைவியைத் தன்னைப்போல் நேசிப்பது. தன்னை, “ஒப்புக்கொடுக்கும்” அன்பு. (அதாவது பெற்றோரிடமிருந்து தப்பித்து

மனைவிக்குத் தன்னை முழுமையாக ஒப்புவித்துவிடும் அன்பு. கூட்டுக் குடும்பச் சூழலில் இப்படிப்பட்ட அன்பு செல்லாது. "நேற்று வந்தவளிடம்" இப்படி அன்பு காட்டுவது மற்றவருக்கு விகற்பமாகத் தோன்றும். இந்தியாவில் மணமகனின் திருமண வாக்கில், "தாயையும் தகப்பனையும் விட்டு உன்னோடு இசைந்திருப்பேன்" என்று ஒரு வரியையும் கூட்டிக் கொள்வது குறித்து ஆலோசிப்பது நல்லது!

கூட்டுக் குடித்தனம்

நான் கூட்டுக்குடும்ப நாசகியல்ல. அதில் நன்மைகள் உண்டு. வெளியே வேலை செய்யும் மனைவியரின் பிள்ளைகளுக்குப் பாதுகாவலது. பிள்ளைகளின் ஆரோக்கியத்திற்கு தாத்தா பாட்டியின் செல்லம் தேவை. தனிக்குடும்பம் குறுகிவரும் இந்நாட்களில் மனைவி ஒன்றிரண்டு குழந்தைகளுடன் தனியே வீட்டிலிருப்பது கடினம்தான். கணவனின் வேலை அவரை நெடுநேரம் வெளியே தங்க வைத்தால் இன்னும் கடினம். பாதுகாவல் ஒருபக்கம். பணவிவகாரத்தில் ஒரு மகனின் வருமானத்தை நம்பி வாழும் குடும்பங்களுக்குத் தனிக்குடித்தனம் சிந்திக்கவும் முடியாதது. புதுத் தம்பதியர் தனியாகக் குடியேற ஆயத்தமாகும் வரை கூட்டுக்குடும்பம் தற்காலிக அமைப்பாகலாம். தாயோ தந்தையோ தனியாகவோ வியாதிப் பட்டோ இருந்தால் அவர்களை அன்போடு பராமரிப்பது பிள்ளைகளின் பொறுப்பே. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் கூட்டுக்குடித்தனத்தில் வாழ்பவர் சிக்கல் ஒவ்வொன்றையும் ஆன்மீக மறுமலர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். யாருக்குத் தெரியும்? தேவன் அன்னாரைப் புண் பட்டோருக்குச் சுகமளிக்கும் காயப்பட்ட வைத்தியராக்கலாமே.

நல்ல மாமியார்களும் உண்டு. ஆனால் பொதுவாக மாமியார்களால் உடைக்கப்பட்ட குடும்பங்களின் கோர எண்ணிக்கையினால்தான் இக் கட்டுரையில் அதை ஓங்கிச் சுட்டிக்காட்டியிருக்கிறேன். வயதான, தம்மைத் தாமே கவனித்துக்கொள்ளக்கூடாத பெற்றோரை முதியோர் இல்லத்தில் பணம் கட்டித் தள்ளிவிட்டால் போதும் என்று நினைக்கக்கூடாது. அவர்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் பாசச் சூழலிலிருக்கவேண்டும். ஒருவருக் கொருவர் சற்று விட்டுக்கொடுத்துப் போனால் அப்படிக் குடும்பம் பரலோகப் பரவசத்தை பூவுலகிலே அனுபவிக்கலாம்.

பெற்றோரும் ஞானமாகப் பிள்ளைகளிடம் மாறி மாறித் தங்கினால் பிள்ளைகளுக்குப் பாரம் தெரியாது. கூடுமானவரை ஒருவர் அடுத்தவரை சந்தோஷப்படுத்த முயல வேண்டும். சுகதேகிகளான பெற்றோர் பணவசதியுடன் இருப்பாரானால், திருமணமானவுடன் மகனையும்

மருமகளையும் மேளதாளத்துடன் வெளியே அனுப்பிவிட வேண்டும். அப்படியானால் உறவைக் காக்கலாம்.

கூட்டுக்குடும்பத்தில் தனிக்குடும்பம் தனித்தியங்கவேண்டும். பெற்றோர் மகனே, மகனே என்று சொந்தம் பாராட்டக்கூடாது. மனைவியை மட்டந்தட்டி ஏறி மிதிக்காதபடி மகன் பார்த்துக்கொள்ளவேண்டும். சாலொமோன் இராஜா தன் தாயை நேசித்துக் கனம்பண்ணினான். அவள் அவைக்குள் நுழைந்தபோது எழுந்திருந்து, அவளுக்கு எதிர்கொண்டுபோய், அவளை வணங்கி, தன் வலதுபுறமாக உட்கார அவளுக்கு ஆசனம் போட்டு, உட்காரவைத்து அவளது மன்றாட்டை மறுப்பதில்லை என வாக்களித்தான். ஆனால் தவறான அவளது மன்றாட்டிற்கு அவன் செவிசாய்க்கவில்லை (1 இரா 2:20-25). அது கனவீனப்படுத்துவதா? ஞானத்தினால் தேவ சித்தத்தைப் பகுத்தறிந்து செயல்பட்டான். தன் பெற்றோர் சொல்வதும் செய்வதும் தன்னையும் தன் மனைவியையும் இணைக்கிறதா, பிரிக்கிறதா என ஒரு மகன் பகுத்தறிய வேண்டும். ஞானமுள்ள மகன் ஆபத்தின் அறிகுறிகளைச் சீக்கிரமாகக் கண்டுகொண்டு சிலிர்த்து தன் பெற்றோரை நிறுத்துவான்.

பெற்றோரோடு வாழும் கணவன் தன் மனைவியைக் குற்றஞ்சாட்டக் கூடாது. வாழ்வின் பல பகுதிகளில் அவள் விடுதலையின்றி முடங்கிக் கிடப்பாள். மகனை விட்டுவிட விரும்பாத பெற்றோரும் மருமகளைக் குறித்து முறுமுறுக்கக் கூடாது. கூட்டுக்குடித்தனச் சூழ்நிலையில் அவள் தண்ணீரை விட்டு வெளியே எறியப்பட்ட மீன்தான்.

மனைவியர் உடனே மூட்டை முடிச்சைச் சுருட்டிக்கொண்டு தனிக் குடித்தனத்தை துவங்கிவிடவேண்டாம். இந்திய ஆண்கள் அம்மா பிள்ளைகள் என்பதில் சந்தேகமில்லை. மணத்திற்குப் பின் வளர்ந்து கணவராக அவர்களுக்குச் சில ஆண்டுகள் பிடிக்கலாம். கணவன் தனிக்குடும்பத்திற்குத் தலைவனாகும் தைரியமும் சுயநம்பிக்கையும் பெற்று உறுதியாகும் வரை மனைவியர் சற்றுப் பொறுமையுடன் காத்திருக்கவேண்டும். ஆனால் பெற்றோர் தாமாகவோ உதவியாளுடனோ தங்கள் குடும்பத்தை நடத்தக் கூடுமானால், சமுதாயம் என்ன சொல்லும் என்பதற்குச் செவியடைத்து கணவனும் மனைவியும் வேதத்திற்குச் செவிசாய்க்க வேண்டும். வேதம் சொல்வது தேவன் சொல்வது. பக்தியோடு நின்றுவிடாதீர். சத்தியத்தின்படி நடக்கத் துணிய வேண்டும். மங்களம் செழிக்க வேண்டுமானால் பக்தியுடன் புத்தி முக்தியளித்திடும் நித்தியரை நிதம் துத்தியம் செய்திடும் சத்திய ராகுவீர்!

௫

மாமியார் மெச்சும் மருமகள்!

மருமகளைக் குறித்து எழுத ஆயத்தமாகிக் கொண்டிருக்கும்போது இரு பெண்களிடமிருந்து வந்த கடிதங்கள் பலநூறு மருமகள்களின் எதிரொலியாகவே வந்தன: "கூட்டுக் குடும்பத்தில் அடைபட்டுள்ளோம், தப்ப வழியில்லை."

பாரம்பரியங்களை இரவோடிரவாக மாற்றிவிட முடியாது; கலாச்சாரத்தைக் கணப்பொழுதில் கரைத்துவிடவும் முடியாது. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இந்திப் பெண்கள் பலர் கூட்டுக் குடும்பத்தில்தான் வாழவேண்டிய நிலையுள்ளது. ஆனால் உங்களைக் கூட்டுக்கிளியென எண்ணத் தேவையில்லை. இருளைச் சபிப்பதை நிறுத்தி அங்கு விளக்கை ஏற்றலாமே. புகுந்த குடும்பத்தைச் சொந்தக் குடும்பமாகக் கருதி மகிழ்ச்சியும், பிரகாசமும், பரவசமுமூட்டுங்கள்.

"உனக்கு எப்படி மாப்பிள்ளை வேண்டும்?" என்று கேட்ட மாத்திரத்தில் ஒருத்தி, "தாயற்றவர்" என்றாளாம். இவளுக்கு மனைவியாகும் தகுதியில்லை. ஒத்துப்போகத் தெரியாத சுயநலக்காரி இவள். அமர்ந்த சமுத்திரம் தேர்ந்த படகோட்டிகளை உருவாக்கா; லட்சியக் குடும்பம் குணசாலியான பெண்ணை உருவாக்காது.

மருமகள்களைப் பொறுத்தவரை இருவிதக் கூட்டுக் குடும்பங்கள் உண்டெனலாம். புருஷன் வீட்டில் மருமகள் புகுவது ஒன்று. மாமியார் வீட்டை நடத்துவார்கள். மற்றது பெற்றோர் ஓய்வு பெற்றோ வயதாகியோ மகன் வீட்டில் அடைக்கலம் புகுவது. இங்கே மருமகள் வீட்டை நடத்துகிறாள்.

நீங்கள் முதல் வகை வீட்டில் புகலாம். லட்சியக் கணவன், தனிக் குடித்தனம், தாய் போன்ற மாமியார் ஆகிய கனவுகள் பொசுங்கிச் சாம்ப லாகலாம். விரும்பாத ஒன்று வாழ்க்கையில் நடக்கும்போது, ஒன்று நீங்கள் கசப்பாகலாம், அல்லது இனிப்பாகலாம். கடவுள் நம்மை வைத்திருக்கும் சூழ்நிலையை விட்டு ஓடிப்போகக்கூடாது. கடவள் ஆகாரைத் திரும்பிப்போய் சாராளுக்கு அடங்கியிருக்கச் சொன்னபோது அவள் கர்த்தருக்கு, "நீர் என்னைக் காண்கிற தேவன்" எனப் பெயரிட்டாள். உங்களைக் கண்டவரை நீங்கள் காணுமிடம் அதுவாக இருக்கலாமே (ஆதி 16:13).

துவக்கத்திலிருந்தே மாமியார் மாமனார்ரைப் பிரியப்படுத்த முயற்சி யெடுங்கள். வயதானவர்களை மாற்ற முயலுவதை விட்டு நீங்களே அவர்கள் பழக்கவழக்கங்களுக்கு உங்களை மாற்றிக்கொள்வது நலம். முயற்சியு டையார் இகழ்ச்சியடையார். மாமியார் மாமனார் முதலாவது எதிர்பார்ப்பது மரியாதை. மாமியார் மாமனாருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று வேதம் கூறாவிடினும், முதியோரைக் கனம்பண்ணவேண்டும் என்று ஆணித் தரமாகக் கூறுகிறது. பணிவோடும் அன்போடும் பேசுங்கள். புண்படுத்தும் வார்த்தைகளைக் குத்தலாகவும் சிலேடையாகவும் பேசாதீர்கள். அத்தை, மாமா என்று பரிவோடு கூப்பிடுங்கள். ஏதோ சில காரியங்களைத் திருத்தினால் ஒப்பாரி வைக்காதீர்கள். சோம்பலைக் களைந்து சுறுசுறுப்பாக ஓடியாடி உதவி செய்யுங்கள். மாமியாரின் சமையலைப் பாராட்டுங்கள். கோபித்துக் கொண்டார்களானால் உடனே சமாதானப்படுத்துங்கள்.

பொதுவாக மாமியாரோடுதான் சண்டை வரும். மருண்டவள் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்தான். மாமியார் பொல்லாதவள் என்று எண்ணி விட்டால் அவள் தொட்டால் குற்றம், பட்டால் குற்றம் என்றாகிவிடும். தன் அருமை மகனைத் தியாகம் செய்தவராக அன்னாரைக் காணுங்கள். கனிதரும் காலத்தில் விற்கப்பட்ட மரத்தைப் போன்று வாயைக் கட்டி வயிற்றைக்கட்டிப் படிக்கவைத்து இனறு சம்பாதிக்கும் நிலையில் உங்க ளுக்குக் கொடுத்துவிட்டார்களே. ஒரே நாளில் அவர்கள் அன்பு பஸ்ப மாகிவிடாது. "என் மகனுக்கு அதெல்லாம் பிடிக்காது" என்பது இயற்கை யன்பின் வெளிப்பாடுதானே. தாயின் இதயத்துடிப்பைப் புரிந்துகொள்ள முயற்சியெடுங்கள். உங்கள் மகனைக் கொடுக்கும்போதுதான் உங்களுக்கு அது முழுமையாகப் புரியும்.

மாமியார் மாமனாரின் அருமையைப் புதிய மருமகள் அறிந்துகொள்வது நல்லது. "மாமியார் மகன்" என்ற முந்திய அத்தியாயத்தில் கூட்டுக் குடும்பத்தின் நன்மைகளைக் குறித்து எழுதிய பத்தியை இங்கே விரிவாக்க விரும்புகிறேன். நீங்கள் வெளியே வேலை செய்பவர்களானால் பிள்ளை

களை முன்பின் தெரியாதோரிடம் விட்டுச்செல்வதின் ஆபத்தை உணர வேண்டும். பேரப்பிள்ளைகளிடம் இயற்கையன்புடைய மாமனார் மாமியார் எத்தனைப் பெரிய ஆசீர்வாதம்! இளம் பெற்றோர் பிள்ளைகளை அறியாமையினால் கண்மூடித்தனமாக அடிக்கும்போது தாத்தா பாட்டியின் அரவணைப்பு அவர்கள் ஆவி முறியாதபடி காக்கிறது. குடும்பம் சிறுகச் சிறுக பிள்ளைகளுக்கு வீட்டில் பேச்சுத் துணைக்கும், விளையாட, வெளியே அழைத்துச்செல்லவும் ஆள் தேவை. பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்ட கேள்வித்தாள் ஒன்றில் மகிழ்வான இல்லம் என்பதென்ன என்பதற்குச் சிலாது பதில், "தாத்தா பாட்டி இருக்கும் இல்லமே மகிழ்வான இல்லம்'' என்பது! முதியோரை மூட்டைகட்டும் இச்சந்ததிக்குப் பாலகர் தரும் வெளிப்பாடு இது!

சில வேளைகளில் உங்கள் பாதுகாப்பிற்காகவும் பிரசவம் போன்ற இக்கட்டான சமயங்களிலும் அவர்கள் உதவி அத்தியாவசியம். மாமியார் மாமனாரை மறந்துவிட்ட மருமகள் மருளுவாள் அப்போது. மாமனார் மாமியாரை அவசரத் தேவைகளுக்குதவும் சிப்பந்திகளாகப் "பயன்படுத்துவதை'' அவர்கள் விரும்பார். அன்பும் கனமும் செலுத்தினால் மனமார உதவுவர். மணமாக வேண்டிய தங்கையோ படித்துக்கொண்டிருக்கும் தம்பியோ உங்கள் கணவருக்கு இருக்கலாம். சொத்தை விற்று மூத்தவனைப் படிக்க வைத்து வேலை தேடிக் கொடுத்த பெற்றோர் உதவி எதிர்பார்ப்பரல்லவா? அவனை நீங்கள் மட்டுமே சொந்தம் கொண்டாடுவது நியாயமா? நம் நாட்டிற்கே உரித்தான இச்சிக்கல்களைச் சிந்திப்பது உசிதம். பணத்தைவிட முதியோர் எதிர்பார்ப்பது பிள்ளைகள் பேரப் பிள்ளைகளின் சகவாசமே. நாயும் பூனையும் அவர்கள் ஏக்கத்தைப் போக்குமா?

வீட்டைத் திறம்பட நடத்த நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டியவைகள் அநேகம் உண்டு. கூட்டுக்குடும்பம் எதிர்காலத்திற்குப் பயிற்சி. "வசமாய் மாட்டிக்கொண்டோம்" என்று நினைப்பவள் மூஞ்சைத் தூக்கிக் கொண்டே தான் இருப்பாள். தன் சூழ்நிலையை ஏற்றுக்கொள்பவள் விட்டுக்கொடுத்து ஒத்துப்போவாள். தேவனது கிருபையினால் அது சாத்தியமே.

பெற்றோருக்கு மகன் அன்பு காட்டும்போது பொறாமைகொள்ளத் தேவையில்லை. பரிசுகள் கொடுக்கலாம், வந்தவுடன் சற்று அளவலாவலாம். அவர்களைக் கவனியாது விடமுடியாதல்லவா? அதுவேறு அன்பு, இது வேறு அன்பு. நீங்கள் மாமனார் மாமியாரைக் கனப்படுத்தி நேசிக்கும் வரை உங்கள் கணவர் சந்தோஷமாயிருக்கப் போவதில்லை. இருவருக்குமிடையில் சண்டை மூட்டிவிடாதீர்கள். மாமியாரைப்பற்றி அபத்தமான பொய்களைக் கணவனிடம் சொல்லும் மருமகள்களைக் குறித்தும் கேள்விப் பட்டிருக்கிறேன். மோசமல்லவா அது? என்னதான் நடந்தாலும் உண்மையையும் உத்தமத்தையும் காத்தால்தான் கர்த்தர் உங்கள் பட்சம். மெய்மறந்து பொய் பேசாதீர்கள்.

பதிலுக்குப் பதில் வார்த்தைகள் வீசாதீர்கள். அமைதியைக் கையாளுங்கள். அமைதியாயிருந்ததற்காகத் துக்கித்தவர் அநேகரில்லை. இது கணவனையும் மாமனார் மாமியாரையும் இளகச் செய்யும். எல்லாச் சச்சரவுகளையும் உங்கள் வீட்டிற்குப் பக்கம் பக்கமாக எழுதாதீர்கள். கோபித்துக்கொண்டு எதற்கெடுத்தாலும் அம்மா வீட்டில் அடைக்கலம் புகுவது ஞானமல்ல. வாழ்க்கையைத் தைரியமாய்ச் சந்திக்க வேண்டும். மாமியார் மாமனாரைக் குறித்து அக்கம்பக்கத்தில் புரளி பேசாதீர்கள். அவர்களைப் பற்றி கணவன் பிள்ளைகள் உள்ளத்தில் நஞ்சேற்றாதீர்கள். சொத்துத் தகராறில் கணவனை விட்டுக்கொடுக்கச் சொல்வதற்கேயன்றி மற்றபடி வாய்திறவாதீர்கள்.

“அவள் தீர்மானங்கள்” என்ற எனது புத்தகத்தில் “மருமகளின் தீர் மானங்கள்” என்ற அத்தியாயத்தை வாசித்து நினைப்பூட்டிக்கொள்வது நலம். தூங்கி வழிந்து வேதத்தை வாசிக்காமல் தோண்டித் துருவி வாசித்தால் அன்றாடத் தெம்பும் வழிநடத்தலும் தவறாமல் கிட்டும்.

மருமகளை மகளைப்போல பராமரிக்கும் மாமியார்களும் உண்டு. பிரசவத்திற்குத் தாய் வீட்டிற்குத் துரத்தாமல் தாங்களே பார்த்தும் உதவுவர். பணமல்ல, பெண்ணே அவர்களுக்கு முக்கியம். இரண்டாவதும் பெண்ணாகிவிட்டதே எனப் பயந்து நடுங்கும் மருமகளைத் தடவிக்கொடுத்து தைரியமூட்டுவர். வீட்டில் உதவுவர், பணமும் கொடுப்பர், பேரப்பிள்ளைகளைப் பராமரிப்பர், மருமகள் வேலைக்குச் சென்றால் வேலைக்காரிபோல் சமைத்துத் துடைத்து யாவையும் செய்வர். மகனை இழக்க கொடுத்த சிலர் மருமகளை மறுமணம் செய்ய ஊக்குவித்து ஏற்றத் துணையைப் பார்த்தும் கொடுத்துள்ளனர்.

மாமியார் ஈனமாக நடந்துகொண்டால்? தைரியமாக ஞானமாக வரம்பில் நிறுத்துங்கள். இதற்குக் கோபாவேசமடையவோ கெட்ட வார்த்தைகளைக் கொட்டவோ அவசியமில்லை. அன்போடும் கனிவோடும் தன்னுரிமையைக் காத்துக்கொள்ளுங்கள். அதுவும் முடியவில்லையா? மறுகன்னத்தைக் காட்டுங்கள். லகாய்ரோயீ!

மருமகளுக்கடியில் மாமியார்

எந்த நாணயத்திற்கும் இருபக்கங்கள் உண்டு. மாமியாரைக் கொடுமைப்படுத்தும் மருமகள்களுக்கும் கணக்கில்லை. சில மருமகள்கள் வீட்டை நடத்தினால் மாமியாரைப் பிச்சைக்காரி போல்தான் நடத்துவார்கள். கிறிஸ்தவ நற்பண்புகளை இங்கேதான் காப்பது அவசியம்.

குருவிப்புத்தியுள்ள பெண்கள் தாங்கள் நடத்தப்பட்ட விதத்திற்காக வயதான மாமியாரைப் பழிவாங்குவார்கள். குணசாலியான பெண்ணோ

பழையவைகளை மன்னித்து கிறிஸ்துவின் அன்பைப் பிரதிபலிப்பாள். திக்கற்றவர் என்பதினால் அவர்களைத் தூக்கியெறிந்து பேசாதீர்கள். தேவன் திக்கற்றவர்களின் தேவன். நல்ல உணவளியுங்கள். மருமகள் ஒருத்தி மாமியாருக்கு நாய் தட்டு போன்றதோர் தட்டில் சோறு போடுவாளாம். மாமியார் மரித்தபோது பேத்தி தட்டைக் கழுவித் துடைத்து வைத்துக் கொண்டாளாம். தாய் ஆச்சரியத்தோடு வினவியதற்கு மகள் பதில ளித்தாளாம், "உங்களுக்கு வயதானதும் சோறுபோடத் தட்டு வேண்டு மல்லவா அம்மா?" என்று! நீங்கள் மாமியாரானதும் எப்படி நடத்தப்பட விரும்புகிறீர்களோ அப்படியே உங்கள் மாமியாரை நடத்துங்கள்.

தனித்தியங்காதீர்கள். மாமனார் மாமியார் தெண்டம் என்பதுபோல் நடத்தாதீர்கள். வீட்டில் உதவி செய்யவிடுங்கள். நன்றி சொல்லுங்கள். மிரட்டாதீர்கள். தங்களுக்கு விருப்பமான ஆகாரத்தைச் சமைத்துக் கொள்ளத் தருணமளியுங்கள். வெளியே போக விரும்பினால் தடை செய்யாதீர்கள். போய் வந்தால் சுகதேகிகளாயிருப்பார்கள். தங்கள் நண்பரைத் தேநீருக்கோ விருந்திற்கோ அழைத்து வரட்டும். வேலைக்காரி போல் விரட்டக்கூடாது. தங்களால் முடிந்ததைச் செய்யட்டும். அவர்கள் வீட்டை விட்டு வெளியேறும்படியான சூழ்நிலையை உருவாக்காதீர்கள். "கிழம், தரித்திரம், பீடை, தொலைந்துபோகமாட்டேங்குதே" என வெளிப் படையாக சபிப்பவர்களும் உண்டு. மருமகள் வசைமாரி பொழியும்போது ஊமையைப்போல் கொடுமையைச் சகித்து முடங்கிக் கொள்ளும் மாமியார் எண்ணிக்கையை யார் அறிவார்? வேறு வழி?

சிறுமி ஒருத்தி பின்னாலிருந்து பாட்டியம்மாவின் கண்களை மூடினாளாம். பூரித்துப்போன பாட்டி ஏனென்று கேட்டதற்கு மாசற்ற பேத்தி, "நீ கண்ண மூடுனா நெறய பணம் வரும்னு அம்மா சொன்னாங்க" என்றாளாம். கொடுமை! இதுவும் கொலையல்லவா? (1 யோ 3:15; மத் 5:21,22). சொத்திற்காக அத்தே அத்தே என்று சுத்தி சுத்தி வரும் மருமகள்கள் பலர். உங்கள் அன்பு அடிநோக்கமுள்ளதாக இருக்கவேண்டாம். மாமனார் மாமியாரின் கடைசிச் சொட்டு இரத்தத்தையும் கடைசி பைசாவையும் உறிஞ்சி விட்டுத்தான் விடும் டிராகுலாக்களைக் குறித்து என்ன சொல்வது?

தனிக்குடித்தனமானால் அன்பான, உயிரோட்டமான கடிதங்கள் அடிக்கடி எழுதுங்கள். அழுக்குப் பேப்பரில் கிறுக்கிப் போடாதீர்கள். பெற்றோருக்கு எழுதுவதுபோல் எழுதுங்கள். அன்னாரது பிறந்த நாட்களையும் திருமண நாளையும் நினைவுகூர்ந்து வாழ்த்துதல் அனுப்புங்கள். கூடுமான பொழு தெல்லாம் சந்தியுங்கள். அவர்கள் விரும்பும் வெகுமதிகளைக் கொடுத்து அகமகிழச் செய்யுங்கள். வியாதிப் படுக்கையில் உதவி தேவைப்படும்போது வந்து தங்கி உதவத் தயங்காதீர்கள். அருகில் வாழ்வீர்களானால் உணவோ மற்றவையோ கொடுத்தனுப்புங்கள். சில பெற்றோர் வயதானாலும்

பலவீனமானாலும் மகனோடு தங்கத் தயங்குதல், மருமகளே அவர்களுக்கு உறுதி கூறி கூடவிருந்திருக்க அழைக்க வேண்டும். உங்களையே மையமாகக் கொண்டு சுழலும் உலகையே விரும்புவது சுயநலம். உண்மைப் பரவசம், சில அசௌகரியங்களையும் பொருட்படுத்தாது பிறரை மகிழ்விப்பதே. வயதான பெற்றோரையோ மாமனார் மாமியாரையோ பராமரிப்பவர்களின் பிசிறி நாள். எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களது நாட்களுக்கு பிறகு குற்றவுணர்வற்றவர்களாக இருக்கலாமே.

"உங்களுக்குத் தெரியாது" என்கிறீர்களா? நானும் பன்னிரெண்டு ஆண்டுகள் மாமியாரோடு வாழ்ந்தவள். சிக்கல்கள் இல்லாமலில்லை. இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கவும் பொறுத்துப் போகவும் வேண்டியிருந்தது. ஆனால் இருவரும் விடா முயற்சியோடு உறவைக் காக்கப் பாடுபட்டதால் அவர்கள் எங்களுக்கும் நாங்கள் அவர்களுக்கும் ஆசீர்வாதமாக முடிந்தது. ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவனது உள்ளத்தை அறிய மருமகள் ஆன்மீகத் தெளிவுடனிருக்க வேண்டும். தான் மாமனார் மாமியாருக்குச் செய்வது தவறா சரியா என்பதை ஆறாம் அறிவு அவளுக்கு உணர்த்தும்.

ஈசாக்கு ரெபெக்காளின் மருமகள்களான யூதீத்தும் பஸ்மாத்தும் அவர்களுக்கு மனநோவாயிருந்தார்கள் (ஆதி 26:34,35). ரெபெக்காளுக்கு உயிரோடிருப்பதே வெறுப்பாயிற்று (27:46). ரூத்தோ தன் மாமியாரை "விடாமல் பற்றிக்கொண்டாள்" (1:14). தேவனையன்றி வேறு எதற்காக அவள் ஓர் அநாதையைப் பற்றிக்கொள்ள வேண்டும்? போவாஸ் ரூத்திடம், "நீ உன் மாமியாருக்குச் செய்ததும்... எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்பட்டது. உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக... அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக" என ஆசீர்வதித்தான் (2:11,12). அது அப்படியே ஆனது.

மாமியார் மருமகளின் உறவைக் குறித்து தேவன் எத்தனைக் கரிசனையுள்ளவராயிருப்பாராயின் அதற்காகவே ஒரு புத்தகம் முழுவதையும் தனது புத்தகத்தில் ஒதுக்கியிருப்பார்! இருவரும் தமது வாழ்விற்கான தேவத் திட்டத்தோடு ஒத்துழைப்பரானால் அது எத்தனை சௌந்தரியமாகும் எனக் காட்டியுள்ளார். ரூத்தின் புத்தகத்தை வாசியுங்கள். திரும்ப வாசியுங்கள். நீங்கள் ஓர் ரூத்தாக மாறும் வரை திரும்பத் திரும்ப வாசியுங்கள். தேவன் நிறைவான பலனருள்வார். மருமகளாக அல்ல திருமகளாக மாற்றுவார்!

6

மணமுறிவு

முப்பது ஆண்டுகட்கு முன்னர் விவாகரத்து என்று கதைகளில்தான் வாசித்தோம். இன்றோ அது நம் சுற்று வட்டாரத்திலும் கிறிஸ்தவக் குடும்பங் களிலும், ஏன் நமது குடும்பங்களிலுமே, சர்வ சாதாரணமாகிவிட்டது. பரலோகத்தில் நியமிக்கப்படுவது நீதிமன்றத்தில் நிராகரிக்கப்படுவதா ? விவாகரத்து என்னும் பிசாசு நமது பூமண்டலத்தை ஆக்ரமித்துக்கொண்டி ருக்கிறது. மூன்று முடிச்செல்லாம் அந்தக்காலம்தான். கொக்கி வந்ததோ இல்லையோ, மாங்கல்ய உறவும் சுலபமாகக் கழலத் துவங்கிவிட்டது. ''திரு'' மணத்தின் சின்னமாகக் கருதப்பட்ட ''திரு''மாங்கல்யமும் இன்று பலருக்கு நாகரீகமாகத் தோன்றவில்லை. இன்னும் சிலர் பதிவு மணமென்றால் சுலபமாயிற்றே, சுலபமாக பிரிந்து விடலாம் என்றும் எண்ணுகின்றனர். அதாவது பிணைப்பின்றி எவ்வளவு இணைக்கப்படமுடியுமோ அதுவே நல்லதென எண்ணுகின்றனர். திருமணம் என்ன விரும்பியபடி சேருவதற்கும் பிரிவதற்கும் கண்ணாம்பூச்சி விளையாட்டா ? விவாகம் என்பது உங்களைப் ''ப்ரேம் கைதி'' ஆக்கும் சாவியற்றதோர் பூட்டு. மரணம் உங்கள் விடுதலை யாக்கும்வரை அன்பின் சிறைவாசி நீங்கள். இன்று பலர் மூர்க்கத்தனமாக இப்பூட்டை உடைத்துவிட்டுத் தப்பி ஓடுகின்றனர்.

முதல் நூற்றாண்டு பரிசேயரின் கொள்கையும் அதுதான். ''எந்த முகாந்தரத்தினாலாகிலும்'' தன் மனைவியைக் கணவன் தள்ளிவிடலாமா ? என வினவினர். முதல் சொல்லப்பட்டது எது எனும் விதியை அனுசரித்து இயேசு அந்த விவகாரத்தின் துவக்கத்திற்குச் சென்றார். ''ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை'' என்றார் (மத் 19:3,8). இதற்கு மேல் வேறென்ன விளக்கம் தேவை ? கணவனும் மனைவியும் பிரிக்கப்படுவது தேவனது

பரிபூரண சித்ததில் இல்லவே இல்லை. அவர்கள் ஒரே மாம்சமாகிறார்கள். ஆகவே மணமுறிவு ஒருவரை இரண்டு துண்டாக்குவதற்கு ஒப்பாகும். வேசித்தனம் செய்த தம் துணைவரை தள்ளிவிடவேண்டும் என்றும் இயேசு கட்டளை கொடுக்கவில்லை, அனுமதி அளித்தார். இந்த ஒரே காரணத் திற்காக மட்டுமே ஒருவர் தம் துணைவரை விட்டுப் பிரிய வேதம் சம்மதிக்கிறது.

கால் நூற்றாண்டிற்குமுன் ஆண்கள்தான் தம் மனைவியரைத் தள்ளி விட்டனர். இன்றோ கதை மாறிவிட்டது. இப்படிப்பட்டதோர் பெண்ணைத் தான் நீதிமொழிகள் 2:16இல் காண்கிறோம்: "தன் இளவயதின் நாயகனை விட்டு, தன் தேவனுடைய உடன்படிக்கையை மறந்து..."

திருமணம் என்றதும் மேகத்தில் பறந்து வானவில்லில் ஊஞ்சலாடும் கற்பனை நிறைந்த நவீனப் பாவையை இவள் நமக்கு நினைப்பூட்டுகிறாள். அவளது கனவுகள் கானல் நீராயின. தேன்நிலவு வரை சுபம்தான். அதன்பிறகு சின்னஞ்சிறு பிரச்னைகள் ஒவ்வொன்றாக எழும்பி அவளுக்கு வாழ்க்கையில் வெறுப்பூட்டின. ஒருநாள் இனித் தாக்குப்பிடிக்காது எனத் தீர்மானித்து மூட்டை கட்டிக்கொண்டுப் புறப்பட்டுவிட்டாள். அப்படித் தன் இளவயது நாயகனை விட்டுப் பிரிந்துபோகும்போது தன் தேவனோடு செய்த உடன் படிக்கையை உடைப்பதை அவள் உணரவில்லை.

மனைவியை "உடன்படிக்கையின் மனைவி" என்று குறிப்பிடுகிறார் தேவன் (மல் 2:14). ஒரு ஆணும் பெண்ணும் பரிசுத்த தேவனது சந்நிதியில் உடன்படிக்கை செய்கின்றனர். அதற்கு தேவனே சாட்சி. எனவேதான், "தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்" (மல் 2:16). கர்த்தர் பரிசுத்தத்தைச் சிநேகிக்கிறவர் என்று இச்சந்தர்ப்பத்தில்தான் கூறப்பட்டுள்ளது (2:11).

வாழ்வே தேன் நிலவுதான் என்று மணமானவள் எண்ணிவிடக்கூடாது. ரோஜா மலர் படுக்கையிலும் முள்ளுகளுண்டு என்பதை அவள் மறந்து விடக்கூடாது, "வாழ்விலும் தாழ்விலும்" என்று அவள் வாக்களிக்க வில்லையோ? உண்மை நிலையைச் சந்திக்க அவள் ஆயத்தமாயிருக்க வேண்டும். எந்தப் பெண்ணின் வாழ்விலும் தான் அநாதை போல் உணர்ந்து தன் பெற்றோரை நினைத்து ஏங்கும் நாட்கள் இல்லாமலிருக்காது. தனிமையில் கண்ணீர் சிந்தவோ சத்தமிட்டுக் கதறவோ இடமிருக்காது. தகப்பன் பெண்ணைக் ஸ்கைப்பிடித்துக் கொடுத்துவிடுகிறார். இங்கேதான் கர்த்தர், "உன் தாயும் உன் தகப்பனும் உன்னைக் கைவிட்டாலும் நான் உன்னைக் கைவிடுவதில்லை" எனப் பொறுப்பேற்கிறார். சூழ்நிலைகளை

விட்டு ஓடுவதினால் நாம் சாதிப்பது ஒன்றுமில்லை. குடும்பத்தைச் சீர்குலையாமல் ஒருங்கிணைத்துக் காப்பது பெண்ணின் பொறுப்பு. திருமணங்கள் பரலோகத்தில் நியமிக்கப்படலாம்; ஆனால் அவை பூலோகத்தில் நிலைத்திருக்கச் செய்யவேண்டும்.

ஒரு பெண் நூற்றுக்குநூறு தெரிந்த ஒருவரை மணமுடிக்க எதிர்பார்க்க முடியாது. சொல்லப்போனால் அப்படியொருவரை மணப்பதில் புதுமை என்ன இருக்கிறது? நம் நாட்டில் முன் பின் தெரியாத ஒருவரை மணப்பதே மரபு. மணந்தபின்தான் தன் வாழ்வில் நுழைந்தவரை அறியத் துவங்குகிறாள். நற்குணங்கள் பல தெரிகின்றன. அதோடு சகிக்கமுடியாத சில குணங்களும் தென்படுகின்றன. நாளாக ஆக அதிர்ச்சியூட்டும் உண்மைகளும் புலனாகலாம். கணவர் குடிகாரராகவோ சோம்பேறியாகவோ பேராசை பிடித்தவராகவோ இருக்கலாம். கூட்டுக் குடித்தனமானால் ஆட்டிப்படைக்கும் மாமியாரும் எடுத்ததற்கெல்லாம் குறைகூறும் மதனியும் கூடுதல் பாரம்தான்.

பொதுவாக மனைவி தனது கணவனது கண்ணோட்டத்தில் தன்னைப் பார்க்கத் தவறுகிறாள். கணவனிடத்தில் எத்தனை குற்றங்கள் உண்டோ அத்தனை குற்றங்களும் மனைவியிடத்திலும் இருக்கும்; ஒருவேளை பெண்ணே எல்லாச் சிக்கல்களுக்கும் காரணமாகவும் இருக்கக்கூடும். அவளோ தன்னைப் பரிசுத்தவாட்டியென எண்ணிக்கொள்ளுகிறாள். காரியம் என்னவென்றால் இருவரது வேறுபட்ட மனப்பான்மைகள் மோதும் போது பறக்கும் தீப்பொறிகள்தான் அவர்களது மணவாழ்வையே கொளுத்திவிடுகிறது.

உங்களை போன்ற ஒருவரை திருமணம் செய்திருந்தால் எப்படி இருக்குமென சற்று அமைதியாக உட்கார்ந்து நிதானித்துப் பார்த்தால் நன்றாக இருக்கும். நீங்கள் கணவனது இடத்திலிருந்தால் உங்கள் மனைவி இதை உங்களுக்குச் செய்யும்போது எப்படி இருக்கும்? இதைத்தான் இயேசு வேறு வார்த்தைகளில் சொன்னார். உங்கள் கணவர் உங்களுக்கு எதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதை நீங்கள் உங்கள் கணவருக்குச் செய்யுங்கள். அவர் உங்களை எப்படி நடத்த விரும்புகிறீர் களோ அப்படியே அவரை நடத்துங்கள். அவர் உங்களுக்கு எதைச் செய்யக் கூடாது என்று எண்ணுகிறீர்களோ அதை எக்காரணத்தை முன்னிட்டும் அவருக்குச் செய்யாதீர்கள்.

இல்லறத்தை இணைத்துப் பிடிப்பதில் பெண்ணுக்குத்தான் பொறுப்பு அதிகம். ஏனெனில் விவாகரத்து அதிகமாகப் பாதிப்பது அவளையே.

பொதுவாகக் கணவன் மறுமணம் செய்து ஒன்றுமே நடவாததுபோல் வாழ்க்கையைத் தொடருகிறான். ஆனால் மனைவிக்கோ பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கவேண்டிய பொறுப்பு. வேலை வாய்ப்புகள் குறைவு. வேலை செய்து சம்பாதித்தாலும் வயதான பெற்றோருக்கு பளுவாகிறாள். நீதிமன்றத்திற்கு நடந்து செருப்பு தேய்வதுதான் மிச்சம். யாரும் அவளை சந்தேகக் கண்ணோடுதான் பார்க்கின்றனர். பிள்ளைகள் தங்கள் நிலைக்கு அவளையே குற்றஞ்சாட்டலாம். இன்னும் இப்படி எத்தனையோ!

உள்ளும் புறமும் ஆக்ரமிக்கும் தனிமைக் கொடுமை. உங்கள் சுக துக்கங்களைப் பகிர்ந்துகொள்ள யாருமில்லை. பாதுகாக்கும் கரங்களில்லை. வீட்டில் பெயருக்கு ஓர் ஆண் அரவாட்டம் கூட இல்லை. இப்பொழுது, நீங்கள் நேசிக்கும் இந்த மனிதனை ஏன் வெறுக்கிறீர்கள் என்று உங்களுக்குப் புரியாது. பிரிந்த பிறகோ நீங்கள் வெறுக்கும் இந்த மனிதனை ஏன் நேசிக்கிறீர்கள் என்று அதிசயிப்பீர்கள். தனிமையில் தத்தளிக்கும்போது கிடைத்த துரும்பைப் பற்றிக்கொள்ள ஒருவரோடு பழகுகிறீர்கள். அதுவோ தவறான உறவாக உருவெடுக்கிறது (நீதி 2:17). அதைத் தொடரும் குற்றவுணர்வு. சோதனைகளுக்குச் சுலபமான குறியாகிறீர்கள். தனிவாழ்வு நீங்கள் நினைப்பதுபோல சுலபமல்ல. விவாகரத்து தீர்க்கும் சிக்கல்களைவிட உருவாக்கும் சிக்கல்களே அதிகம்.

இதெல்லாம் பிசாசு உங்கள் இருதயத்தில் விதைக்கும் கடுகுவிதைக்கு ஒப்பான ஒரு வித்திலிருந்தே தோன்றுவது. "தவறானவரைத் திருமணம் செய்து விட்டேனோ?" என்றதோர் எண்ணம்தான் அது. விழித்துக்கொண்டு உடனே அவ்வெண்ணத்தை மிதித்து அதமாக்காவிடில் பிசாசு அதற்கு நீர் வார்க்கிறான். இரகசியமாக உள்ளுக்குள்ளே வளருகிறது. ஒருநாள் அடி தடியில், "இருந்திருந்து உங்களைப்போய் கட்டிக்கொண்டேனே, எத்த னையோ நல்ல வரன்கள் வந்தன" எனக் கொட்டிவிடுகிறீர்கள். நஞ்சுவிதை முளைவிட்டு நெளிந்து இருதயத்திற்கு வெளியே வந்துவிட்டது. இன்னும் கவனிக்காமல் விட்டால் அது வளர்ந்து வளர்ந்து உங்கள் திருமணத்தையே நெறித்துவிடும் விஷக் கொடியாகிவிடும். முதல் முதல் விவாகரத்து என்ற வார்த்தையைத் தயக்கத்தோடு உச்சரிக்கிறீர்கள். ஒன்றிரண்டுமுறை சொன்னதும் மிடுக்காகத் தைரியமாகச் சொல்லுகிறீர்கள். திடீரென்று எல்லாம் முடிந்துவிட்டது. உங்கள் பிடிவாதத்தைச் சாதித்துவிட்ட முஸ்தீப் நாளடைவில் மங்க மங்க, தனிமை கரையானை போல் உள்ளுக்குள் குடியேறுகிறது. செய்ததைச் சிந்தித்துப் பார்க்கிறீர்கள். அவசரப்பட்டுச் செய்துவிட்டேனே என அங்கலாய்க்கிறீர்கள். ஆனால் பிந்திப்போய்விட்டது. கடிகாரம் பின்னாலே நகராது. உங்கள் குடும்பமனைத்தின் மேலும் மண்ணெண்ணெயை ஊற்றித் தீக்குச்சை உறசி எறிந்துவிட்டீர்கள்!

நீங்கள் தவறானவரை மணந்துவிடவில்லை என்று முதலில் நான் உங்களைத் தைரியப்படுத்தட்டும். பிசாசு உங்களை ஏமாற்ற விடாதீர்கள். எல்லாத் தம்பதியருக்குள்ளும் சிக்கல்கள் உண்டு. திருமணம் என்பது அன்பென்னும் ஒரே தூணின்மேல் கட்டப்படுவதல்ல. அர்ப்பணிப்பு என்ற தோர் பலமான உறுதியான தூணுமுண்டு. கால்தூசிக்கும் பெறாத காரணங் களுக்காகத் தம்பதியர் பிரிந்துவிடுகின்றனர். காதலிக்கும்போதிருந்த கிளர்ச்சி காலுக்கு கட்டுப்போட்டபின் இருக்காது. காதல்தான் வாழ்விற்கு அடிப்படை என்றால் காதல் மணங்களெல்லாம் நிலைக்க வேண்டுமே. ஆனால் அர்ப்பணிப்பு இருக்குமானால் எந்தத் திருமணமும் கொந்தளிக்கும் கடலிலும் நங்கூரமிட்டக் கப்பலென நிதானமாயிருக்கும். முற்காலத்தில் ஏன் தம்பதிகள் விவாகரத்து செய்துகொள்ளவில்லை. அவர்கள் நம்மைக் காட்டிலும் திருமணத் தத்துவங்களை அதிகமாகக் கற்றவர்களா? இல்லாவிட்டால் அக்காலத்தில் சிக்கல்களே இல்லையா? மிக எளிய இரகசியம் இதுதான்: அவர்கள் விவாகரத்தைக் குறித்துச் சிந்திக்கவே இல்லை.

ஈசாக்கு செய்ததுதான் சரி. ரெபெக்காளைத் "தனக்கு மனைவி யாக்கிக்கொண்டு, அவளை நேசித்தான்" (ஆதி 24:67). கவனிக்க, 'அவளை நேசித்து மனைவியாக்கிக்கொண்டான்' என்றில்லை. அர்ப் பணிப்பைத் தொடர்ந்தே அன்பு வருகிறது. கணவராக உங்கள் வாழ்வில் ஏற்றுக்கொண்டவரை நேசிக்கப்படியுங்கள்.

அமைதியான கடலில் அழகிய படகெனச் செல்லும் வாழ்வு திடீரென சுழலில் சிக்கித் தவிப்பது அபூர்வமல்ல. சூழ்நிலையை விட்டு ஓடுவதற்கு மாறாக சற்றே அமைதியாகுங்கள். ஆவியை அடக்குங்கள். காரியத்தை தேவனது கரத்தில் ஒப்புக்கொடுங்கள். சூழ்நிலையைச் சந்திக்க ஆயத்தப்படுங்கள். ஞானமாக விவேகமாக பொது அறிவைப் பயன்படுத்தி செய்யவேண்டியதைச் செய்ய முற்படுங்கள். ஒத்தாசைவரும் பர்வதங் களுக்கு நேராகக் கண்களை ஏறெடுங்கள். தம் கணவருக்காக ஜெபத்தில் போராடி ஜெயங்கொண்ட ஞானப் பெண்மணியரின் பெயர்களைப் பொறிக்கப் போனால் சரித்திரத்தில் ஏடுகள் கொள்ளாது. நின்றே தீருவது என்று உறுதி பூண்டுவிட்டால் சூழ்நிலையைச் சமாளிக்கக் கால்கள் கரண்கொண்டுவிடும். கொஞ்சம் பொறுத்திருந்தால் மலையான பிரச்னை களும் பனியெனக் கரையத் துவங்கும்.

சர்வாதிகாரியான மாமியாரையும் சண்டைச் சேவலான நாத்தனாரையும் தகப்பன் வீட்டிலில்லாத பணத்தட்டுப்பாட்டையும் சகிக்கமுடியாமல் தாய்வீடு திரும்பிய மூடப்பெண்ணைப் பாருங்கள். சில ஆண்டுகளில் நாத்தனா

ருக்குத் திருமணமானது. அருமைத் தாயார் பூவுடல் நீத்தார்கள். கணவனுக்குப் பதவியுயர்வு கிட்டியது. ஆனால்! ஐயோ பாவம். அதற்குள் கணவர் மறுமணம் செய்துவிட்டார். சிக்கல்கள் வராமலிருக்காது. ஆனால் குடும்ப வாழ்வில் நீங்களும் கணவனுமாக வளர்ந்து தேறி வரும்போது இவைகள் தேய்ந்து மறைந்து போகும்.

திருமணமானபிறகு திரும்பிப் பார்க்கக்கூடாது. சரியான கணவனைக் கண்டுபிடிப்பது மட்டுமல்ல காரியம்; சரியான மனைவியாகவும் இருக்கத் தெரியவேண்டும். நீங்களும் விடக்கூடாது; கணவனும் விட்டுச் செல்ல விடக்கூடாது. நீங்களும் உறுதியாயிருக்கவேண்டும்; கணவனும் உறுதி யாயிருக்க ஒத்தாசை புரியவேண்டும். ஒன்றுமில்லாத காரணத்தினால் திருமணம் உடைந்துபோகலாம். இல்லையேல் பூகம்பத்தையும் தாங்கி நிலைத்திருக்கலாம். உங்கள் கையில்தான் இருக்கிறது.

நேசம் மரணத்தைப்போல் வலியதானால், அது ஜீவனுள்ளளவும் நீடித்திருக்கவேண்டும். அன்பு ஒருக்காலும் ஒழியாததானால், திரளான தண்ணீர்கள் அதை அவிக்கமாட்டாது, வெள்ளங்கள் போன்ற பிரச்னைகளும் அதைத் தணிக்கமாட்டாது (உன் 8:6,7; 1 கொரி 13:8).

விவாகரத்து என்னும் இருண்ட தேசத்தில் வேதனை ஒன்றே உங்கள் துணை, தனிமை ஒன்றே உங்கள் நண்பன், கடினமான பாடங்களே உங்கள் நிழல். எனவே முடிவெடுக்குமுன் இருமுறையல்ல, மும்முறை யோசியுங்கள்!

7

தாயும் சேயும்

நீதிமொழிகள் முதல் அத்தியாயத்திலேயே அன்னை எனும் அபாரப் பெண்ணைச் சந்திக்கிறோம். அவள் தட்டித் தடுமாறும் பலவீனப் பாண்டமாக அல்ல, பிள்ளைகளின் போதகராக அறிமுகப்படுத்தப்படுகிறாள். வீட்டிற் குள்ளும் வேண்டாத வேலைக்காரியாக அல்ல, சட்டம்போடும் இல்லத் தரசியாகத் தோன்றுகிறாள்! ''என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே'' (வச 8).

தாயின் கடமைகள் அவளை உருக்கிவிடக் கூடியவை. ஆனால் தாய்மை யில் மேன்மையுண்டு. ''தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளை'' கனவானாக வளருவதில்லை. அவன் ''வளர்க்கப்பட'' வேண்டும். ''பிள்ளைகளை வளர்த்து'' (1 தீமோ 5:10). ஒவ்வொரு பிள்ளையிலும் ஒரு பக்கம் தேவ சாயலைக் காணும்போதே மறுபக்கம் பிசாசின் சாயலையும் காணலாம். தேவ சுபாவத்தைப் பேணி வளர்த்து தீய சாயலைப் புடைத்து எடுத் தெறிதலே தாயின் புனித சேவையாகும். தகப்பன் புத்தி சொல்லி வெளியே போய்விடுவார். தாயோ மீந்த பொறுப்புகளனைத்தையும் தானே சுமக்க வேண்டியவளாகிறாள். தன் பொறுப்பில் தவறுவாளானால் அவளே அவ மானத்தின் பெரும்பகுதியையும் சுமக்க வேண்டுமென்பது ஊரறிந்த உண்மை. ''பிரம்பும் கடிந்துகொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும்; தன் இஷ்டத்திற்கு விடப்பட்டப் பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறான்'' (நீதி 29:15). அவமானமோ அகமகிழ்வோ அன்னை யையே சாரும்.

மலைபோன்ற பணிக்கான பயிற்சியைப் பெற தமது குமாரனாகிய இயேசுவைத் தேவன் மனிதப் பெற்றோரின் கரங்களிலேயே நம்பி ஒப்ப

டைத்திருந்தார். தாயின் கனவாம் பார்போற்றும் மகனாய் அவர் தாமாய் வளர்ந்திடவில்லை. அவரது வார்த்தைகள் கிருபை நிறைந்தவையாக இருந்தால் அவருக்குப்பின் "தயையுள்ள போதகத்தை நாவில்கொண்ட" ஒரு தாய் இருந்தாள் என்பதை மறுக்க முடியாது (நீதி 31:26). அவர் பலமுள்ளவரானால் ஊட்டி வளர்த்துப் பயிற்றுவித்த கரங்கள் பின்னே இருந்தன.

"பின்பு அவர் அவர்களுடனே கூடப் போய் நாசரேத்தூரில் சேர்ந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அவரது தாயார் இந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்துக்கொண்டாள். இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்" (லூக் 2:51,52).

பன்னிரெண்டு வயதிற்கு முன்பே இயேசு இவ்வருங்குணங்களை உடையவராயிருந்தார் (வச 40). வாலிபமெய்தும் நாட்களிலும் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருக்கத் தெரிந்துகொண்டபடியால் அவைகளிலே விருத்தியடைந்தார். பெற்றோர் அவரை இப்பாதையில் பயிற்றுவித்து வளர்த்தனர் என்பது இவ்வசனத்திலிருந்து உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகிறது. அவர் கீழ்ப்படிதலைக் "கற்றுக்கொண்டார்" (எபி 5:7). அவரது தாயாகிய மரியாள் லூக்கா 2:40இல் குறிப்பாக இடம்பெறுகிறாள். ஒரு பிள்ளையின் இந்த நாற்பரிமாண வளர்ச்சியை சற்று நோக்குவோம்.

1. அறிவு வளர்ச்சி

"இயேசுவானவர் ஞானத்தில் விருத்தியடைந்தார்."

ஞானம் புத்தகங்களிலிருந்துதான் வரவேண்டும் என்பதல்ல. 2000 அல்லது 3000 ஆண்டுகளுக்கு முன்னரே, நாமோ நமது பிள்ளைகளோ இன்று படிக்குமளவு படிக்காமலேயே நம்மைவிட ஞானவான்களாக இருந்தோர் உண்டு என்றறிவோமே. "அப்பொழுது யூதர்கள், இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார் என்று ஆச்சரியப்பட்டார்கள்" (யோ 7:15). ஆனால் அவர் தேவாலயத்தில் தோல் சுருளை எடுத்து வாசித்தார் என்றறிவோம். தமது தோழர்களைவிட சிலாக்கியம் பெற்றதும் அவரது பெற்றோரின் அயரா முயற்சியேயன்றி வேறென்ன ?

கற்றல் பிறப்பிலிருந்தே துவங்குகிறது. ஒரு சிசுவின் மூளை சுத்தமான சிலேட்டிற்குச் சமானம், அதில் காரியங்கள் பதியத் துவங்குகின்றன. பிள்ளை

தானாகச் செய்யுமானால் சீக்கிரம் கற்றுக்கொள்ளும். அவனது கேள்விகளுக்கு முடிந்த அளவு விடைகொடுங்கள். அவன் பார்க்கட்டும், கேட்கட்டும், கவனிக்கட்டும், ஆராயட்டும். அவன் வளர வளரக் கொஞ்சம் கொஞ்சமாகக் கற்றுக்கொடுங்கள். வெளியுலகைக் கூர்ந்து கவனிக்க அவனை வெளியே அழைத்துச் செல்லுங்கள். அவனது பொது அறிவு வளரட்டும்.

இத்தலைமுறைப் பிள்ளைகளுக்குக் குழந்தைப் பருவமே இல்லாது போய்விட்டது. பட்டாம்பூச்சி பிடிக்கும் பருவத்தில் பள்ளியில் படிக்கிறார்கள். சீக்கிரம் அவனை ஒரு பாலர் நிலையம், பாலர் பள்ளி அல்லது ஒரு விடுதியில் சேர்த்துவிட்டால் பொறுப்பு தொலையும் என எண்ணாதீர்கள். சீக்கிரம் படிக்க அனுப்பி வேகமாகத் தள்ளிக்கொண்டு போவதே நவீனப் பித்தாகிவிட்டது. அதற்குப் பலியாகிவிடாதீர்.

உங்கள் பிள்ளைகளை வெறுமனே கல்வியறிவுள்ளவர்களாக்காமல் முழுமையாக வளர்க்கக்கூடிய பள்ளியாக தெரிந்தெடுங்கள். ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களாகவும் பிள்ளைகளைப் புரிந்துகொண்டு மகிழ்வுடன் நடத்தக் கூடியவர்களாயுமிருக்க வேண்டும். பாலர் பள்ளியிலேயே ட்யூஷன் வைக்காதீர்கள். பிள்ளைகள் மாலையிலே விளையாடவேண்டும். வார யிறுதியை மகிழ்வாய் அனுபவிக்கவேண்டும். அவர்களோடு உட்கார்ந்து பொறுமையாக மெதுவாகப் பாடம் கற்பியுங்கள்.

அவர்கள் பார்த்துப் படிக்கட்டும். ஒரு நாள் என் மகளோடு மழையில் வீட்டைச்சுற்றி நடந்துகொண்டிருக்கையில் தவளை முட்டையைக் கண்டு பிடித்ததால் பரவசமடைந்தேன். அம்முட்டையை ஒரு பாத்திரத்தில் போட்டு விஞ்ஞான ஆசிரியையிடம் கொடுக்க அனுப்பினேன். மகள் ஏமாற்றத்தோடு திரும்பிவந்தாள். ஆசிரியை அதில் ஆர்வம் காட்டாமல் உடனே வெளியே எறிந்துவிடும்படி கூறினார்களாம். தவளை முட்டையையே பார்க்காமல் விலங்கியல் பட்டதாரிகளாகக்கூடிய அப்பிள்ளைகளுக்காக என் மனம் தவித்தது. பிள்ளை பள்ளியில் எல்லாவற்றையும் கற்றுக்கொள்ள எதிர்பார்க்காதீர்கள். பிள்ளைக்கு வீட்டில் கிட்டக்கூடிய சிலாக்கியமாகிய பாசமான தனிக்கவனிப்பைப் பள்ளி தர இயலாதே. செடியைப் பிடுங்கி வேரைக் காட்டுங்கள். பூவை, பழத்தை வெட்டி விளக்குங்கள். முட்டையை உடைத்து கருவையும் காற்றறையையும் காண்பியுங்கள். அவர்கள் வண்ணத்துப் பூச்சிப் புழுவையோ, பொன் வண்டையோ வளர்க்கட்டும். வசதியானால் நாயோ பூனையோ வளர்க்க அனுமதி கொடுங்கள்.

பிள்ளையைப் பல்வேறு இடங்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் அறி முகப்படுத்துவதினால் அவன் நடைமுறை அறிவில் வளருவான். சந்தை, கோவில், பூங்கா, கண்காட்சி, மிருகக்காட்சி சாலைக்கெல்லாம் அழைத்துச்செல்லுங்கள். வழியில் பாம்பாட்டியைப் பார்க்கவோ தெருக்கூத்தைப் பார்க்கவோ நின்றுவிட்டால் சற்று தாமதியுங்கள். அவனும் மக்களின் நிலைமை அறியட்டும். "பால் எங்கிருந்து கிடைக்கிறது?" என்ற கேள்விக்கு, ஒரு பிள்ளை "புட்டியிலிருந்து" என்று விடையளித்தானாம். நவீன முன்னேற்றங்கள் பிள்ளைக்கும் இயற்கைக்கும் இடையே பெரும் பிளவை உண்டு பண்ணிவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். "ஞானமுள்ள பிள்ளையை பெற்றவள் மகிழுவாள்" (நீதி 23:24,25).

2. உடல் வளர்ச்சி

"இயேசுவானவர் வளர்த்தியில் விருத்தியடைந்தார்."

பிள்ளையின் வளர்ச்சிக் குறிகளைத் தாய் அறிந்திருப்பது நல்லது. இதுபோன்ற கட்டுரையில் எல்லாம் எழுதுவது சாத்தியமல்ல. சீராக பிள்ளை வளர்க்க சிரத்தை எடுக்கும் ஒவ்வொரு தாயும் ஓரளவு ஆங்கிலம் தெரிந்திருந்தாலும் Dr. Benjamin Spock எழுதியுள்ள Baby and Child Care என்ற புத்தகத்தை வாசிக்கக் கேட்கிறேன். பிள்ளைகளை வாலிப வயது வரை வளர்க்கத் தேவையான சிறந்த விளக்கமான ஆலோசனை களடங்கியது இப்புத்தகம். உங்களுக்குத் தெரிந்த தாய்மாருடன் அதி லுள்ள கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.

குழந்தை உணவுகளை குறித்த மூடப்பழக்கங்கள் அநேகம். பலர் தாய்ப்பாலைவிட பால் பவுடரே நல்லதென நம்பி பணத்தை வீணே பவுடர் பாலிலும், ஹார்லிக்ஸ், டானிக் என்றும் செலவழிக்கின்றனர். எக்குழந் தைக்கும் என்றும் தாய்ப்பாலே சிறந்தது. குறைவாக தெரிந்தாலும் விடாமல் கொடுக்கவேண்டும். அது தாயின் நலனுக்கும் நல்லது. அதிலுள்ள எதிர ணுக்கள் குழந்தைக்கு சில வியாதிகள் வராமல் தடுக்கின்றன. சிநேகிதி களோ, மற்றவரோ உங்களை ஊக்கமிழக்கச் செய்யவிடாதீர்.

சுமார் ஆறு மாதத்தில் தாய்ப்பாலுடன் ஒரு டம்ளரில் சிறிது பசுப்பாலோ ஆரஞ்சு பழச்சாறோ கொடுக்கலாம். பேதியைத் தவிர்க்க புட்டியைவிட டம்ளரே மேலானது. பின்பு வாரமொன்றாக புதிய உணவுகளை ஒவ் வொன்றாகச் சேர்க்கலாம்.

சம்பாதித்துக்கொடுப்பது தகப்பன், சமைத்தக்கொடுப்பது தாய். எனவே சத்துணவுகளைக் குறித்து தாய் அறிந்திருக்கவேண்டும். "இருட்டோடே

எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரங்கொடுக்கிறாள்'' (நீதி 31:15). சமத்துவ சத்துணவைக் கொடுப்பது தாயின் கடமை. சமைக்காத பழம், காய்களில் ஊட்டச்சத்து ''C'' உள்ளது. அது வியாதியைத் தடுக்கும். காய்கறிகள், கீரை வகைகள், கனிகள், பருப்பு, தானிய வகைகள், பயறுகள், முட்டை, இறைச்சி, மீன் யாவும் கொடுத்துப் பழக்குங்கள். பிள்ளை போதும் என்றபின் கட்டாயமாகத் திணிக்காதீர்கள். குழந்தை பருமனாயிருக்க அவசியமில்லை. இனிப்பு எண்ணைப் பலகாரங்களை அதிகமாகக் கொடுப்பது உடல் பரும னுக்கும், சர்க்கரை நோய்க்கும், சொத்தைப் பல்லுக்கும் நடத்தும். முளை கட்டிய பயறுகள், கடலை, பழங்கள் போன்றவை இடைவேளைகளுக்கு ஏற்றவை. ஆகாரத்தை வீணடிக்காதிருக்கப் பழக்குவியுங்கள்.

பிள்ளையை எப்பொழுதுமே தூக்கியே சுமக்காதீர்கள். அவனுக்குள்தான் எரிமலை போன்ற சக்தி இருக்கிறதே. அவன் உங்களோடு நடக்கட்டும். சில தாய்மார் பிள்ளைகளை மண்ணில் விளையாட விடுவதே இல்லை. இந்நாட்களில் பிள்ளைகள் ஒரு ட்யூஷனிலிருந்து மறு ட்யூஷனுக்கு விரட்டப்படுவதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. தங்கள் கற்பனை களைப் பயன்படுத்தவும் விளையாட்டுப் பிள்ளைகளாயிருக்கவும் குறும்பு செய்யவும் அவர்களுக்கு நேரம் வேண்டாமா ? பிள்ளைகளைப் பார்த்துக் கோபப்படாதீர்கள், பூரிப்படையுங்கள். விளையாடி முடிந்தபின் குளிப்பாட்டி விடலாமே. ஒரு தாய்க்குக் காளைபோல் உழைக்கவும், கன்றுபோல் விளை யாடவும் தெரிந்திருக்கவேண்டும்.

பிள்ளைகள் விளையாட்டுகளிலும் போட்டி பந்தயங்களிலும் சேரட்டும். வீட்டு வேலைகளிலும் அவர்களுக்குப் பங்களியுங்கள். அவர்களது உற்சாக ஆவியை அணைத்துப்போடாதீர்கள். நீச்சல் படிக்க விரும்பினால், ''ஐயய்யோ, மூழ்கி விடுவாய்'' எனத் தடை செய்யாமல் தேவையான பாதுகாவலோடு அனுமதி அளியுங்கள். வாழ்க்கையில் தைரியம் வேண்டும்.

சுமார் 11 வயதில் ஒரு பெண் பிள்ளையைப் பருவம் எய்த ஆயத்தப் படுத்துவது நல்லது. அதைக் குறித்து பயமோ, அருவருப்போ, கவலையோ அடையாமல் வளர்ச்சியின் அறிகுறியாய் மகிழ்வோடு அவள் எதிர்பார்க் கட்டும். கருப்பை குழந்தையை வளர்க்க ஆயத்தமாகிறது எனச் சொல்லிக் கொடுங்கள். தீட்டு நாட்களிலும் அவள் எல்லா நாட்களைப்போல எல்லா காரியங்களிலும் ஈடுபாடு கொள்ளலாம். பையன்கள் சுமார் 11 வயதெய்தும் போது இராக்கனாக்களைக் குறித்தும் கழிவைக் குறித்தும் சொல்லப்படுவது நல்லது. இவை இயற்கை என்றறிவதினால் அவன் வீணே குற்றவுணர் வடைவதிலிருந்து தவிர்க்கப்படுவான்.

ஆதாயத்தைக் குறியாகக் கொண்ட மருத்துவர்கள் உங்கள் அருமைக் குழந்தைக்கு சிறு தும்மல், சளி என்றாலும் ஒரு ஊசி போட்டு இருபத்தைந்து ரூபாய் வாங்கிக்கொள்வர். நம்பகமான வைத்தியரிடம் மட்டுமே செல்லுங்கள். தேவையானால் மட்டுமே மருந்து கொடுங்கள். மருந்தைக் குறித்த சந்தேகம் இருக்குமானால் தைரியமாகக் கேளுங்கள். பதிலளிக்க மறுப்பாரானால் அமைதியாகப் பேசி விளக்கக்கூடிய மருத்துவரிடம் செல்லுவது நல்லது. சந்தேகமானால் இரண்டாவது மருத்துவர் ஒருவரது ஆலோசனையையும் கேட்பதில் தவறொன்றுமில்லை. குழந்தையின் நலனே முக்கியம்.

3. ஆன்மீக வளர்ச்சி

"இயேசுவானவர் தேவ கிருபையில் விருத்தியடைந்தார்."

பிள்ளைகளுக்கு மார்க்கத்தைக் கற்பிக்கக் கூடாது; வளர்ந்தபின் அவர்களே தெரிந்துகொள்ள வேண்டும் என்ற நவீனக் கொள்கை நாசம் விளைவிக்கும். பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டுமானால் மதமும் கற்பிக்கப்படத்தான் வேண்டும். ஒருமுறை கோவிலுக்கு ஒழுங்காகச் செல்லும் 5 வயதும் 7 வயதுமான இரு கிறிஸ்தவக் குழந்தைகளை "நமது கடவுளின் பெயர் என்ன?" என்று கேட்டேன். அவர்களுக்கு தெரியாதது கண்டு வியந்தேன். சற்று யோசித்துப் பதில் சொல்ல அவர்களை ஊக்குவித்தபோது அவர்கள் முகம் மலர்ந்து, ஒருவன் "ராமன்" என்றான். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஞாயிறு காலை தொலைக்காட்சியின் விளைவுதானே இது. ஓராண்டில் பெரியவள் இரட்சிக்கப்பட்டாள். நமது பிள்ளைகள் நரகம் செல்வதை நாம் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்போமோ? கிறிஸ்தவப் பெற்றோர் தாம் நம்புவதை தம் பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுக்க விழிப்பாயிராவிடில் இப்பாழுலகம் தான் நம்புவதை நம் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுத்துவிடும்.

பிள்ளைகள் கதை, கதை என்று அரிக்கும்போது சிறுவர் சித்திர வேதாகமத்திலிருந்து, வேதக் கதைகளைச் சொல்லிக் கொடுங்கள். வசனங்களை அவர்கள் மனனம் செய்யலாம். எல்லாப் பொறுப்பையும் சபையின்மேலும் ஞாயிறு வகுப்பின்மேலும் போட்டுவிடாதீர்கள்.

"அவைகளை உன் பிள்ளைகளுக்கும் உன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் அறிவிக்கக்கடவாய்" (உபா 4:10). "நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசு" (6:7; 11:20).

அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு என்கிறீர்களா? தேவன் பிள்ளைகளின் மனோதத்துவம் அறியாதவராகத் தவறாகச் சொல்லியிருப்பாரோ? கிறிஸ்தவம் ஆணி போன்றது; அடிக்க அடிக்க ஆழமாகச் செல்லும். பரிசுத்த வேத எழுத்துக்களை தீமோத்தேயு சிறு வயதுமுதல் அறிந்தவன் (2 தீமோ 3:15). எப்படி? ஒரு பத்தாம்பசலிப் பாட்டியும் தாயும் ஊட்டி வளர்த்ததினாலே. பன்னிரெண்டு வயதில் இயேசு வேதபோதகர்கள் பேசுகிறதைக் கேட்பது மட்டுமல்லாது அவர்களிடம் கேள்வி கேட்டுத் தம் சந்தேகங்களையும் தீர்த்துக்கொண்டார். அவர்கள் கேள்விகளுக்குப் புத்தியாகப் பதில் கொடுத்தார் (லூக் 2:46,47). எப்படி?

ஒழுங்காகக் குடும்ப ஜெபம் செய்யுங்கள். பிள்ளைகளுக்கேற்ப சுருக்கமாயும் லகுவாயும் இருக்கட்டும். பிள்ளைகளும் பேசிப் பங்கேற்கட்டும். அவர்கள் வளர வளர நேரத்தைக் கூட்டி அவர்கள் தங்களுக்காகவும் பிறருக்காகவும் ஜெபிக்கக் கற்பியுங்கள். உண்ணுமுன் ஜெபிக்கப் பழக்குவியுங்கள். கிரமமாக ஜெபிக்கும், வேதம் வாசிக்கும் பழக்கம் ஊறட்டும். வேத வசன விளையாட்டுகள், புதிர்கள், குடும்பமாக எழுதக்கூடிய பரீட்சைகள் மூலம் அவற்றை விருப்பமாக்குங்கள். பிள்ளை வளர்ந்து வசன நேசனாகும்போது ஓர் எளிய போதனா வேதாகமத்தைப் பரிசளியுங்கள். தேவ அன்பைத் தம் பள்ளி நண்பரோடு பகிர்ந்துகொள்ளக் கற்றுக்கொடுங்கள்.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று. ஆலயத்திற்குத் தவறாது அழைத்துச் செல்லுங்கள். நல்லது கெட்டது கற்பித்து அவர்கள் வளரும்போது நல்லதை அவர்களாகவே தெரிந்துகொள்ளப் பழக்குவியுங்கள். அதில் அவர்கள் தவறிழைப்பார்கள். அவர்கள் தவறிழைக்க விடுவதினால் அதிலிருந்து கற்றுக்கொள்ள ஏதுவாகிறது. தங்கள் செய்கையின் பலனை அவர்கள் அனுபவிக்க விட்டுவிடவேண்டும். பொய் விடுப்பு விண்ணப்பக் கடிதம் எழுதுவது போன்ற காரியங்களைச் செய்யாதீர்கள். உங்கள் பிள்ளைகள் வளர்ந்துவரும்போது அவர்கள் செய்யக்கூடாதென்று நீங்கள் விரும்புபவற்றை, நீங்கள் செய்யவே கூடாது. கூர்மையான மனச்சாட்சியுடனிருக்கப் பழக்குவியுங்கள். “பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்” (நீதி 22:6).

நெறி, நீதி, நியாயம், கட்டுப்பாடு கற்பியுங்கள். அவர்கள் விரும்பினால் உங்களோடு உபவாசிக்கட்டும். தங்கள் கைச்செலவு பணத்தில் தசமபாகம் செலுத்தட்டும். எல்லாவற்றிற்கும் தேவனையே சார்ந்துகொள்ளவும், அட்டை முதல் அட்டை வரை வேதத்தை விசுவாசிக்கவும் கற்பியுங்கள். வேதமே அவர்கள் வாழ்வின் வழிகாட்டி—நண்பரோ, ஆசிரியரோ மற்றவரோ சொல்வதல்ல என்பதை அவர்கள் அறிந்திருக்கவேண்டும்.

4. சமூக வளர்ச்சி

"இயேசுவானவர் மனிதர் தயவில் விருத்தியடைந்தார்."

குழந்தை வெளியுலகைச் சந்திக்கும் காலம் சீக்கிரம் வரும். முதல் அறிமுகங்கள் உறவினர்தான். தாத்தா பாட்டியையும் மற்ற உறவினரையும் சந்திக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தவேண்டும். அவ்வப்பொழுது சேர்ந்து புசித்தலோ வெளியே செல்லுதலோ பந்தத்தை வளர்க்கும். அபாயகரமான இவ்வுலகில் அவசியமல்லவா இது ?

பிறர் நேசிக்கத்தக்கவனாக குழந்தை வளரவேண்டும். சுத்தமும் சீருமான வார்த்தைகளை அவன் பேசப் பழகவேண்டும். கெட்ட வார்த்தைகளையும் அசுத்தமான நகைச்சுவைகளையும் குடும்பத்தில் பேசிப் பழகினால் வேறிடம் செல்லும் பிள்ளை தலைகுனிய நேரிடும்.

சிறியோர், பெரியோர், ஏழை, பணக்காரர் எவரையும் மனிதாபிமானத்துடன் நடத்தப் பழக்குவிக்கவேண்டும். நீங்கள் எழுந்து வயோதிபருக்கும் நோயுற்றோருக்கும் உங்கள் இருப்பிடத்தை அளிப்பதைப் பிள்ளைகள் காணட்டும். நன்னெறிக் கேள்விகள் எழுமானால் அவர்கள் தைரியமாக தங்கள் மனச்சாட்சியின்படியே நடந்துகொள்வதின் முக்கியத்துவத்தை ஊட்டிவிடுங்கள்.

உழைப்பின் மேன்மையைக் கற்பியுங்கள். தெருவில் கிடக்கும் வாழைப் பழத்தோலை நீங்கள் எடுத்து ஓரத்தில் போடுவதையும், குருடனொருவனைக் கைப்பிடித்து வழிகாட்டுவதையும் அவன் கண்டால் நாளை அதைக் குறைவாக எண்ணமாட்டான். தங்களுடையதைப் பகிர்ந்துகொள்வதை ஊக்குவித்து தன்னலத்தை ஒதுக்குங்கள். உண்டியல் சேர்ப்பதினால் பணத்தின் முக்கியத்துவத்தைக் கற்றுக்கொள்ளட்டும். தோல்விகளைச் சந்திக்க உரமூட்டுங்கள்.

சுத்தம் சுகம் தருமென பிள்ளைகள் அறியட்டும். அவர்கள் சுத்தமான உடையணியப் பழகட்டும். குளியலறையைக் குழப்பிப் போட்டுச் செல்லும் பிள்ளை வேறொரு வீட்டில் வரவேற்பு பெறாது. தன் அறையைச் சுத்தமாக வைத்துக்கொள்ள ஊக்குவியுங்கள். நேரத்திற்குச் செல்லவும் பழக்கப்பட வேண்டும்.

பொதுச் சொத்தைப் பிள்ளைகள் மதிக்கவேண்டும். நாட்டையும் மக்களையும் நேசிக்கவேண்டும். நல்ல பொழுதுபோக்குகள் அவர்களை

ஆக்குபவராக்கும். அவர்கள் அழிப்பவராவதைத் தவிர்க்க இலட்சியங்களை ஊட்டி வளர்ப்பது சாலச் சிறந்தது. இலட்சியங்களோடு வளரும் பிள்ளை இப்பயங்கரவுலகில் அவற்றைச் செயல்படுத்த திறந்த வாசல்கள் உண்டே. அன்னை தெரசாவாக அல்லது சுந்தர்சிங்காக வரவேண்டுமென அவர்கள் கனாக் காணட்டும். சில பிள்ளைகள் சத்தமாகச் சிந்திப்பதைக்கேட்டு அவர்கள் அப்படியே ஆகிவிடுவார்களோ என்று பயப்படுகிறோமோ? இன்றையப் பிள்ளைகளின் கனாக்கள் இயேசுவைக் கனாக்காணும் தாய் மாரிடமிருந்தா வருகின்றன? (மத் 27:19). TV இலிருந்தல்லவா வருகிறது!

நமது பிள்ளைகளுக்குப் பட்டம், பெயர், புகழ், பணம் என்ற மாயையான கனாக்களை ஊட்டி வளர்த்திருக்கிறோம். கெட்டு நாறும் இவ்வுலகைச் சீர்த்திருத்தக்கூடிய போதுமான சமூக நலத்தொண்டர்களைக் கிறிஸ்தவம் பிறப்பிக்காததில் ஆச்சரியமொன்றுமில்லையே. முடியும் எனும் ஆவியை ஊட்டி வளருங்கள். நமது பிள்ளைகள் ஜாதி என்றால் என்னவென்றே தெரியாமல் வளரட்டும். இம்மிருகத்தின் முத்திரை இன்று எல்லா நெற்றி களிலும் உண்டே.

காலையில் எழுந்ததும் இரவு உறங்கச்செல்லுமுன்னும் பிள்ளைகளுக்கு முத்தமிட்டு வாழ்த்துங்கள். நண்பர்களையும் விருந்தினரையும் வாழ்த்தி வரவேற்கப் பழக்குங்கள். எல்லாரிடமும் பணிவுடனும் பண்புடனும் நடந்து கொள்ளவேண்டும். வாழ்த்துக்கள், ஆறுதல் கடிதங்கள் அல்லது நன்றிக் கடிதங்கள் எழுதப் படிப்பியுங்கள். சாப்பிடும்போது சீராயிருக்கப் பழகட்டும். பிறர் தம் பிள்ளையைப் புகழும்போது தாயின் உள்ளம் எவ்வளவாய்க் குளிரும்! "உன் மகனை சிட்சை செய், அவன் உனக்கு ஆறுதல் செய்வான்; உன் ஆத்துமாவுக்கு ஆனந்தத்தையும் உண்டாக்குவான்" (நீதி 29:17). 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்.'

இன்றையச் சந்தடியில் தாயின் சத்தம் அமிழ்ந்துவிட்டது. அவளது பிள்ளையின் மனதையும் இதயத்தையும் ஈர்க்கப் பல இரைச்சல்களும் வசீகரமுமான சத்தங்களும் போட்டியிடுவதால் இன்றையத் தாய் என்றை யும்விட இன்று உரத்த சத்தமாகவே போதிக்கவேண்டியுள்ளது.

நாம் எப்படி இருந்தோம் என்று இவ்வுலகிற்கு விளம்ப நாம் விட்டுச்செல்லும் செல்வங்கள்தான் பிள்ளைகளாம். நீதிமொழிகளின் முதல் அத்தியாயத்தில் தாயானவள் தன் சிறு மகனுடன் துவங்குகிறாள். இறுதி அத்தியாயத்தில அவனை அவனது புதுமனைக்கு வழியனுப்பி வைக்கிறாள். எந்த மகன், எந்த அரசன் தன் தாயினருகில் உட்கார்ந்து, மனைவியைத் தெரிந்தெடுப்பது எப்படி? என்ற நீண்ட உபதேசத்தைக் கேட்டுக்கொண்டி

ருப்பான்? லேமுவேலின் தாய் தன் மகனின் வளர்ப்பில் ஒவ்வொரு கட்டத்திலும் ஈடுபட்டிருந்ததாலேயே ஓர் அரசனுக்கு ஆணையிடும் அதிகாரம் பெற்றிருந்தாள்!

"அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்" (நீதி 31:28). புதிய ஏற்பாட்டில் இணை வசனம் காண விருப்பமா? "உம்மைச் சுமந்த கர்ப்பமும் நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளவைகள்" (லூக் 11:27).

8

தலைவனின் மனைவி

தலைவனாயிருப்பது விளையாட்டல்ல, தலைவனின் மனைவியாயிருப்பதும் விளையாட்டல்லவே. உலகம் நினைப்பது போல் அவள் மின்னும் நட்சத்திரமாக இல்லாமலிருக்கலாம்; இருக்கத் தேவையுமில்லை. தலைவரின் மனைவியரெல்லாம் துலங்கும் தாலந்து படைத்தவராயில்லாமிருக்கலாம். அவள் மிகவும் சாதாரணப் பெண்மணியாக இருந்தாலும் தலைவனைக் காட்டிலும் அதிகமாகவே பொறுப்புடையவளாயிருக்கிறாள். அவளது ஆசிகளையும் அங்கலாய்ப்புகளையும் அறிந்தவர் யார்? "அவள் புருஷன் தேசத்து மூப்பர்களோடே நியாயஸ்தலங்களில் உட்கார்ந்திருக்கையில் பேர் பெற்றவனாயிருக்கிறான்" (நீதி 31:23). அவனது வேலைகளைக் குறித்து அவ்வத்தியாயத்தில் வேறெதுவும் நாம் வாசிக்கவில்லையானாலும் அவனது மனைவியின் வேலைகள் பற்றி ஒரு பட்டியலே இருக்கிறது. உலகம் அரங்கத்தில் ஆடுபவரைக் காணலாம். வேதமோ அந்தரங்கத்தில் ஆடுபவளை மறந்துவிடவில்லை.

ஒரு தலைவனின் மனைவிக்குரிய தகுதிகளை 1 தீமோத்தேயு 3:11 வரிசைப்படுத்துகிறது. "அந்தப்படியே பெண்களும் (அதாவது, கண்காணிகளுடைய மனைவியரும்) நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கவேண்டும்."

1. நல்லொழுக்கமுள்ளவள்

மூலமொழியில் இது 'மதிப்பானவர்கள்' என்றிருக்கிறது. கனத்திற்குப் பாத்திரராவது பிறப்பினாலல்ல. ஒரு பெண்ணை யாரும் அவளது அழகிற்

காகவோ அந்தஸ்திற்காகவோ மதிப்பதில்லை. மதிப்பைக் கேட்டு வாங்க முடியாது. அதை உழைத்துச் சம்பாதிக்க வேண்டும். தான் தலைவனின் மனைவியென மதிக்கப்பட எதிர்பார்ப்பதே அவள் செய்யக்கூடிய முதல் தவறு. அவளது எதிர்பார்ப்பு தவறினால் அவள் அதை வேறு விதமாகக் கேட்டு வாங்க முயற்சிக்கிறாள். அவள் நச்சரிக்கலாம், கணவனோடு சண்டையிடலாம், மதிப்பான பதவி நாடலாம், இல்லையேல் தன் மதிப்பை நிரூபிக்க முற்படலாம். மாம்சீக இம்முறைகள் அவளையே பாதிக்கும். அதுவும் பொதுவிடங்களில் கலாட்டா செய்வது பிறர் அவள் மேல் வைத்திருக்கும் கொஞ்ச நஞ்சம் மதிப்பையும் கெடுத்துவிடும். கணவன் கனப்படுத்தப்பட்டு தான் விடப்பட்டுப்போவது அவளுக்கு எரிச்சல் மூட்டலாம். தன் கணவன் மேலேயே அவள் பொறாமைப் படலாம். கணவன் தலைவனாதலால் தானும் தலைவியென எண்ணிவிடக்கூடாது. கான மயிலாடக் கண்டிருந்த வான் கோழி தானும் அதுவாகப் பாவித்துத் தன் பொல்லாச் சிறகை விரித் தாடினாற்போல் தானும் அதிகாரத்தோரணை பூண்டுவிடக்கூடாது. மயில் அழகிற்கும் ரசனைக்குந்தானே; வான்கோழியன்றோ பிறர் பசியாற்றுவது என்றெண்ணிக் கொண்டால் போச்சு!

மணநாளிலிருந்தே ஒரு பெண் குறைவாக எண்ணப்படுகிறாள். "புருஷனைக் கெடுப்பதே இவள்தான். இவளாலதான் எல்லாங் கெட்டது. இவா இல்லன்னா அவன் எவ்வளவோ நல்லா செய்வான். கலியாணத்துக்கு முன்னால எப்படியிருந்தான்!" என்று தொணதொணக்கக் கழுகுக்கண்கள் அவளைப் பார்த்துக்கொண்டேயிருக்கும். குழியில் துவங்கும் அவள், முதலாவது தரைமட்டத்திற்கு வரவேண்டும். அதற்கே ஆண்டுகள் பிடிக்கும். "பரவாயில்லை அவள்" என்ற பட்டம் கிடைத்துவிட்டால் குழியேறி விட்டா ளென அர்த்தம். தனது நல்லொழுக்கத்தினாலும் நற்செயல்களினாலும் இனி அவள் விடாப்பிடியாக ஏற வேண்டும். தலைவனின் பொற்காலத்தைச் சாவிக்கதிரான மனைவி வீணடித்துவிடக்கூடும். அவளது சீரற்ற நடக்கை கள் கணவனது அந்தஸ்தைக் கறைப்படுத்தும்.

"நல்லொழுக்கமுள்ள பெண் மானத்தைக் காப்பாள்" (நீதி 11:16). பெண்கள் தம் கணவரை கனப்படுத்தக் கட்டளை பெற்றுள்ளனர் (எபே 5:33). ஆனால் கனத்திற்குப் பாத்திரராக நடந்துகொள்வது அதிலும் கடினம் (1 பேது 3:7). "சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற பெண்ணே புகழப்படுவாள்" (நீதி 31:30). கூந்தல் அலங்காரக் கூடுகளில் அடைபட்டுக் கிடக்கும் நேரத்தை சீரேசு நாதனின் பொற் பாதத்தில் செலவிடுவது நன்றன்றோ!

பவுல் ஒரு சுவாரஸ்யமான முரண்பாட்டைக் குறித்து எழுதுகிறார். ''உடலின் அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவை களே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது. மேலும், உடலின் அவயவங் களில் கனவீனமாய்க் காணப்படுகிறவைகளுக்கே அதிகக் கனத்தைக் கொடுக்கிறோம்; நம்மில் இலட்சணமில்லாதவைகளே அதிக அலங்காரம் பெறும்'' (1 கொரி 12:22,23). ஒரு தலைவனின் மனைவி கிறிஸ்துவின் உடலின் அவயவமாயிருந்தும் கனவீனமாகவே கருதப்படுகிறாள். ஆனால் கனத்திற்குரியவளாக நடந்துகொண்டால் 'அதிக கனமும்' 'அதிக அலங் காரமும்' பெறுகிறாள். முத்துக்கு மதிப்புண்டா? அப்படியானால் இவளது மதிப்பு முத்துக்களைவிட உயர்ந்தது (நீதி 31:10).

அவளது மதிப்பைக் குறைக்கக்கூடிய சிலவுண்டு. அவள் பிறரை மதிக்க வேண்டும். பிறரிடமிருந்து மதிப்பை எதிர்பார்க்கக்கூடாது. கணவனுக்கு மேசையில் இடமளித்து மனைவிக்குப் பாயைக் காட்டலாம். ஒரு சுவிசேஷ கருக்கு முதல் வகுப்பு ரயில் சீட்டும், அவரது மனைவிக்கு மூன்றாம் வகுப்பு சீட்டும் கொடுக்கப்பட்டதை அறிவேன் (இப்போது மூன்றாம் வகுப்பு கிடையாது!) அவளாகவே தரையில் உட்கார்ந்துவிட்டால் மக்கள் காட்டும் பாரபட்சம் அவளைப் பட்சிக்காது. அப்போது மேலே உட்காருங்கள் என்று சொல்லப்படுவது அவளுக்கு மதிப்பாயிருக்கும் (லூக் 14:10). தன் கண வனைப் போலவோ சிறப்பான நபரைப் போலவோ நடத்தப்பட அவள் எதிர்பார்க்கக் கூடாது. அவள் மக்களின் சிநேகிதியாயிருந்தால் தலைவனை அணுகக் கூடாதவர்கள் அவளிடத்தில் பேசலாம்.

தலைவனுக்காக மக்கள் தலையையும் கொடுப்பர். அவர்களது தாராளத்தை அவள் சாதகப்படுத்திக்கொள்ளக் கூடாது. தன் நடை, உடை, பாவனைகளைக் குறித்து சிரத்தை எடுக்க வேண்டும். அப்போது மதிப்பு அவளைத் தேடிவரும்.

பிறரது மதிப்பைப் பெறுவது சுலபம். ஆனால் கணவனுக்கு மதிப்பு கொடுக்காமல் அவரது மதிப்பை எவ்விதத்திலும் பெற முடியாது. பொதுவாக நடப்பது என்னவென்றால் தலைவன் வீட்டிற்கு வெளியே எல்லோராலும் கொண்டாடப்படுகிறான். வீட்டிலோ படாதபாடு படுகிறான். மனைவி அவனது குறைகளையே நினைத்துப் பொறுமுகிறாள். மனைவியானவள் கணவனது குறைகளை மனத்திரையினின்றகற்றி அவனது நற்பண்புகளில் மனதைச் செலுத்துவதினால் அவனைக் குறித்த ஒரு பயபக்தி அவளது மனதில் உதித்துப் பாவனையில் வெளிப்படும்.

தாவீது உடன்படிக்கைப் பெட்டியை நகரத்திற்குக் கொண்டு வருகிறபோது தன்னையே மறந்து நடுத்தெருவில் குதித்து சுழன்று

ஆடினான். (2 சாமு 6:14-16). தாவீது மக்களை ஆசீர்வதித்து திரள் கூட்டத்திற்கும் அப்பத்தையும் இறைச்சித்துண்டையும், திராட்சரசத்தையும் பங்கிட்டுக் கொடுத்தான் (எத்தனை அலுத்திருப்பான்!). இந்த மகிமையான அனுபவத்திற்குப் பின்பு துக்ககரமான சம்பவம் ஒன்று நடந்தது. "தாவீது தன் வீட்டாரை ஆசீர்வதிக்கிறதற்குத் திரும்பும்போது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் தாவீதிற்கு எதிர்கொண்டு வந்து: அற்ப மனிதரில் ஒருவன் தன் உடைகளைக் கழற்றிப்போடுகிறதுபோல, இன்று தம்முடைய ஊழியக் காரருடைய பெண்களின் கண்களுக்கு முன்பாக தம்முடைய உடைகளை உரிந்துபோட்டிருந்த இஸ்ரவேலின் இராஜா இன்று எத்தனை மகிமைப் பட்டிருந்தார்" என வஞ்சப் புகழ்ச்சியணியாக வாழ்த்தினாள். தேள் கொட்டினது போன்ற அவ்வார்த்தைகளைக் கேட்ட தாவீது, "நீ சொன்ன பெண்களுக்குங்கூட மகிமையாய் விளங்குவேன்" என்றான் (2 சாமு 6:20-22). மீகாளுக்காகப் பாதி அரசையும் இழக்க ஆயத்தமாயிருந்த தாவீது (2 சாமு 3:12-16) அவ்வினாடியில் அவளுக்குக் கொண்டிருந்த மதிப்பை மிதித்துப் போட்டான். மனைவியானவள் கண்ணுங்கருத்துமாயிராவிடில் உலகோர் மதிக்கும் தன் நாயகனை அவமதித்து மீகாளைப் போல் ஷுக்கிப்பாள்.

2. அவதூறு பண்ணாதவள்

தலைவனின் மனைவியாயிருப்பவள் நஞ்சு தோய்ந்த நாவையுடையவளாயிருக்கக்கூடாது. அவள் பலரைச் சந்திக்கிறாள், பல விவரங்களைக் கேட்கிறாள், பலரோடும் பழகுகிறாள். ஆகையால் பொறுப்புள்ளவளாயிருக்க வேண்டும். வார்த்தைகளையும் உண்மையையும் திருக்கி, மக்களை நாவினால் வெட்டி, பிறர் மனதில் நஞ்சூட்டி, புதிய விசுவாசிகளுக்கும் சக ஊழியருக்கும் இடையூறானால் தன் பெயரை மட்டுமல்ல தன் நாயகன் பெயரையும் கெடுத்து விடுவாள். தலைவன் மக்களைக் கவருகிறான். அவதூறு பண்ணுகிறவளோ அவர்களைக் கலைக்கிறாள். இருவரும் சேர்ந்து வாழவேண்டுமானால் தலைமைப் பதவியை மறந்துவிட வேண்டியதுதான்.

"தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள். தயையுள்ள போதகம் அவள் நாவின்மேல் இருக்கிறது" (நீதி 31:26). எவ்வளவு குறைவாகப் பேசுகிறாளோ அவ்வளவுக்கவ்வளவு அவள் வார்த்தைகள் ஞானம் தோய்ந் திருக்கும். நாவடக்கமின்றிப் பேசுவாளானால் அவதூறு ஆறாக ஓடி அவளை நிர்மூடமாக்கும் (நீதி 10:18).

தலைவனின் மனைவியை நம்பி வந்து மக்கள் மனந்திறந்து கொட்டு வார்கள். அவ்வார்த்தைகளை எடுத்து அவர்களையே தாக்கவோ அல்லது

வீணலுவற்காரிகளின் பசித்த காதுகளைப் போஷிக்கவோ பயன்படுத்து வாளானால் ஒரு நாள் கடிந்துகொள்ளப்படுவாள் (சங் 50:21). "பிறனை இரகசியமாய் அவதூறு பண்ணுகிறவனைச் சங்கரிப்பேன்" என்கிறார் ஆண்டவர் (சங் 101:5). ஆண்டவர் ஆத்திரங் கொள்ளுமுன் அவதூற்றைத் தூரமாக்குவோம்.

போத்திபாரின் மனைவி தயவு தாய்சண்யமின்றி யோசேப்பை அவ தூறாகப் பேசிச் சிறைக்கு அனுப்பினாள். ஆனால் பொது மக்களின் கண்களுக்கு முன்பாக தேவன் அவனை உயர்த்தியபோது அவளுக்கு எத்தனை வெட்கம். தலைவனின் மனைவி சொல்லும் வார்த்தைகள் முக்கியமானதாகக் கருதப்படுவதால் அவள் பேசுபவற்றைக் குறித்துக் கவனமாயிருக்க வேண்டும். அவளது கணவனே அவளது வார்த்தைகளை நம்பித் தீர்ப்பில் பெருந்தவறிழைக்கலாம். பகையினால் அவள் பழி வாங்கி னாலும் இறுதியில் தேவன் குற்றமற்றவர்களுக்காக வாதாடுவார். "கர்த்தர் மிரியாமுக்குச் செய்ததை நினைத்துக்கொள்ளுங்கள்" (உபா 24:9).

3. தெளிந்த புத்தியுள்ளவள்

இப்பதத்தை வாசித்துவிட்டுச் சிந்திக்காமலேயே கடந்து செல்கிறோம். மூலமொழியிலும் பிற மொழிகளிலும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இதன் ஆழ்ந்த கருத்தை உணரலாம். தெளிந்தபுத்தி என்பது கட்டுப்பாடு அல்லது மிதமாயிருத்தல் — முக்கியமாக ஆசைகள், விருப்பங்களில் இச்சையடக்கம், மதுபானம் குடியாதிருத்தலையும் குறிக்கும். ஓரத்திற்குப் போகாமல் சம நிலையாயிருத்தல் — அதாவது வைத்தால் குடுமி சிரைத்தால் மொட்டை என்றிருக்கக்கூடாது.

ஆகவே தலைவனின் மனைவி சுயக்கட்டுப்பாடுள்ளவளாயிருக்க வேண் டும். மனநிலை, உணர்வுகள், பசி, தூக்கம் மற்றும் எவ்வித ஆசையையும் கடிவாளம் போட்டுக் கையில் பிடித்திருக்கும் கலையைக் கற்கவேண்டும் அவள். அதாவது, உணர்ச்சிவசப்பட்டு எதையும் செய்யாமல் சிந்தித்துச் செயல்படுபவளாயிருக்க வேண்டும். நொடிப்பொழுதில் கற்பதல்ல இக்கலை. படிப்பறிவுமல்ல இது. ஆண்டாண்டாக உறுதியான பயிற்சியினால் கடினமான வாழ்க்கைப் பாதையில் சென்றாகிலும் குறியை எட்ட மனப்பூர்வமாக ஒப்புக்கொடுத்தாலொழிய இக்கலையைக் கற்க இயலாது. தீமோத்தே யுவைப் போல பயங்காளியாயும் பேசாப் பதுமையாயுமிருப்பவளானாலும், தலைக்கனம் பிடித்த அகங்காரியானாலும் தலைவனின் மனைவியானவள் வேத நிலைக்கு முறையே ஏறி அல்லது இறங்கி வரவேண்டும்.

கட்டுக்கடங்கா தனது உடல் அல்லது மன உணர்வுகளை அடக்கத் திணறும் போது, இயேசுவைப் பின்பற்றி என்னவாயிற்று எனச் சலிப்படையத் தோன்றும். இங்குதான் உறுதியாக நிற்கவும் முன்னேறிச் செல்லவும் விடாப்பிடியாயிருக்கவும் அவளுக்குக் கட்டுப்பாடு மிகத் தேவை.

அலறுவது, ஒலமிடுவது, உணர்ச்சிவசப்பட்டுப் பிதற்றுவது, கோபப்பட்டுச் சாடுவது, தூக்கியெறிந்து பேசுவது, பேராசை, பெருந்திண்டி போன்றவை ஒழுங்கின்மை அல்லது கட்டுப்பாடின்மையின் சில வெளிப்பாடுகளாம். எட்டாத பழத்திற்குக் கொட்டாவி விடுவானேனென விட்டுவிட வேண்டாம். எட்டாத பழத்தையும் பறிக்க ஓர் அலக்கு உண்டல்லவா ? ஆகவே எங்கே மிகவும் ஒழுங்கீனமாயிருக்கிறீர்களோ அங்கே துவங்குங்கள். "கூடாதது ஒன்றுமில்லையே, கூடாதது ஒன்றுமில்லையே; நம் தேவனால் கூடாதது, கூடாதது ஒன்றுமில்லையே! எனப் பாடிக்கொண்டே அவரோடு ஒத்து ழையுங்கள். நம்மைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய நமக்கு பலமுண்டு (எங்கே பலமில்லாதிருக்கிறோமோ அங்கே பலப்படுத்துகிறார்).

நீதிமொழிகள் 31இன் குணசாலி ஒரு தலைவனின் மனைவி. அவள் சோம்பலை மேற்கொண்டிருந்தாள் (வச 27). அதிகாலையில் துயிலெழும் கடின உழைப்பாளி. ஜடமா அவள் ? இல்லை. தனது உணர்வோட்டங்களை அடக்கக் கற்றிருந்தாள். பட்டணத்து வாசலில் அவளது கணவன் கனம் பெற்றவனாயிருந்தும் தானோ வீட்டிலே அவனுக்குப் பக்கபலமாயிருப்பதில் திருப்தியாயிருந்தாள். அவனுக்குக் கைநிறைய சம்பளம் வராவிடில் தானும் உழைத்து சம்பாதிக்க முறுமுறுக்கவில்லை. வேலை மிகுந்த கணவனிட மிருந்து ஒத்தாசை எதிர்பார்க்க முடியாத வாழ்க்கை அவளுக்குப் பஞ்சு மெத்தையாயில்லை. கையிலொன்றும் காலிலொன்றும் (?வயிற்றி லொன்றுமாகப்) பிள்ளைகளோடு போராட்டம். ஆனால் அவர்கள் வளர்ந்த போதோ "பெற்ற தாயே பெரிய கோயில்" என வாழ்த்தினர். இப்போது பெற்றவன் பொறாமைப்படக் காலம் வந்தது. ஆனால் அவனோ அவளுக்கு "மிசஸ் யுனிவர்ஸ்" பட்டத்தைச் சூட்டி மகிழ்கிறான் (வச 29). வேறு என்ன வேண்டும் அவளுக்கு ? கணவன் மனைவியிடையே போட்டி பொறாமைகள் அவர்களுக்கும், குடும்பத்திற்கும், தலைமைப் பணிக்கும் ஒவ்வாதது. அதைவிட்டு அவர்கள் ஒருவரையொருவர் போற்றவும் ஊக்குவிக்கவும் வேண்டும்.

4. உண்மையுள்ளவள்

அதாவது நம்பிக்கைப் பாத்திரமானவள். நம்பக்கூடாதவள் தன் கணவனின் தலைமைப் பதவிக்குத் தலைவலி. கணவன் மனந்திறந்து

எதையும், எல்லாவற்றையும் சொல்லக் கூடியவளாயிருக்க வேண்டும். அவளுடைய வாயிலிருந்து வார்த்தைகளைப் பிடுங்க எத்தர்கள் இருப்பர். இவளோ எத்தனுக்கெத்தனாயிருக்கவேண்டும். கணவனுக்குத் தெரியாமல் பெருங்காரியம் எதுவும் செய்யமாட்டாள். வாழ்விலும் தாழ்விலும் இசைந்திருப்பாள். பாவத்திற்கு விலகியிருப்பாள். தனது சுயத் தேவைகளுக்கு முன் கணவனது தேவைகளுக்கு கவனம் செலுத்துவாள். தனது புகழ், சுயமரியாதையைத் தியாகம் செய்வதைப் பெரிதாக எண்ணமாட்டாள்—ஆனால் எதை இழக்கிறாளோ அதைப் பெற்றுக்கொள்ளுகிறாள். "அவள் கணவனின் இருதயம் அவளை நம்பும்; அவன் சம்பத்து குறையாது. அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மையே செய்கிறாள்" (நீதி 31:11,12).

தலைவனின் மனைவி ஆன்மீக இரத்தவோட்டமுடையவளாக இருக்க வேண்டுமெனச் சொல்லத் தேவையில்லை. ஆகவே கணவன் குறட்டை விடும்போது அவள் வேதத்தைக் கரைத்துக் குடிக்கவேண்டும். குனிந்து ஜெபிக்கவேண்டும். தோல்விகள் அவளைத் துவளச்செய்வதில்லை. அவை அவளது நரம்புகளை உறுதியாக்கிப் புதிய பாடங்கள் கற்பிக்கின்றன. ஒவ்வொரு நாளும் உதவாக்கரை என்ற பட்டம் பெற்றாலும் குறைவெண்ணத்தில் மூழ்க மறுக்கிறாள். தலைவனின் மனைவியெனத் தூக்கிவைக்கப்பட்டாலும் உயர்வெண்ணத்தில் உல்லாசமாகப் பறக்க மறக்கிறாள். தான் யாரென்று அறிந்திருக்கிறாள் (ரோ 12:3).

நம்பகத்தின் மறுபக்கமொன்றுண்டு. அதுதான் நாயாகவும், நாயிலும் நாட்டு நாயாகவும் இருக்கச் சம்மதித்தல். கழுத்தில் கல் கட்டப்பட்டு வீட்டைவிட்டு 5 கிலோ மீட்டர் தொலைவில், உடையவரால் கிணற்றில் எறியப்பட்ட நாயொன்றை அறிவேன். நள்ளிரவில் கதவில் கீறல் சத்தம் கேட்டு உடையவர் திறந்தார். அங்கே அவரது நாய் ஏக்கப்பார்வையுடன் வயிறு ஊதிப்போய் அண்ணாந்து அவரைப் பார்த்தவாறு நின்றது! மனைவியர் இப்படிப்பட்ட கொடுமைகளைச் சகிக்கவேண்டுமென்று நான் சிலேடையாகச் சொல்லவில்லை. நம்பகத்தின் ஆழத்தை வலியுறுத்தவே எடுத்துக்காட்டியுள்ளேன். தலைவன் என்பவனும் எல்லா மனிதக் குறைபாடுகளுமுள்ள சாதா மனிதன்தான் என மனைவி புரிந்துகொள்ளுவதவசியம். மக்கள் போற்றும் மானிடத் திலகம் வீட்டில் எங்கே என அவள் ஏமாற்றமடையக்கூடாது. பிசாசின் வலைகளைப் பகுத்தறியக்கூடியவளாயிருக்கவேண்டும். தனது வரங்களினால் அவர் கொண்டாடப்படுவார், பணம் புரளும், நண்பர் மொய்ப்பர், கேள்வி கேட்க ஆள் கிடையாது, புகழ் மாலைகளுக்கு அளவே கிடையாது, இன்னும் என்னென்னவோ. பேராசை பற்றிக்கொண்டதா ? ஆண்டவரோடும் வேதத்தோடும் செலவிடும் நேரம்

பலியானதா ? திகழும் உடன் ஊழியர் மேல் பொறாமையா ? பெருமையும் அகங்காரமும் தலைதூக்குகிறதா ? தவறான தீர்மானமெடுக்கப் போகிறாரா ? மனைவி விழிப்பாயிருக்கவேண்டும்.

கணவனைப் பார்த்துப் பிரசங்கிக்க முடியாது; ஜெபித்து விட்டுவிடவும் முடியாது; கைகளைக் கழுவிவிட்டு வெளியேற முடியாது. தலைவனது மனைவியாயிருக்க அழைக்கப்பட்ட அழைப்பிற்கு அவள் உண்மையுள்ளவளாயிருக்கவேண்டும். தனது மென்மையான திருத்தங்களையும் அன்பான அறிவுறுத்தல்களையும் விட்டோயக்கூடாது. அவளது ஆலோசனைகளை அவர் உடனடியாக ஏற்றுக்கொள்ளாமலோ பாராட்டாமலோ இருந்தாலும் தன்னை ஒதுக்கித் தள்ளினதாக அவள் மனம்நோகாமல் தனது பணிவான பாதிப்பை விட்டு விடாதிருக்க வேண்டும். தனது ஆலோசனை எடுபட்டால் அதற்குப் புகழ்மாலை எதிர்பாராமலும், ‘நான் கொடுத்த ஐடியாவல்லவோ’ என்ற மனப்பான்மையினால் அவரது சுயபெருமையை எட்டி உதையாமலுமிருப்பதே பெண்மைக்கு அழகு. திரைக்குப் பின்னின்று எட்டிப் பார்த்து தனக்கு வரவேண்டிய புகழ்மாலைகள் தனது கணவனின் கழுத்தில் விழுவதைக் கண்டு அகமகிழ வேண்டும். கணவன் தவறிழைக்கும் வேளைகளில் அவரது தலையில் கொட்டாமல் தேற்றித் தூக்கிவிட வேண்டும். அவளே நம்பகமான கட்சியாள்.

தலைவனது மனைவிக்கு இரட்டிப்பான பொறுப்புண்டு. 1 தீமோத்தேயு 3:2-10இல் சொல்லப்பட்டுள்ளவைகளிலும் அவள் கணவனுக்கு ஒத்தாசை புரியவேண்டும். கணவன் பிள்ளைகளைக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனாயிருக்க வேண்டும். பெற்றோர் இருவரும் கவனியாமல் விடுவதினால் தலைவர் பலரது பிள்ளைகள் முரட்டாட்டமுள்ளவர்களாகின்றனர். ஆகவே பிள்ளைகள் அவளது முதல் கரிசனை. மனைவி ஒத்துழைக்காவிடில் கணவனது விருந்தாளிகளின் முகங்கள் அனிச்ச மலராகும். கணவன் நியாயஸ்தலங்களில் “உட்கார்ந்து” களைத்துப்போய்விட்டதால், வயலைப் பார்த்து விலைபேசி வாங்குகிற அவனது வேலையையும் அவளே செய்கிறாள் (நீதி 31:16). தான் குறுக்கொடிய வேலை செய்யும்போது அவர் TV பார்க்கிறாரே எனக் கொதிக்கமாட்டாள். வங்கி, கடைத்தெரு, தபால் நிலையம் போகக் கற்றுக்கொள்கிறாள். வீடே கதியெனக் கிடப்பதில்லை. இருப்பினும் கணவனின் சட்டைப்பொத்தானைத் தைத்துவைக்க நேரம் கண்டுபிடிக்கிறாள். விரிவடையும் வீட்டுக்காரியங்களைக் கவனிக்கப் பணிப்பெண்களை அமர்த்தி, தனது தாலந்துகளைப் பயன்படுத்தவும் வீட்டாரோடு அமரிக்கையாக உட்கார்ந்து பேசவும் நேரமெடுக்கிறாள். வேலைகள் சீராக நடக்க பணிப்பெண்களைக் கருத்தாக மேற்பார்க்கிறாள் (வச 27). இரத்

தினச் சுருக்கமாகச் சொன்னால் நாய் போல உழைத்தாலும் நங்கை போலத் தோற்றமளிக்கிறாள்.

வெற்றிகரமான ஒவ்வொரு மனிதனுக்கும் பின்னால் விவேகமான பெண்ணொருத்தி இருக்கிறாள் என்பதில் சந்தேகமேயில்லை. பிரதிபலன் எதிர்பாராமல் அனுதினக் கடமைகளைச் செய்வதினால் தனது கணவனின் நிலைக்கு உணர்த்தப்படுகிறாள். அவள் பாராட்டைத் தேடவில்லையானாலும் அவளது பதிபத்தினிச் செயல்கள் ஊரைக் கடந்து கணவன் உட்கார்ந் திருக்கும் வாசல்களை வந்தெட்டின. "அவளுடைய செய்கைகள் வாசல்களில் அவளைப் புகழக்கடவது" (நீதி 31:31,23 ஆங்கில வேதம் காண்க). உலகம் இப்போது இருவரையும் பாரபட்சமின்றி நோக்குகிறது. தன்னைக் குற்றப் படுத்தினவர்களை தனது அமைதியினால் அமைதிப்படுத்திவிட்டாள். ஒரு தலைவனின் மனைவி தன்னிடம் எதிர்பார்க்கப்படுபவைகளைக் கண்டு பயந்துவிடத் தேவையில்லை. இன்னும் முன்னேறத் தொடர்ந்து முயற்சிப் பாளானால், வீட்டுக்குத் தலையல்ல, தலைக்குக் கிரீடமாவாள்! (நீதி 12:4).

௯

முல்லைக்குத் தேர் கொடுப்போர் யார்?

வேதத்தில் "சுத்தமான பக்தி" என்று ஓரிடத்தில் மட்டுமே குறிப்பிடப் பட்டுள்ளது. "திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திர வத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது" (யாக் 1:27). சுத்தமான பக்தியின் இவ்விரு பகுதிகளில் இரண்டாவதைக் குறித்தே பேசிப் பேசி முதற்பகுதியை வசதியாக வழுவவிட்டுவிட்டோம். முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி என்றால் கோலற்ற கொடிகளாம் விதவைகளுக்காக தேவன் எவ்வளவாய்ப் பரிதவிப்பார்! விதவைகளுக்கு அக்கறை காட்ட தம் மக்களைத் திரும்பத் திரும்ப அவர் எச்சரிக்கிறார்.

"விதவையை ஒடுக்காமல் இருப்பீர்களாக... அவர்களை எவ்வளவாகி லும் ஒடுக்கும்போது, அவர்கள் என்னை நோக்கி முறையிட்டால், அவர்கள் முறையிடுதலை நான் நிச்சயமாகக் கேட்டு, கோபம் மூண்டவராகி, உங்களைப் பட்டயத்தினால் கொலைசெய்வேன். உங்கள் மனைவிகள் விதவைகளும், உங்கள் பிள்ளைகள் திக்கற்ற பிள்ளைகளுமாவார்கள்" என்கிறார் தேவன் (யாத் 22:22-24). இஸ்ரவேலர் சிறைப்பட்டுப்போன தற்கோர் காரணம் தங்கள் விதவைகளைப் பராமரிக்காததே. தீர்க்கதரிசிகள் அவர்களின் சிதைவை முன்னறிவித்திருந்தனர் (எரே 7:6,7; 22:3,4).

விதவைகளின் பராமரிப்பைக் குறித்து அப்போஸ்தலரும் தெளிவாகப் போதித்துள்ளனர் (1 தீமோ 5:3-16). நமது பொறுப்பைக் குறித்தும், சபையின் பொறுப்பைக் குறித்தும், விதவையானவர்களின் பொறுப்பைக் குறித்தும் வரையறுத்துள்ளனர்.

1. நமது பொறுப்பு

முதலாவதாக "உத்தம விதவைகளை கனம்பண்ணும்படி" உபதே சிக்கப்பட்டுள்ளோம் (1 தீமோ 5:3). வசதியுள்ளவராயிருந்தாலும் வறிய வராயிருந்தாலும் மரியாதையோடு வாழ்த்துங்கள். அவர்கள் பேசும்போது கவனியுங்கள். ஏதாவது உதவி தேவையா எனக் கேளுங்கள்—அதுவே அன்று ஓர் ஊழியம் செய்தது போலாகும்.

திக்கற்றவரான விதவைகளை ஒருபோதும் உதாசீனம் செய்யக்கூடாது. அண்மையில் யாரும் இருப்பாரானால் பலகாரங்கள் செய்யும்போது கொடுத் தனுப்புங்கள்; பிறந்த நாளுக்கு ஒரு சிறு வெகுமதி அளியுங்கள்; விருந்து செய்யும்போது அவர்களையும் அழைத்து அன்புகாட்டுங்கள். வாழ்வின் எத்தனையோ நன்மைகளை அவர்கள் இழக்கிறார்கள். "உபத்திரவத்தில் அவர்களை விசாரிப்பது" என்றால் அவர்களது அரசாங்க சலுகைக்கு ஒழுங்குசெய்வது, அலுவலகங்களுக்கோ வங்கிகளுக்கோ சென்று உதவு வது, வைத்தியரிடம் அழைத்துச் செல்வது, மருத்துவமனையில் சென்று விசாரிப்பது, அவர்கள் பிள்ளைகளுக்கு உதவுவது போன்றவையாகும். நமது வருவாயிலும் அவர்களுக்குப் பங்குண்டு. அவர்களுக்குரியதை அவர்களுக்களித்தால் உன் தேவனாகிய கர்த்தர் உன் கைப்பிரயாசத்தி லெல்லாம் உன்னை ஆசீர்வதிப்பார் என்கிறது வேதம் (உபா 24:19,20,21).

உயிர் பிரிந்துகொண்டிருந்த ஒருவனுக்கு அவனது மனைவியைப் பராமரிக்கும் பொறுப்பைத் தானே எடுத்துக்கொள்வதாக உறுதிகூறி ஆறுதல்படுத்தினான் யோபு. அக்கணவன் யோபுவை ஆசீர்வதித்து மண் ணுடல் நீத்தான். அவ்விதவையின் இருதயத்தை யோபு திடப்படுத்தினான் (யோபு 29:13). தனித்து விடப்பட்ட அவளை வசப்படுத்த எண்ணாமல் அவளுக்கு யாவற்றையும் வசதிபண்ணிக்கொடுத்தான். மளிகைப் பொருட்களுக்காக காத்துக் காத்து அவள் கண்கள் பூத்துப் போகவில்லை (யோபு 31:9-18).

மகனின் மறைவிற்காக மருமகளைக் குற்றப்படுத்திக் கொடுமைப்படுத் தாதீர்கள், உங்கள் மகளுக்கு அப்படி நேரிட்டால்? விதவையான உங்கள் தாயையோ, மாமியாரையோ, பாட்டியையோ துன்பப்படுத்தாதீர்கள். அவர்கள் உங்களை நேசித்துப் பராமரித்த காலமுண்டு. இப்போது பிரதிபலன் செய்வது உங்கள் சிலாக்கியம். பெரும்பாலோர் தங்கள் பிள்ளைகளுடன் இருப் பதையே விரும்புகின்றனர். முதியோர் இல்லத்திற்கு அனுப்பப்படும்போது நொந்துபோகிறார்கள். இன்றையத் தலைமுறையோ அவர்களைப் பாரமாகக்

கருதுகிறது. பாட்டியம்மா வீட்டில் இருப்பது பிள்ளைகளுக்குப் பேராசீர் வாதம். சற்று ஞானமும் பொறுமையுமிருந்தால் போதும், சமாளித்துக் கொள்ளலாம்.

அவர்களுக்கு வீட்டிலும், வெளியே போகவும், நண்பரைத் தேநீர் அருந்த அழைத்து வரவும் சுதந்திரம் அளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத் துங்கள். வெளிநாட்டில் இருப்பீர்களானால் அங்கு உங்களுடன் சில நாட்கள் மகிழ்ந்திருக்கத் தருணமளியுங்கள். "விதவையானவளுக்குப் பிள்ளை களாவது பேரன் பேத்திகளாவது இருந்தால், இவர்கள் முதலாவது தங்கள் சொந்தக் குடும்பத்தை தேவபக்தியாய் விசாரித்து, பெற்றோர் செய்த நன்மைகளுக்குப் பதில் நன்மைகளைச் செய்யக் கற்றுக்கொள்ளக்கடவர்கள்; அது நன்மையும் தேவனுக்கு முன்பாகக் பிரியமுமாயிருக்கிறது... ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரி யாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" (1 தீமோ 5:4,8).

விதவையின் சொத்துக்களின் மேல் கண் வைத்து அவளைப் பராமரிப்பது சரியல்ல. பணத்திற்காகவே தங்களைப் பிள்ளைகள் பராமரிக்கின்றனர் என்றறிவது பெற்றோருக்கு எத்தனை வேதனை! விதவைகளுக்கு அநி யாயம் செய்கிறவர்களுக்கு விரோதமாகத் தீவிரமான சாட்சியாயிருப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (மல் 3:5). விதவைகளைச் சூறையாடுகிறவர்களுக்கு ஐயோ என்றார் தேவன் (ஏசா 10:1,2). விதவை களின் வீடுகளைப் பட்சிக்கிறவர்களுக்கு ஐயோ என்றார் இயேசு (மத் 23:14).

கணவன் தன் மரணத்தைக் குறித்துச் சிந்திக்குமுன்னரே ஒரு தொகையோ சொத்தோ மனைவியின் பேரில் எழுதிவைக்க வேண்டும். திடீர் மரணம் ஏற்படுங்கால் அவள் பிள்ளைகள் அல்லது உறவினரின் கையை எதிர்பார்த்து நிற்கக்கூடாது. விதவைகள் ஏமாற்றப்படுவது சகஜமாதலால் கணவன் தான் எழுதி வைத்ததை மனைவிக்குச் சொல்லி வைக்கவும் வேண்டும்.

2. சபையின் பொறுப்பு

பண்டிகையின்போது விதவைகளும் "சந்தோஷப்படத்தக்கதாக" தசமபாகங்களும் காணிக்கைகளும் கொண்டுவரப்பட வேண்டும் என்று பழைய ஏற்பாடு கூறுகிறது (உபா 14:28,29; 16:10-14). புதிய ஏற்பாட்டுச்

சபையில் உதவிக்காரர் மூலமாக விதவைகள் உதவி பெற்றனர் (அப் 6:1). சில சீஷிகளும் அவர்களுக்கு கொடுத்துதவினர் (9:36-39). தொடர்ந்து பவுல் சபை நிர்வாகத்திலேயே விதவைகளின் விசாரிப்புக்குத் தெளிவான ஆலோசனைகளைக் கூறியுள்ளான் (1 தீமோ 5:9,10). இளம் விதவைகளோ திருமணம் செய்துகொள்ளும்படியாக ஆலோசனை கூறப்பட்டனர்.

ஏழை விதவைகள் யாரிடமும் கையேந்தாதபடி சபை வருமானத்தில் அவர்கள் பராமரிக்கப்படவேண்டும். அவர்களது பிள்ளைகள் மற்றும் தேவைகளுக்குத் தனிக் கவனிப்பு அவசியம். சபையார் ஐந்து தலைமுறை களுக்கு வங்கியில் சேமித்து வைக்காமல் விதவைகளான தங்கள் உறவினருக்கு தாராளமாகக் கொடுத்துதவப் போதிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு ஆவன செய்யவேண்டும்.

3. விதவையின் பொறுப்பு

கணவனின் திடீர் மறைவு உங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும். பிரச்னைகள் புற்றிலிருந்து ஈசலைப்போல் ஒவ்வொன்றாக எழும்ப தனிமை யில் நீங்கள் திக்குமுக்காடலாம். துக்கம் உங்களைச் செயலற்றவராக்கி விடவேண்டாம். சிக்கல்களை ஒவ்வொன்றாகச் சந்தியுங்கள். எரிக்கும் பாலைவனமாம் உங்கள் எதிர்காலத்தில் தேவனையே சோலையாகக் கொள்ளுங்கள். ‘‘உத்தம விதவையாயிருந்து தனிமையாயிருக்கிறவள் தேவனிடத்தில் நம்பிக்கையுள்ளவளாய், இரவும் பகலும் வேண்டுதல்களிலும் ஜெபங்களிலும் நிலைத்திருப்பாள்’’ (1 தீமோ 5:5).

அதுவே அன்னாள் செய்தது. ‘‘ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தைவிட்டு நீங்காமலும், இரவும் பகலும் உபவாசித்து ஜெபம்பண்ணி ஆராதனை செய்துகொண்டிருந்தாள்’’ (லூக் 2:36–38). ஏறத்தாழ ஐம்பது வருட தனிமை! இருப்பினும் முறுமுறுப்பில்லை. அவள் கர்த்தரைப் புகழ்ந்தாளாம் (வச 38). தேவ ஈவாகிய வாழ்வைச் சிலாக்கியமாய்ப் பாராட்டி அதைச் சீராகப் பயன்படுத்துவது உங்கள் கரத்தில்தான் இருக்கிறது. எதிர்காலத்தைத் திட்டமிடுங்கள். சுதந்திரமாய் வாழ வசதியிருந்தால் நல்லது. கணவன் அரசாங்க ஊழியரானால் அர சாங்கமே உங்களுக்கு வேலை வாய்ப்பளிக்கலாம். பிள்ளைகள் அன்போடு அழைத்தால் ஏற்றுக்கொள்ளுங்கள், கொஞ்சம் ஒத்துப்போக வேண்டி யிருக்கும். இருப்பினும் தனிமையைத் தவிர்க்கலாமே. பிள்ளைகளுக்கு உதவியாகவும் ஆசீர்வாதமாகவும் இருங்கள். ஒவ்வொரு பிள்ளையோடும் சில நாட்கள் தங்கினால் உறவு சுமுகமாயிருக்கும். கடினமான வாழ்க்கை தான். ஆனாலும் ‘‘விதவைகள் என்னை நம்புவார்களாக’’ என கர்த்தர் சொல்லுகிறார் (எரே 49:11).

மகனையோ மகளையோ ஒட்டிக்கொள்ளாதீர்கள். உங்கள் வயதுக்கொத்தவருடன் கலந்து பழகுங்கள். அடுத்தவேளை உணவைக் குறித்து கவலைப்படாமல் சற்று உட்கார்ந்து வாசிக்கவோ எழுதவோ முடியவில்லையே என நீங்கள் கவலைப்பட்ட நாட்களுண்டு. இந்த நாட்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

சோம்பலைக் குறித்துப் பவுல் விதவைகளை எச்சரிக்கிறார் (1 தீமோ 5:13). துன்பம் சிலரை அரித்துவிடுகிறது; மற்றும் சிலரை உந்தித்தள்ளுகிறது. விதவையான என் மாமியார் என் கணவன் மீது தீராத பாசம் வைத்திருந்தபடியால் ஐந்து ஆண்டுகள் எதையோ பறிகொடுத்ததைப் போலிருந்தார்கள். ஒருநாள் ஒரு பையைத் தோளில் போட்டுக்கொண்டு மிஷனரி ஊழியத்திற்குக் காணிக்கை சேர்க்கப் புறப்பட்டுவிட்டார்கள். அவர்கள் வாழ்வில் நறுமணத்தென்றல் வீசத் துவங்கியது. மெல்லவே சந்தித்த குடும்பங்களுக்கு ஆலோசனை கூறத் துவங்கினார்கள். பின்பு அருகிலுள்ள கிராமத்திற்குச் செல்லத் துணிந்தார்கள். அடுத்த ஐந்து ஆண்டுகளில் அங்கே ஒரு சிறு குழு உருவானது. இறுதியில் தொற்காளைப்போல் மரித்தார்கள்—உயிர்த்தெழத்தான் செய்ய முடியவில்லை. துக்கித்தோர் கூட்டம் அப்படியிருந்தது. அக்கிராமத்து வாலிபர் மூவர் இப்போது எங்களோடு மிஷனரிகளாயிருக்கிறார்கள். "விசாலமாக்கு... விரிவாகட்டும்... தடைசெய்யாதே... நீளமாக்கு... உறுதிப்படுத்து... பெருகுவாய்" (ஏசா 54:2,3). சோம்பலினாலும் தயக்கத்தினாலும் இவ்வித ஆசிகளை இழந்துபோகவேண்டாம்.

எதிர்காலத்திற்காக மிச்சம்பிடித்து சேர்த்து வைப்பது இயல்புதான். ஆனால் தேவனது நியமங்களோ மாறானவை. இரத்தினக் கம்பளம் விரித்த ஒரு வீட்டிற்கு அவர் எலியாவை அனுப்பாமல், கடைசி அடையைத் தானும் மகனும் சாப்பிட்டு செத்துக்போகவிருந்த சீதோன் தேசத்து விதவையினிடத்திற்கே அனுப்பினார். அவள் தன் வறுமையிலும் கொடுத்து எண்ணெயும் மாவும் ஆசீர்வதிக்கப் பெற்றாள். இஸ்ரவேலின் விதவைகளுக்கு எத்தனை பெரும் இழப்பு! (லூக் 4:24-26). விதவைகளைக்குறித்து எழுதுகையில் பவுல், "சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்" என்கிறான் (1 தீமோ 5:6). இங்கோ விதவையின் மகன் செத்தும் உயிரோடிருக்கும் விந்தை (1 இரா 17:17-23).

கவலை, கண்ணீர், பயம், பாதுகாப்பின்மை, ஏமாற்றம், சோர்பு, விரக்தி இவையே அனுதின அப்பமாகிவிட்டதா? கர்த்தர் சொல்லுகிறார், "பயப்படாதே... உன் சிருஷ்டிகரே உன் நாயகர்... கைவிடப்பட்டு மனம் நொந்தவளான பெண்ணைப் போல்... இருக்கிற உன்னைக் கர்த்தர் அழைத்தார்...

உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக்கொள்வேன்... மலைகள் விலகினாலும் பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும் என் கிருபை உன்னைவிட்டு விலகாது... சிறுமைப்பட்டவளே, பெருங்காற்றில் அடிபட்டவளே, தேற்ற ரற்றவளே, இதோ, நான் உன் கல்லுகளைப் பிரகாசிக்கும்படி வைத்து, நீலரத்தினங்களை உன் அஸ்திபாரமாக்கி... பளிங்கும்... மாணிக்கக் கற்களும்... உச்சிதமான கற்களுமாக்குவேன்'' (ஏசா 54:4-12). ஏசாயா 54 உங்களுக்காகவே எழுதப்பட்டது. அதைத் திரும்பத் திரும்ப வாசியுங்கள். அவர் உங்களைப் பாதுகாக்கிறார் (வச 14,15). உங்கள் நியாயத்தை விசாரிக்கிறார் (சங் 68:5). உங்கள் எல்லையை நிலைப்படுத்துவார் (நீதி 15:25). அவர் உங்கள்மேல் மனதுருகுகிறபடியால் உங்களுக்காக அற்புதங்களைச் செய்வார் (2 இரா 4:1-7; லூக் 7:13).

''உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்'' (ஏசா 54:13). ராஜாவாகிய சாலொமோன் ஈராம் என்பவனை ஆலயத்தின் வேலைக்காக தீருவிலிருந்து அழைப்பித்தான். இவன் ஒரு கைம்பெண்ணின் மகன். இவன் சகலவித வெண்கல வேலையையும் செய்யத்தக்க யுக்தியும் அறிவும் உள்ளவனாயிருந்தான் (1 இரா 7:13,14). பாக்யவதி அவள்!

சபையிலும் சமுதாயத்திலும் இளம் விதவையரின் நிலை கடினம்தான். மனைவியர் சந்தேகிப்பர். ஆண்கள் வலைவிரிப்பர். சாதாரணமாக ஆண் களிடத்தில் பழகினாலே பார்ப்போர் நெற்றியைச் சுருக்குவர். ஆகவே குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி நீங்கள் அதிகக் கவனமாய் நடந்துகொள்ளவேண்டும். வீடுவீடாய்த் திரிகிறவர்களாகவும், அலப்பு கிறவர்களாகவும், வீணலுவற்காரிகளாகவும், தகாதகாரியங்களைப் பேசுகிறவர்களாயும் இருக்கக்கூடாது (1 தீமோ 5:7,13).

தனிமை பயித்தியம்பிடிக்கச் செய்வதுபோலிருக்குமானால், ஒரு மனிதனின் துணை தேவையென எண்ணுவீர்களானால், பிள்ளைகளுக்குத் தகப்பன் தேவையானால், வீட்டில் உதவியாகவும் பாதுகாவலாகவும் ஒருவர் அவசியமானால், இல்லாவிடில் உங்களை நேசித்து உங்கள் பிள்ளைகளைப் பராமரிக்கக்கூடிய ஒருவரை நேசிப்பீர்களானால், எவ்விதத் தயக்கமுமின்றி அவரை மணந்துகொள்ளலாம் (1 கொரி 7:9; ரோ 7:2,3). அதைக் குறித்து குற்றவுணர்வு அடையத் தேவையில்லை. இறந்துபோன உங்கள் கணவ னுக்கான உங்கள் பாசத்தையும் உத்தமத்தையும் அது எவ்விதத்திலும் குறைக்காது. மறுபடி திருமணம் செய்துகொண்டாலும் நீங்கள் கற்புள்ள வர்கள்தான். சமுதாயமோ உங்கள் குடும்பமோ உங்களைக் குறைவாக

எண்ணலாம். அதைக் குறித்து அக்கறை என்ன? சாமி வரங்கொடுத்தாலும் பூசாரி வரங்கொடுக்கமாட்டானாம். வேதமே உத்தரவளித்தாலும் ஒத்துக்கொள்ளாத கட்டுப்பாடானதோர் சமுதாயம் நமக்குச் சமாதி கட்டி விட்டது.

இறந்துபோன தன் கணவனை கற்புள்ளவளாகச் சந்திக்க வேண்டும் போன்ற கோணலான கருத்துக்கள் இந்தியாவில் பலவுண்டு. மறுமணம் செய்தால் மோட்சத்தில் இரு கணவரைச் சந்திக்க வேண்டுமே எனச் சிலர் திகைக்கின்றனர். நீங்கள் வேதவாக்கியங்களை அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள். பரலோகத்தில் நாம் தேவதூதரைப் போலிருப்போம் (மத் 22:29,30). கொரிந்தியருக்கெழுதின முதலாம் நிருபத்தில் விதவைகள் விவாகமின்றி இருப்பது நல்லது என்று எழுதிய பவுல் (1 கொரி 7:8,40), வாழ்வின் அனுபவங்களைக் கண்டபிறகு அவர்கள் விவாகம் பண்ணுவதே நல்லது என வலியுறுத்துகிறார். “ஆகையால் இளவயதுள்ள விதவைகள் விவாகம் பண்ணவும், பிள்ளைகளைப் பெறவும், வீட்டை நடத்தவும், விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்கவும் வேண்டும்” என்கிறார் (1 தீமோ 5:14). அறுபது வயதுக்குக் குறையாதவர்களைத்தான் பவுல் முதிர் வயதானவர்களாகக் கணக்கிடுகிறார் என்பதைக் கவனிக்க (வச 9). “மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்குங் காலமளவும் பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள்; தன் புருஷன் மரித்த பின்பு தனக்கு இஷ்டமானவனாயும் கர்த்தருக்குட்பட்டவனாயுமிருக்கிற எவனையாகிலும் விவாகம் பண்ணிக்கொள்ள விடுதலையாயிருக்கிறாள்” (1 கொரி 7:39). ஆகவே நல்ல உடையணிந்து அழகாக இருங்கள். உங்கள் தோற்றத்தில் அக்கறையின்றி இருக்கக் கூடாது.

நமது தாயகத்தில் அமைதியாகக் கண்ணீர் வடிக்கும் கணக்கற்றோருக்கு நகோமிகள் தேவை. வளர்ந்த பிள்ளைகள் இக்காரியத்தில் தங்கள் தாய்க்கு ஒத்தாசை புரியவேண்டும். சமுதாயத்திற்கு அஞ்சியே பலர் மறுமணம் செய்துகொள்வதில்லை. சுபதினங்களில் எல்லாருக்கும் பூ கொடுக்கும்போது நான் ஒரு விதவைக்குப் பூத்தட்டை நீட்டிவிட்டால் அருகிலிருப்பவர் ‘ச்சு, ச்சு’ என்பர். அவளும் பாவம் கையை முடக்கிக் கொள்வாள். என் குடல் கொதிக்கும். நாம் பூ வைக்கும்போது அவர்கள் வைக்கக்கூடாதா? என்ன அநியாயம்! விதவை என்ற சொல்லைச் சொல்லி விட்டாலே சிலர் அபசகுணம் என்பர். அவர்கள் புதுமணத் தம்பதியரை வரவேற்க விடமாட்டார்கள். ஏன், என்ன பாவம் செய்துவிட்டார்கள்? அவர்கள் என்ன தள்ளப்பட்டவர்களா? நாம் உண்மையாக விக்கிரகங்களை விட்டு விட்டு ஜீவனுள்ள தேவனிடத்தில் திரும்பிவிட்டோமா எனச் சந்தேகப்

படுகிறேன். மண்ணாங்கட்டி பராம்பரியங்களை உடைத்தெறிவோம். பூ பரிமாறுகையில் அவர்களை ஒதுக்காதீர். திருமணங்களில் அன்னாரை முன்வரிசையில் இறுத்துங்கள். அவர்கள் தம்பதிகளை ஆசீர்வதிக்க கோறுங்கள். தேவனது உள்ளம் குளிரட்டும்.

சிறுவர் திருமணம் இன்னும் இந்தியாவில் நடந்துகொண்டுதான் இருக்கிறது. ஆறு வயதோ பதினாறு வயதோ நிரம்பிய மாப்பிள்ளை ஏதோ மரித்துவிட்டால் அச்சிறுமி வாழ்நாளெல்லாம் கைம்பெண்ணாகவே இருக்க வேண்டும். கொடுமை! சிலரைப் பூட்டி வைக்கின்றனர். சிலர் வேசிகளாகின்றனர். குற்றவாளி யார்? கட்டப்பட்ட ஆயிரங்களைக் காண மாட்டோமென்று கண்களை இறுக மூடிக்கொண்டிருக்கிறோமே, கிறிஸ்தவர்களாகிய நாம்தான். தவிக்கும் ஓர் ஆத்துமாவைவிட நமக்கு வயிறுதான் முக்கியம்.

“விதவையின் வழக்கை விசாரியுங்கள்” (ஏசா 1:17). அவர்களுக்குப் பக்கபலமாயிருங்கள். விதவையாகிய பண்டித இராமாபாயின் சிறகடியில் நூற்றுக்கணக்கான கொடுமைப்படுத்தப்பட்ட விதவைகள் தஞ்சம் புகுந்து தளிர்த்தனர். உடன்கட்டை ஏறுதலுக்கு எதிர்பு தெரிவியுங்கள். வில்லியம் கேரி போன்றவர்களால் அழிக்கப்பட்ட இக்கொடிய வலுசர்ப்பம் மறுபடித் தலையைத் தூக்குகிறது. ஊமையான கிறிஸ்தவன் மண்ணுக்குப் பாரம். தீமையைக் குறித்து ஒன்றும் செய்யாத விசுவாசி இருந்தாலும் ஒன்றுதான் இல்லாவிட்டாலும் ஒன்றுதான். விதவைகளின் தேவனை அகமலரச் செய்யக் கூடுமானதெல்லாம் செய்வோம்.

பந்தலின்றித் துவண்டு நின்ற முல்லைக் கொடியைக் கண்டு மனம் நொந்து அது படருவதற்காகத் தன் தேரை நிறுத்திவிட்டுத் தன் அரண்மனைக்கு நடந்து சென்றானாம் பாரி வள்ளல். “முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி” என மார்தட்டும் கலாச்சாரத்தைச் சேர்ந்த நாம் இன்று நம்மைச் சுற்றித் துவண்டு நிற்கும் முல்லைக் கொடிகளுக்கு என்ன செய்கிறோம்?

10

பெண்கள், புளித்தமாவு, பரலோகம்!

"பரலோகராஜ்யம் புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு பெண் எடுத்து, முழுவதும் புளிக்கும் வரைக்கும் மூன்றுபடி மாவிலே அடக்கி வைத்தாள்" (மத் 13:33).

கடந்து உருண்டோடிவிட்ட இரண்டாயிரமாண்டுகளில்கூட, மிஷனரி நற்செய்திப் பணியைக் குறித்துப் பேசும்போது இயேசு பெண்களையும் மனதிற்கொண்டே பேசினார் என்பதற்கு இவ்வுவமையே அத்தாட்சி. அற்பமாய்க் காணப்படும் சொற்பம் முக்கியமான முழுமையையும் பாதிக்கும் என்பதே இதன் மையப்பொருள். இதுவே பெண்களின் பலம்.

பெண்ணானவள் தனது சாதாரண மறைவான வேலையினால் முழுமையையும் ருசிகரமான மாவாக்கிவிடுகிறாள். அடுக்களையில் அவள் அடக்கி வைத்த புளித்தமாவின் அணு இனி அடையாளம் தெரியாது. ஆனாலும் அது உள்ளே கோடிக் கோடியாய்ப் பெருகிக் கொண்டிருக்கிறது. காலையில் முழுமையும் புளித்து மூடியைத் தூக்கி நிற்கும். தேவராஜ்யத்தில் பொழுது புலரும்போது பெண்கள் தங்கள் மடமையில் ஒரு மூலையில் அவருக்காகச் செய்தது மறைந்திருக்காது.

அற்பமாய்க் காணப்படும் தங்கள் சின்னஞ்சிறு சேவைகளினால் பெண்கள் எவ்வாறு உலகைப் பாதிக்கலாம் என்று பார்ப்போம்.

ஒற்றைக் கழுதை சக்தி (One Donkey Power) (மத் 11:1-17)

இயேசு மகிமையாக எருசலேமில் பிரவேசிக்க, இருந்திருந்தும் ஒரு பெண் கழுதையையும் அதன் குட்டியையுமா தெரிந்தெடுக்கவேண்டும்?

அதுவும் கட்டப்பட்ட ஒன்று. ஆனாலும் அவை ஆண்டவருக்கு வேண்டும்! பட்டணத்துக் கழுதைகூட அல்ல, பட்டிக்காட்டுக் கழுதை!

இன்று ஆண்டவர், தங்கள் வீட்டலுவல்களில் கட்டப்பட்டிருக்கும் பெண் களைக் கொண்டு பலரைத் தொட்டு, அவர்கள் மூலமாக உலகைச் சந்திக் கிறார். "இதோ, உன் ராஜா சாந்தகுணமுள்ளவராய், கழுதையின்மேலும் கழுதைக் குட்டியாகிய மறியின் மேலும் ஏறிக்கொண்டு, உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள்" (வச 4). நற்செய்தியைப் பறைசாற்ற ஆண்டவரோடு செல்வதிதுவே.

கழுதைக்கும் குட்டிக்கும் தலைகால் புரியவில்லை. ஆண்டவரைச் சுமக்க வேண்டுமா? இதுவரை யாரையுமே சுமந்து பழக்கமில்லையே. சீடரோ கோலாகல ஊர்வலத்திற்கு ஆயத்தப்படுத்த கழுதைகளின் மேல் தங்கள் மேலங்கிகளை விரிக்கிறார்கள். மிஷனரி நற்செய்திப் பணிக்குப் பெண் களைப் பயிற்றுவிப்பது வீணல்ல.

ஆஹா! ஆரவார வரவேற்பு! கழுதைகள் நடக்க தங்கள் துணிமணி களைத் திரள்கூட்டத்தினர் பரப்புகின்றனர். சிலர் கிளைகளைத் தறித்து முட்டாள் கழுதைகளுக்குக் கம்பளம் பாவுகின்றனர். புதுப்பணியின் உற்சாகத்துடன் ஆண்டவரைக் கொண்டுவந்து சேர்க்கின்றன கழுதைகள்.

அவ்வளவுதான். அதோடு கழுதைகளின் கதி அதோகதிதான். அவை களைக் கேட்பாரில்லை. எல்லாரும் தாவீதின் குமாரனையே நோக்கிப் புகழ்பாடுகின்றனர். அவர் ஆலயத்திற்குள் சென்றதும் சீடர் தம் மேலங்கி களை எடுத்துக்கொண்டு கழுதைகளை வீட்டை நோக்கி விரட்டிவிட்டி ருப்பர். பரலோகத்தில் பெறப்போகும் தங்கள் மிகுதியான பலனை எண்ணி அவையும் கழுதைப் பாடல் ஒன்றைப் பாடிக் கொண்டே சென்றிருக்கும்.

பெரியவர் மட்டுமா? கழுதைகள் இயேசுவைச் சுமந்து வந்ததால் ஆர்ப்பரிக்கும் தெருப்பிள்ளைகள் பெருங்கூட்டமொன்று ஆலயம் நுழைகின்றது (மத் 21:15). நாளைய உலகைப் பாதிக்கப்போகும் சிறுவர் சேவையை சிரமேற்கொண்டு செய்யும் மங்கையர் எத்தனையோ. சேரி, கிராம, ஆலய ஞாயிறுபள்ளி மாணவ மாணவியர் இன்று இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் மிஷனரிகளாக நுழைந்து முழுவதையும் புளிக்க வைத்துக்கொண்டிருக்கின்றனர்.

உலகம் பின்புத்தி என்று பகடிபண்ணட்டும். தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத்தானே தெரிந்துகொண்டார் (1 கொரி 1:27).

இரட்டைக்காசு சக்தி (Two Penny Power) (லூக் 21:1-4)

ஒரு ஏழை விதவைக்கு இரண்டு காசுகள் இருந்தன. வட்டிக்குக் கொடுத்ததின் வருமானமல்ல அது. முதலே அவ்வளவுதான். அவள் வாழ்வே அதில்தான் என்றால் மிகையாகாது. தன் வறுமையிலிருந்து தன் வாழ்வுக்கு உண்டாயிருந்ததையெல்லாம் போட்டுவிட்டதினால் உலகில் இன்னும் யாரும் எட்டாத சிகரத்தை எட்டிவிட்டாள். பணக்காரர், ஏன் செல்வந்தரான விதவைகள்கூட, தங்கள் எல்லாவற்றையும் கொடுத்திருக்கின்றனர். வாட்டசாட்டமான வாலிபர் தங்கள் வாழ்வை அளித்துள்ளனர். ஆனால் இன்னொரு ஏழை விதவை கொடுத்ததில்லை. கொடுப்பதில் பரிசுத்த போட்டியிட்டு இவளைத் தோற்கடிக்கப் பார்ப்போமா ?

இயேசு ஏன் அவளது ஈகையை மெச்சிக்கொண்டார் ? முதலாவதாக, அவரது இதய வீணையை மீட்டியது அவள் கொடுத்ததல்ல, அவள் தனக்காக வைத்துக்கொண்டது. அவளது தியாகக் காணிக்கை அவளுக்குப் பண நெருக்கடியை உண்டாக்கி, வாழ்வைப் பாதித்து, பிள்ளைகளை முகங் கோணச் செய்து, அவளையே தேவகரங்களில் விழும்படிச் செய்தது. செல்வந்தர் தங்கள் உல்லாச வாழ்வைப் பாதிக்காதபடி பகுதியை மட்டும் கொடுத்தனர்.

இரண்டாவதாக, இயேசு அவளது அர்ப்பணிப்பைக் கண்டார். சுவையாக லூக்கா 20இன் கடைசி வசனம், வசதியாக வீடுகளில் வீற்று வேதபாரகரை தங்களுக்கு சேவை புரிய வீட்டிற்கு வருந்தியழைத்துக் கெட்டுப்போன விதவைகளைக் குறித்துப் பேசுகிறது. இவளோ தேவனை ஆராதிக்க ஆலயத்திற்குச் சென்றாள். அலங்கார ஆலயம், தடபுடல் பண்டிகைகள், நீண்ட அங்கியில் வேதபாரகர், அரண்மனைவாசியான பிரதான ஆசாரியன் (மத் 26:58). இவையெல்லாவற்றையும் கண்டும் தேவனுக்குக் கொடுக்கும் நிச்சயத்தோடு காணிக்கைப் பெட்டியில் காசைப் போட்டாள்.

அவளது முன்மாதிரி பணக்காரரையும் ஏழைகளையும் உருமாற்றியிருக்கிறது. கொஞ்சம் புளித்தமாவுதான். ஆனால் முழுவதையும் மாற்றுகிறதே. தேவனுக்கு எதுவுமே அற்பமில்லையென்று வறியோருக்கும், அவருக்கு எதுவுமே மிகையல்லவென்று செல்வந்தருக்கும் கற்பித்துவிட்டது. சிறியவரின் பெருமையையும், பெரியவரின் சிறுமையையும், செல்வந்தரின் வறுமையையும், வறியவரின் செல்வந்தத்தையும் (யாக் 2:5) உலகிற் அம்பலப்படுத்திவிட்டது அது.

குலுங்கிய யூதாசின் பணப்பை அவனது அங்கியில்தான் இருக்க முடிந்தது. உடைந்த பரிமளக் குப்பியோ வீட்டை நிறைத்தது. அதுவே

புளித்தமாவின் சக்தி. ஆசரிப்புக் கூடாரத்தை அலங்கரிக்க பெண்கள் பொன்னாபரணங்களைக் கொண்டுவந்தனர் (யாத் 35:22). எட்டி பழுத் தென்ன, ஈயாதோர் இருந்தென்ன? நமக்காக எத்தனை அதிகமாய்ச் செலவழிக்கிறோமோ அத்தனைக் குறைவாகத்தான் மாபெரும் உலக நற்செய்திப் பணிக்கு மிஞ்சும் என்பதை தேவன் நமக்கு உணர்த்துவாராக. அன்னை தெரசாவின் உடமை யாவும் ஒரு பெட்டிக்குள்தானாம்! விண்ணை நோக்கி பறக்கும் நாளில் மண்ணில் நாம் விட்டுச் செல்லவேண்டியது எவ்வளவு? எவ்வளவு குறைவாய் இங்கே விட்டுச் செல்கிறோமோ அவ் வளவு நிறைவாய் அங்கிருப்போம்.

"பிரபுக்கள் அநேகரில்லை... இழிவானவைகளைத் தேவன் தெரிந்து கொண்டார்" (1 கொரி 1:28).

ஒற்றை விளக்குச் சக்தி (One Candle Power) **(லூக் 15:8-10)**

"அன்றியும், ஒரு பெண் பத்து வெள்ளிக்காசை உடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு காணாமற்போனால், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி அதைக் கண்டுபிடிக்கிற வரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடாமலிருப்பாளோ? கண்டுபிடித்தபின்பு, தன் சிநேகிதிகளையும் அயல் வீட்டுக்காரிகளையும் கூட வரவழைத்து காணாமற்போன வெள்ளிக்காசைக் கண்டுபிடித்தேன், என்னோடேகூடச் சந்தோஷப்படுங்கள் என்பாள் அல் லவா? அதுபோல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாக சந்தோஷமுண்டாயிருக்கிறது" என்றார் இயேசு.

தனது காசுமாலையில் ஜொலித்த ஒன்பது காசுக்களைக் குறித்து களிகூற அவளுக்கு மனமில்லை. ஒன்றில்லாமல் அதைப் பகட்டாக அணியமுடியாதே. ஒருவர் கெட்டுப்போன குடும்பத்திற்குக் கவுரவம் ஏது? பொழுது புலர அவள் காத்திருக்கவில்லை. மாலை உடல்வலி இருப்பினும் இளைப்பாற மனமில்லை. விளக்கைக் கொளுத்தினாள். வீட்டைக் கூட்டி னாள். மடிந்து குனிந்து மேசை அலமாராக்கள் அடியிலெல்லாம் "ஜாக்கிர தையாகத்" தேடினாள்.

தேவன் கொடுத்த ஏதோ புத்தியைக் கொண்டு பெத்த மகனைப் பித்தாய் தேடிய தாயன்பு இது. வேத அறிவு சொற்பமே. பிள்ளை வளர்ப்பு புத்தகங்களைப் படித்திலாள். கல்லாதவளோ என்னவோ. ஆனால் சவாலைச் சந்திக்கச் சளைத்தவளல்ல. இருப்பது ஒரு விளக்கு, ஒரு விளக்குமாறு! வல்லவளுக்கு புல்லும் ஆயுதமே. போதுமென்று பணியில் இறங்கினாள்.

ஒருவேளை அவன் காது கேட்க வேத வசனங்களை ஓதிக்கொண்டே யிருந்திருப்பாள், நற்செய்திக் கூட்டங்களுக்கெல்லாம் இழுத்துச் சென்றிருப்பாள், கண்ணீரைத் தாரையாய் ஜெபத்தில் சொரிந்திருப்பாள், தெரிந்த பிரசங்கிகளுக்கெல்லாம் எழுதியிருப்பாள், பிள்ளை வளர்ப்பில் செய்த தவற்றிற்கெல்லாம் பரிகாரம் செய்திருப்பாள். விடியட்டும் பார்க்கலாமே என்று சொல்லியிருப்பர் சிலர். பலர், "அது தறுதலை, திரும்ப வராது" என்றிருப்பர். அவளோ விட்டாளில்லை. ஒரு விளக்கு வெளிச்சத்தில் உடுப்புப் பிடியாய்ப் பிடித்து காணாமற்போன அவனைக் கண்டுபிடித்து விட்டாள்.

நற்செய்திப்பணியை நாசுக்காகச் செய்யத் தெரியாத தாய்மாருண்டு. சாட்சியைச் சவாலாகச் சொல்லவும் தெரியாது. ஆனாலும் தங்கள் அகல் விளக்குச் சக்தியினால் அயலகத்தாரை அகமகிழச்செய்து பரலோகத் தூதரையும் பரவசமடையச் செய்வர். புளித்தமாவு பரலோகத்தை எட்டும் விதம் இதுவே.

அன்னாள் ஒரு மகவுக்காக அழுதாள். அவனைப் பெற்றவுடன் ஆண்டவருக்கு அர்ப்பணித்தாள். சாமுவேலென்னும் கொஞ்சம் புளித்தமா இஸ்ரவேலனைத்தையும் புளிக்கச் செய்தது (1 சாமு 3:20). தாய்மாரனைவரும் ஒரு மகவையாவது தேவனுக்கீந்தால் நாளை ஒரு மிஷனரி சேனையே எழும்பிவிடுமே. இயேசுவுக்குக் கழுதைக் குட்டியும் தேவை. பிள்ளைகளைப் பேய்களுக்கு படைக்கும் இவ்வுலகில் தேவனுக்கு பிள்ளைகளைக் கொடுக்கும் தாய்மார் இல்லையோ?

லோவிசாள் பாட்டியம்மா தன் விசுவாசத்தைத் தீமோத்தேயுவிற்குக் கடத்தினார்கள். வம்சவரிசைகள் வழியே பாய்ந்தோடி உலகைப் பாதிக்கும் ஒரு தீமோத்தேயுவைப் பிறப்பிக்க வல்லது ஒரு பாட்டியம்மாவின் சக்தி. ஆம், தேவன் உலகில் பலவீனமானவைகளையே தெரிந்துகொண்டார்.

ஒற்றைப் பூஜ்ய சக்தி (One Zero Power) (1 கொரி 1:28)

"இல்லாதவைகளை தேவன் தெரிந்துகொண்டார்." பூஜ்யம் தன்னில் தானே ஒன்றுமில்லாவிடினும் மற்றெல்லா இலக்கங்களின் சக்தியையும் பெருக்கவல்லது.

நற்செய்தியுலகில் நட்சத்திரங்களான பெண்கள் உண்டு. ஆனால் மின்னாத ஒரு கூட்டமும் உண்டு. இவர்கள் சமைப்பர், சுத்தம் செய்வர், உதவுவர். தேவனானவர் சபையிலே "உதவிகளையும்" ஏற்படுத்தினார் (1 கொரி 12:28).

களைத்த இயேசுவுக்குச் சுவையாகச் சமைத்துப் பரிமாறின மார்த்தாளை நினைத்துப் பாருங்கள். பசியோடு இயேசு அத்திப்பழங்களைத் தேடினபோது மார்த்தாளையும் அவளது ருசிகரமான பதார்த்தங்களையும் நினைவு கூர்ந்திருப்பார். வெறுமனே ஜெபித்து ஆயாசமாக இளைப்பாறிக்கொண்டிருந்த பேதுருவுக்காக சமைத்துக்கொண்டிருந்த பெண்களைப் பாருங்கள் (அப் 10:9,10). தேவராஜ்ய சக்தியை தங்கள் விருந்தோம்பல் ஊழியத்தினால் பன்மடங்காகப் பெருகப்பண்ணும் இப்படிப்பட்ட பூஜ்யங்கள் பலருண்டு. பரிசுத்தவான்களின் பாதங்களைக் கழுவி நற்செய்திப் பயணத்தில் அவர்களைப் பராமரிக்கும் பூஜ்யங்கள் பலர் தேவை. பவுலைப் பாரமாகக் கருதாத பிரிஸ்கில்லாள்கள் தேவை, தேவை (அப் 18:1-4). இப்படிப்பட்ட "ஊழியரே" பெபேயாள், மரியாள், திரிபேனாள், திரிபோசாள், பெர்சியாள், ரூபையின் தாய் (ரோ 16). இவர்கள் நற்செய்திக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுக்கத் துணிந்தவர்கள். இந்த சிஸ்டர் இல்லாள் ஆத்துமாக்களை ஒவ்வொன்றாக ஆதாயம் செய்வாள், கொஞ்சம் பணம் வசூலித்து அனுப்புவாள், டைப் அடிப்பாள், அச்சுப் பிழையை சரி பார்ப்பாள், கூட்டங்களை ஒழுங்குபடுத்துவாள், கணக்கெழுதுவாள்..... இந்தப் பட்டியலுக்கு முடிவில்லை. நற்செய்தி நட்சத்திரங்கள் சுவிசேஷ ரயிலின் ஏ.சி. கோச்சில் குளுமையாகச் செல்கின்றனர். தங்களை வியர்க்க விறுவிறுக்க சுமந்து செல்லுவது இந்த சைபர் சக்கரங்கள்தான் என்பதை அறிவார்களோ? சற்று குனிந்து இவர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்கமூட்டுவது யாரோ?

இந்தச் சைபர்கள் செய்வது வேறென்ன? ஜெபிப்பர். இதை மிக நன்றாகச் செய்வர். பிற காரியங்களில் ஈடுபடாதிருக்க இதைச் சாக்குபோக்காக சொல்கின்றனரோ எனவும் தோன்றும். மேடை ஏறினால் நடுங்கி மயக்கமடைவர். மேடைத் தோற்றமும் கிடையாது. பயந்தாங்கொள்ளிகள். சாதனை என்பதற்கு இலக்கணமே அறியாதவர்கள். ஜெபிக்கமட்டும் செய்வர். தனியாக ஜெபிப்பர். கூடி ஜெபிப்பர். என்னதான் ஜெபிப்பாரோப்பா, மணிக்கணக்காக ஜெபிப்பர். அவர்கள் ஜெபம் என்னத்தைச் சாதித்தது எவ்வளவு சாதித்தது என்று கணக்கிடக் கம்ப்யூட்டர் இல்லாததால் யாரும் இவர்களைப் பாராட்டுவதில்லை. இந்த "இல்லாதவைகளால்" ஒவ்வொருவர் ஊழியமும் எவ்வளவு பெருகினதென்று பரலோகம் மட்டுமே கணக்கிடக் கூடும். உங்கள் ஊழியம் பன்மடங்காகப் பெருகவேண்டுமானால் இப்படிப் பல சைபர்களைக் கூட்டிக் கொள்வதே சுலபமான சுருக்கு வழி. நமது முழுமையையும் பாதிக்கும் புளித்தமா இவர்களே.

ஒற்றைப் புறா சக்தி (One Dove Power) (அப் 1:8)

பைத்தியமானவைகளையும் இழிவானவைகளையும் பலவீனமானவைகளையும் இல்லாதவைகளையும் கடவுள் எடுத்துப் பயன்படுத்தும்

இரகசியம்தான் என்ன ? ஒற்றைப் புறா சக்தி! மின்சக்தி, அணுசக்தி எனும் யுகத்தில் புறா சக்தி என்ற பேச்சிற்கு இடமேது என்கிறீர்களா ? இது ஏழு பிசாசு சக்தியையும் மிஞ்சும் விசை. "இயேசு எழுந்திருந்தபின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் தரிசனமானார். அவளிடத்திலிருந்து அவர் ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார். அவள் புறப்பட்டு.... போய்... செய்தியை அறிவித்தாள்" (மாற் 16:9,10). பெண்கள் செய்தி சொல்ல "ஓடினார்கள்" (மத் 16:8). கடந்ததை எண்ணிக் கண்ணீர் சிந்தி தாங்கள் ஒன்றுமில்லை எனக் கூனிக் குறுகிப்போகும் பெண்களுக்கு ஓர் நற்செய்தி. "அங்கே இவர்களெல்லாரும், பெண்களோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும்... ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்... அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள்" (அப் 1:14; 2:4).

பெண்களை தேவனிடத்தில் நடத்தி சபைய்யக் கட்டியதால் கொடூரன் சவுலின் கையில் சிக்கியவர்கள் இவர்கள் (அப் 9:2). முழு இரவு ஜெபம் நடத்தினர் (அப் 12); ஊழியரைப் பராமரித்தனர் (16:15); சபைக்கு வீட்டைத் திறந்தளித்தனர் (16:40); இராஜ்யத்தின் சுவிசேஷத்திற்காகக் கணவரோடு ஒன்றித்து நின்றனர் (18:26); இரத்தசாட்சிகளாக மரித்தனர் (22:4). எல்லாம் ஒற்றைப் புறா சக்தியினால். இந்த ஒற்றைப் புறா சக்தி மட்டும் இருந்தால் பெண்கள் தங்கள் புளித்தமாவினால் பரலோகத்தையே தொட்டுவிடுவர்!

ஆசிரியரது பிற நூல்கள்....

- ❒ அவள் தீர்மானங்கள்
- ❒ இயேசுவின் பின்னே
- ❒ உலகில் உத்தமி
- ❒ கண்ணீர் துடைப்போர் யார்?
- ❒ குடும்பமே குடும்பம்
- ❒ குட்டி இதயங்கள் குட்டி கதைகள் 100 Vol. I - II
- ❒ குதூகலக் கிறிஸ்தவம்
- ❒ சாத்தானுக்கு டாடா
- ❒ தெபோராளே, விழித்தெழு!
- ❒ தேவனே நான் உமதண்டையில்
- ❒ பகலில் வந்த கனா
- ❒ பசங்க... பொண்ணுங்க..
- ❒ பயனுள்ள பாத்திரம்
- ❒ 12 பொன் மாதங்கள்
- ❒ மண்ணிலே வெண்ணிலா
- ❒ முன்னேறும் கிறிஸ்தவன்
- ❒ வயது பதினாறிருக்கும்
- ❒ வாலிப உலகம்

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்

இப்புத்தகங்கள் ஆங்கிலத்திலும் பல இந்திய மொழிகளிலும் உண்டு.

Blessing Literature Centre
21/11 West Coovam River Road, Chintadripet.
Chennai - 600 002. India.
Tel : 044-28450411
blc@bymonline.org

கிறிஸ்தவ வாழ்வில் மறுமலர்ச்சி பெற
இன்றே வாசியுங்கள்...

ஆசீர்வாதம்

எழுப்புதலுக்கும் நற்செய்திப் பணிக்கும்
அர்ப்பணிக்கப்பட்ட பத்திரிகை!

உங்களை ஆசீர்வதித்து,
உங்களை உங்கள் குடும்பத்திற்கும், சபைக்கும்
நண்பருக்கும் ஆசீர்வாதமாக்கும் பத்திரிகை!

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி,
தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் வெளிவருகிறது.

நீங்கள் ஆயுள் சந்தாதாரரானால், பணம் பெற்றுக்கொண்ட நாள் முதல் நாங்கள் வெளியிடும் பத்திரிகையையும், புத்தகங்கள் யாவற்றையும் பதினைந்து ஆண்டுகட்கு இலவசமாக அனுப்பிவைப்போம்.

ஆண்டு சந்தா ரூ.100/-
ஆயுள் சந்தா ரூ. 1000/-

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி

Blessing Youth Mission
Church Colony
Vellore - 632 006.

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு
1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத,
ஒரு திருப்பணி

❑

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள்,
பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

❑

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு
ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்.

❑

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின்
குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள்,
மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

❑

300க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம்,
ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒரிசா, கர்நாடகம்,
குஜராத், கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம்,
மேற்கு வங்கம், டில்லி, தமிழகம் மற்றும் ஜார்கண்ட் ஆகிய
மாநிலங்களிலுள்ள கவனிப்பாரற்ற கிராமங்களிலும் ஆதிவாசிப்
பகுதிகளிலும்
சபைகள் நிறுவுதல்.

❑

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம்,
குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் *"ஆசீர்வாதம்"* எனும் பத்திரிகை, புத்தகங்கள்
மற்றும் ஒலி-ஒளித்தட்டுகள் வெளியிடுதல்.

❑

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும் எழுத்தறிவு கற்பித்தல்
மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்! ஆதரியுங்கள்!

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்
அஞ்சல் பை 609, வேலூர் 632 006
தொலைபேசி : 0416-2242943, 2248943
hq@bymonline.org, www.bymonline.org

நல்ல காலம் பொறக்குது, நல்ல காலம் பொறக்குது,
பெண்களுக்கு நல்ல காலம் பொறந்தேவிட்டது!
வாய்ப்பு தாருங்கள்; என்னாலும் முடியும், செய்து காட்டுகிறேன்
என்று பெண் வீடு வீடாய் ஏறிக் கதவைத் தட்டிநின்ற காலமெல்லாம் போய்,
இன்று உலகமே அவளது வீட்டு வாசலைத் தட்டிநிற்கிறது.
பெண்கள் பறக்கின்றனர். சிலர் நட்சத்திரங்களையும்
எட்டிப்பிடிக்கப் பார்க்கின்றனர். வானளாவப் பறப்பது எப்படி,
இறக்கைகள் எவை, எங்கே என இப்புத்தகம் உங்களுக்கு வழிகாட்டும்.